ஞானசம்பந்தம்

மலர் 14] ஜய ஹு மார்கழிமீ 10—1—55 [இதழ் 2

தருமபுர ஆதீனம்

ஆனந்தபரவச தேசிகர் திருக்கோயில்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

ஆனந்த பரவச தேசிகர்

சைவாகம விதிப்படி பெறும் தீட்சை மூவகைப்படும். அவை சமயம், விசேடம், நிருவாணம் என்பவை. அவற்றுள், நிருவாண (மோட்ச) தீட்சை இருவகைப்படும். ஒன்று தேகாந் தத்தில் முத்தியைப் பயக்கும் அசத்தியோ நிருவாணம். மற்றொன்று அப்பொழுதே முத்தியைப் பயக்கும் சத்தியோ நிருவாணம். (சிவஞானசித்தியார் சுபக்கம் 256 பார்க்க.)

தருமபுரத்தில் அருளரசு நடத்திய குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தாம் அணிமையில் பரிபூரணம் எய்தும் உண்மையைத் திருவருளாம் தமது ஞானக்கண்ணால் உணர்ந்து, "சிற்பரமாந் தற்பரத்துள் அழுந்தி, நீங்குந் தீங்கு அகலத், தாங்கு(ம்) ஒருமைதிரி" யாத உண்மை நிலையை எய்தத் திருவுளங்கொண்டு, தம் அடியவருள் ஒருவராயும் பரிபக்குவம் மிக்கவராயும் திகழ்ந்த ஆநந்த பரவசர்க்கு உண்மை நிலையை உணர்த்தும் சத்தியோ நிருவாண (ஞானவதி) தீட்சையைச் செய்தருளினர்கள். அப்பொழுதே ஆனந்த பரவச தேசிகர் சச்சிதாநந்த சொருபராயினர். அவரது திருக்கோயிலின் தோற்றமே முற்பக்கத்தில் இருக்கும் படம்.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

பொருளடக்கம்

		பக்கம்
தலையங்கம்		
1 மார்கழி நீராடல்	...	க
2 பொங்கலோ பொங்கல்	...	ச
சாத்திரமும் தோத்திரமும்		
திருவெம்பாவை	...	1
ஆது என்னும் சொல்லின் ஆராய்ச்சி	...	5
பாவையெம்பாவை	...	13
திருப்பள்ளியெழுச்சி	...	17
வடமொழிக் கருவூலம்		
பூலோக விமர்சனம்	...	19
இலக்கியம்		
தைந்நீராடல்	....	24
கந்தபுராணக் கவிச் சித்திரம்	...	33
அறிவியல்		
அறிவியலும் வாழ்வும்	...	38
வாழ்வியல்		
அம்மா அப்பா	...	41
வரலாறு—கலை		
சில சிவதலக் குறிப்பு	...	46
கதைப் பகுதி		
மாசில் வீணை	...	48
மகளிர் பகுதி		
திருவாதிரை ஒருவாய்க்களி	...	54
பாவை நோன்பு	...	57

சிறுவர் பகுதி

மாயப்பேய் ... 63

நமது செய்திகள்

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விஜயம் ... 65

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட ஏழாவது ஆண்டு விழா ... 67

திருவெம்பாவை மாநாடுகள் ... 71

ஆதீன சமயப் பிரசாரம் ... 75

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம் ... 78

திருச்சி மௌனமடம் பெரியபுராண விரிவுரை 83

லக்ஷார்ச்சனைகள் ... 88

மார்கழிமாதத்தில் தலயாத்திரை ... 89

காஷ்மீர் மன்னர் வருகை ... 91

நமது அஞ்சற்பெட்டி

கடிதங்கள் ... 93

மதிப்புரை ... 94

வருங்காலம்

14—1—55 முதல் *12—2—55* வரை ... 95

ஞானவரண விளக்கம் 221-224

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 14 } ஜயஞூ மார்கழிமீ 10—1—55 { இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்.

மார்கழி நீராடல்

நீராடுதல் தமிழ்மக்களின் நீண்டநாளைய இன்ப விளையாட்டுக்களுள் ஒன்று. புதுநீராடல், ஐப்பசியிற் காவிரியாடல், மார்கழி தையில் பனிநீராடல், மாசியிற் கடலாடல் முதலியன வழக்கத்திலிருந்துவருகின்றன. தமிழகம் வெப்பம் மிகுந்த நாடாதலால் குளிர்ந்த நீராட்டத்தில் தமிழ் மக்கள் பெரு விருப்பங் கொண்டது இயற்கையே. இவற்றுள் மார்கழி நீராடலைப்பற்றிச் சிறிது சிந்திப்போம்.

உடல் வலிவும், நரம்புகள் சுறுசுறுப்பும், குருதி ஓட்டமும், மனத்தெளிவும் வைகறையில் நீராடுவதால் உண்டாகும் நன்மைகளாகும். பழங்காலத்தில் மார்கழியிலும், தையிலும் இந்நீராடல் நிகழ்ந்துவந்திருக்கிறது. ஆடவர் மகளிர் இருபாலார்க்கும் நீராடல் பொதுவாயினும் மணமாகாத கன்னிப்

பெண்கள் இந்நீராடலோடு ஒரு நோன்பையும் நோற்று வந்தனர். பௌத்த, சமண, வைணவ, சைவ சமய நூல்கள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றது இந்நிகழ்ச்சி. உடல் குழைய - மனந்தெளிய நீராடிய பெண்கள் தங்கட்கு நல்ல கணவன் வாய்க்கவேண்டுமென்று நீர்த்துறையில் மணலால் பாவை நிருமித்து கௌரிதேவியை அதில் எழுந்தருளச் செய்து வழிபாடியற்றி வேண்டிக்கொண்டனர். பின்னர் உலகம் செழிக்கவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்தனர்.

உருக்மிணிதேவி, கண்ணனைத் தன் கணவனாகப் பெற வேண்டுமென்று பார்வதிதேவியை வேண்டிக்கொண்ட நோன்பு கௌரிநோன்பு என்று பாகவதம் குறிக்கின்றது. ஆனால் ஆண்டாளம்மையார் திருப்பாவை, கண்ணனைத் தலைவனாக அடையவேண்டுமென்று கண்ணனையே துதிக்கும் முறையில் அமைந்துள்ளது. திருவெம்பாவைப் பாடல்களோ பராசக்தியை வியந்து தோத்திரம்செய்யு முகத்தால் தங்கள் வேண்டுகோளைப் பெருமானிடத்தும் பெருமாட்டியிடத்தும் தெரிவிப்பனவாக அமைந்துள்ளன.

> ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
> பாதத்திறம்பாடி''

> ''முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
> என்னப்பொழியாய்''

எனப் பராசக்தியைப் பாராட்டியமை காண்க.

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு என இருவரையும் சிறப்பித்தும் ஏனைய பாடல்களில் பெருமானைப் பாராட்டி வேண்டுகோளைத் தெரிவித்தும் வருவன காண்க.

உலகியலை ஒட்டி எத்தொழிலைச் செய்தாலும் தெய்வ நினைவும் கலந்திருக்குமாறு மணிவாசகப் பெருமான் பல பகுதிகளை அருளிச் செய்துள்ளார்கள். பூக்கொய்வோர் பாடத்தக்கதாகத் திருப்பூவல்லியும், சுண்ணம் இடிக்குங் கால் பாடத்தக்கதாகத் திருப்பொற்சுண்ணமும் இவை

போன்ற கோத்தும்பி, அம்மானை, ஊசல் பலவும் அமைந்துள்ளன. அவ்வாறே மார்கழித் திங்களில் வைகறையில் நீராடச்செல்லும் பெண்கள் தம்மில் ஒருவருக்கொருவர் பாடிக்கூவி அழைத்துக்கொண்டு கூட்டமாகச் சென்று சீதப் புனலாடி சிற்றம்பலநாதனையும் சிவசக்தியையும் போற்றி மகிழ்வதாகத் திருவெம்பாவை எழுந்தது. ஆண்டாள் அம்மையார் கண்ணனையே கணவனாகப் பெற வேண்டிக் கொள்கிறார். திருவெம்பாவையில் வரும் பெண்களோ,

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார்."

என அடியவர்களைக் கணவராகப் பெறவேண்டுகின்றனர். நீராடற்சிறப்பு பலபடியாகத் திருவெம்பாவையில் குறிக்கப் படுகின்றது.

"மொய்ஆர்தடம்பொய்கை புக்குமுகேரென்னக் கையாற் குடைந்து குடைந்து" நீராடுதல். காதார் குழையாடப் பைம்பூண்கலனாடக், கோதை குழலாட வண்டின் குழாமாட, சீதப்புனலாடுதல். கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப் பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடுதல் எல்லாம் மார்கழி நீராட்டத்தை விளக்குவன.

உலகவழக்கில் உள்ள நீராடலையொட்டி எழுந்த திருவெம்பாவைப் பாடல்கள் பக்தியைப் பெருக்குவதிலும் தத்துவத்தை விளக்குவதிலும் இணையற்றதாய் விளங்கு கின்றன. ஆகவே, மார்கழி நீராடி மகிழும் மாண்புடை யோர் திருவெம்பாவையை ஓதித் திருவருளைப் பெறுவார் களாக.

—ஆசிரியர்.

பொங்கலோ பொங்கல்!

'கிழைகிழார்'

மகிழ்ச்சிப் பொங்கலே பொங்கல். நமது நாட்டில் கொண்டாடும் விழாக்களில் தலை சிறந்து இயற்கையின் வளத்தையொட்டி அமைந்தது இவ்விழா. தைத்திங்களில் சோற்றுக்குரிய உயர்ந்தவகை நெற்களான சிறுமணி, செஞ்சாலி முதலியவை விளைந்து வீடுவரும். இனிப்பான பண்டங்களுக்கெல்லாம் அடிப்படையான கரும்பு பயிராகி வெல்லமும் சர்க்கரையும் ஆகும். அவரை, மொச்சை முதலியவை பயன்தரும். பூசுணி பூத்துக் காய்க்கும். கருணை, வள்ளி, மஞ்சள், இஞ்சி முதலிய கிழங்குகள் கிண்டியெடுக்கப்பெறும். எந்தப் பருவமும் இவ்வளவு பொருள்களைப் படைத்துத் தருவதில்லை.

சிறுமணி நெல் அன்று இருந்ததுபோலவே அளவிலும், தோற்றத்திலும், பண்பிலும் மாறாமல் இருக்கிறது. கரும்பு பண்டைநாள் இனித்தபடியே இனிக்கின்றது. அவரையும் மொச்சையும் பழைய இயல்பிலிருந்து மாறிவிடவில்லை. பூசுணியின் பூவும் காயும் அன்றுபோல இன்றும் இருக்கின்றன. கருணையும் வள்ளியும் முன்புபோன்றே பயன்தந்து வருகின்றன. மஞ்சள் திடீரெனக் கறுப்பு நிறமாகி விடவில்லை. இஞ்சி அதன் காரத்தையும், மணத்தையும் சிறிதளவும் விட்டுக் கொடுக்கவில்லை. இவையெல்லாம் எத்தனையோ ஆண்டுகளாக நிலத்தில் விளைந்து நமக்கு நற்பயன் அளித்து வருகின்றன. ஆனால், அவற்றைப் பயன்படுத்தும் நாம் மட்டும் நமது முன்னோர்கள் வகுத்துவந்த அருநெறியினின்றும் பிறழப்பார்க்கிறோம். ஆண்டவன் எதிர்பார்க்கும் இயல்புகளை இழக்கின்றோம். அன்பும் அறமும் கைநழுவ விட்டு வருகிறோம். அறிவை வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு நல்லறிவைப் புறக்கணிக்கிறோம். இப்பொங்கல் நன்னாளில், இவற்றைச் சிந்தித்து ஆண்டவன் அருள் கொடைக்கு நன்றிசெலுத்தி இனியேனும் இயல்பான வாழ்க்கை நடத்த உறுதிகொண்டு, இவ் எண்ணங்கள் பொங்கிவரத் துணைபுரிந்த பொங்கலை வாழ்த்திப் 'பொங்கலோ பொங்கல்!' என்று போற்றுவோமாக.

* திருவெம்பாவை

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்துள் உள்ள தலைப்புக்கள் அவராலேயே அமைக்கப்பெற்றனவோ? திரு என்னும் அடைமொழி இல்லாத தலைப்புக்கள் பல இருக்கின்றனவே! அவ் அடைமொழி கொண்டவற்றுக்கும் கொள்ளாதனவற்றுக்கும் வேறுபாடு என்ன? திருவாதவூரர் புராணத்திலும் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்திலும் அத்தலைப்புக்களின் வரிசை வேறுபடக் காணப்படுகின்றதே! அதற்குக் காரணம் யாது? சிற்சில தலைப்புக்கள் ஈற்றடியைப்பற்றியன; வேறுசில முதலடியைப்பற்றியன; மற்றும் சில கருத்தைப்பற்றியன. பின்னும்சில இடையிலுள்ள சொல்லாட்சியைப்பற்றியன. கலவைப் பாட்டு என்பது முதலிய தலைப்புக்களை ஆராய்ந்தால் பிற்காலத்தார் அவற்றை ஆங்காங்கு முன்னிட்டனர் என்று தெளிவாகும். சைவசித்தாந்தத்திற்கு ஒவ்வாத தலைப்புக்களும் விளக்கங்களும் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன. ஆனந்தாதீதம், சிவனோடு ஐக்கியம், ஆத்துமபூரணம், ஆனந்தமனோலயம் முதலியவை, என்றும் சைவசித்தாந்தத்திற்கு இயையாதவை. இதுபற்றிப் பின்னர் விரித்தெழுதும் விருப்பம் உண்டு. இங்குத் திருவெம்பாவையை நோக்கிய பல வினாக்களை மட்டும் எழுதலானேன். சைவப்புலவர் நீண்ட ஆராய்ச்சியை மேற்கொண்டு, ஒரு முடிவுசெய்து, பின்பு உலகவர் உணர எழுதும் முகத்தால் திருவெம்பாவையின் வாய்மையைத் தெளியச்செய்க.

1. 'ஏலோரெம்பாவாய்' என்பதற்கு விளக்கம் யாது? அது தெய்வமந்திரம் ஆகுமோ? அவ்வாறு எழுதியது பொருந்துமோ? பின் உள்ள அம்மானை முதலியனவும் மந்திரங்களாகி விடாவோ?

---

* தருமபுர ஆதீனத்தில் தலைமைச் செயலாளராயிருக்கும் திருவாளர். பி. முத்துக்குமாரசுவாமி முதலியார் அவர்கள் நவசக்தி[illegible] களைப்பற்றி என்[illegible] வினவிய ஒன்றே இவ் வினாக்களை எழுதக் காரணமாயிருந்தது

2. பாவைப் பாட்டு ஆகப் பழம் பாடல் ஒன்று அருகபரமாக உண்டு. அது,

"கோழியும் கூவின குக்கில் அழைத்தன
தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினே
ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியுள் மன்னுவோம் என்றேலோ ரெம்பாவாய்"

என்பது. பாவை நோன்பிற்கும் இப்பாட்டிற்கும் ஏதேனும் இயைபுண்டோ? இதனால் ஏலோர் எம்பாவாய் என்று முடியும் பாடல் பாடித் தத்தம் இறையைப் போற்றுதல் உண்டு என்று தெரியவில்லையோ? பாவாய் என்றதால் பாவைநோன்பு எனலாகுமோ?

3. பாவை நோன்பு திருவாசகத்தில் – திருவெம்பாவையில் எங்கு உணர்த்தப்படுகின்றது? பரமேசுவரனைப் பாடிய திருவாசகத்தில் பாவை நோன்பு இருத்தல் கூடுமோ?

4. முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளையும் நம்மை வளர்த்தெடுத்த பெய்வளையையும் பாடி மார்கழி நீராடும் வழக்கத்திற்கும் பாவை நோன்பிற்கும் சிறிதேனும் தொடர்புறுத்தலாகுமோ?

5. திருவெம்பாவை தேவிவழிபாடு குறித்ததாகுமோ? திருவாசகத்தில் தேவிவழிபாடு நுழைய வழி உண்டோ? திருவம்மானை முதலியவற்றிற்கும் கதைகட்டாமல் விட்டது ஏனோ? கட்டினால் தடுப்பார் யார்?

6. பாகவதபுராணச் செய்திக்கும் ஏழைபங்காளனையே பாடிய திருவாசகத்திற்கும் எவ்வாறு தொடர்புண்டாகும்? ஆயர்தம் கன்னியர் கண்ணனைக் கணவனாகப்பெறப் பனிமால் வரைக் கன்னியைத் தொழுத செய்திக்கும் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியைப் பாடிய திருவெம்பாவைக்கும் சிறிதேனும் இயைபுண்டோ?

7. பாவையாடலும் மார்கழி நீராடலு[illegible] ஒன்றுமோ? பிங்கலந்தையிற் குறித்த பாவையாடலுக்கு[illegible] (திருவெம்பாவையிலுள்ள) நீராடலுக்கும் ஏதேனும் இ[illegible]புளதோ?

8. மனோன்மணி (மநோந்மநி) முதலிய நவசத்திகளையும் திருவெம்பாவையோடு தொடர்புபடுத்தியவர் எவர்? மாணிக்க வாசகர்க்கு அது கருத்தாகுமோ? அகச்சான்று ஏதேனும் உண்டோ? அச்சத்திகள் சிவபிரானுக்கு அன்பர் தோள்சேர விரும்பி வரங்கேட்பார்களோ? கேட்டல் பொருத்தமோ? 'அன்னவரே எம் கணவர் ஆவார்' என்று எதிர்காலத்தில் கூறுவதால், அச்சத்திகள் கன்னியர்களோ? ஆகமங்களில் மனோன்மணி முதலியோர்க்குத் தனித்தனி பதியாகக் கூறும் பெயர்களை என்செய்வது? 'நல்குதியேல்' என்றதால், அவர்கள் கன்னியர் என்று கூறலும் வேண்டுமோ?

9. 'பேதையொருபாற்றிருமேனி', 'எங்கள் பிராட்டி', 'நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம் பாடி' என்பவை முதலியவற்றில் குறித்த அம்பிகையும் மனோன்மனியும் வேறுதல் எதனால் அறியப்படும்? சிவஞானமாபாடியத்துள் சிவசத்திபேதங்கூறுமிடத்தில் 'மனோன்மனி'யின் உண்மையை அறிவார்க்கு இது நகைப்பை அன்றோ விளைக்கும்?

10. நவசத்திகட்கு 'வழியடிமை', 'பழவடிமை', 'புத்தடிமை' எல்லாம் உளவோ? திருவெம்பாவையுள் இவை உணர்த்தப்பட்டுள்ளனவே!

11. குழல்மேல் வண்டார்த்தல் அவமே காலத்தைப் போக்குதல் முதலியவை மனோன்மனி முதலோர்க்கு உள்ளனவாகக் கொள்ளலாமோ? கூறலும் ஆமோ?

12. ஓவாநெடுந்தாரைநீர்க்கண் அச்சத்திகட்கும் இருப்பின், நாம் அவர்களை வழிபட்டுப் பெறும்பயன் யாது? சிவபூஜையில் அவர்களை வழிபடுதலைப் பலர் அறிவர்.

13. எங்கும் இல்லாததோரின்பம் நவசத்திபால் இருப்பது மெய். உபசாரம் அன்று. அவ்வாறு இருப்பவும், அவர்கள் பாவை நோன்பை மேற்கொள்வது பொருந்துமோ?

14. நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச் சேவடி அருளும் சேவகன் என்றதில் உள்ள இல்லங்கள் எவை? அவை மண்ணிடத்தனவோ? வேற்றிடத்தனவோ? மனோன்மனி முதலோர்க்கும் இல்லங்கள் உளவோ?

15. கோயிற்பிணாப்பிள்ளைகளொடு நவசத்திகள் பேசுவது எவ்வாறு கூடும்?

16. 'நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்றதால், கொள்ளற்குரிய மரபும் கொடுத்தற்குரிய மரபும் உண்டு எனல் விளங்கும். அவ்விருமரபும் இல்லை எனில், விரும்பியவர் தோளைச் சேர்தற்கு வரம் வேண்டுவதேன்? அவரவரே அன்பரையும் அல்லாரையும் அறிந்து சேர்தல் இயலாதோ? கொடைக்குரியவர் வழுவினும் கொளற்குரியவர் நின் அன்பரா யிருக்கச் செய்தருள்க என்று வரம் வேண்டுவது விளங்குகின்ற தன்றோ? அதனால், தமிழ்நாட்டுப்பெண்டிர் மார்கழி நீராட்டைச், சிவசத்திபேதங்களின் செயலாகக் கொள்வதும் பேசுவதும் எழுதுவதும் எவ்வாறு பொருந்தும்?

17. 'திருவாசகவுண்மை' என்னும் பாக்களை எவர் பாடினர்? அவற்றின் வரலாறு என்னை? அவற்றைப் பாடியவர் நெறி என்ன? அவற்றை வெளியிட்டவர் அவ்வுண்மையை அறிந்தவர் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உளதோ? திருக்கோவையார் உரையில் உள்ளபடி மணிவாசகர் திருவுள்ளக் குறிப்பை அவ்வுண்மை உணர்த்துமோ? 'திருக்கோவையார் உண்மை'க்கு உரிய மதிப்பு அதற்கு உண்டாகுமோ?

18. 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்னும் பழஞ்சொல்லின் உண்மைக் கருத்து யாது?

19. 'ஒரு தோழம் தொண்டர் உளன்', 'ஏழில்' என்பவற்றின் பொருளை முதன்முதலாக எங்கு யார் எழுதியுள்ளார்? 'ஞானசம்பந்தம்' (7-ஆவது) ஆண்டு மலர், 'சித்தாந்தம்' பார்த்தவரே அறிவர்.

20. மாணிக்கவாசகர் தம்மைத் தலைமகளாகவும் இறைவனைத் தலைமகனாகவும் கொண்டு பாடும் முறைக்குத் திருவெம்பாவை தொடக்கம் ஆதல் எவ்வாறு?

21. பசு ஞானம் வாக்கு மனங்களுள் ஒன்றாய் அடங்குமோ? வாக்கு மனங்கள் பாசமோ? பசுவோ?

துணை ஆசிரியர்

ஆது என்னும் சொல்லின் ஆராய்ச்சி

தருமபுர ஆதீனப்புலவர், சித்தாந்த ரத்நாகரம்,

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,

சொல்லாராய்ச்சி எல்லார்க்கும் பிடிக்காது. சிலர்க்கு அதைக்காட்டிலும் பிடித்தது ஒன்றும் இல்லை. விளங்காத ஒன்றைப் பிடிக்காது என்று வெறுத்துத் தள்ளுவது, செல்வத்தைத் தேடாதவர் அதை வெறுப்பது போலும். சொல்லாராய்ச்சியைப் பிடித்தமாகக் கொண்டு மிகமுயன்று விரும்பி மேற்கொண்டவரை எள்ளுவது அறிவிற்கு ஏற்றதன்று. போலி வாழ்க்கையே சதமாகக் கொண்டிருக்கும் ஒருவர் சொல்லாராய்ச்சியையும் அதில் பற்றுடையவரையும் வெறுத்துப் பேசிக் கொண்டே இருந்தார். அதன் காரணம் இது என அப்போதே சிறிது தெரியுமாயினும், அவர் உலகின் நீங்கிய பின்னரே முழுதும் விளங்கிற்று. எல்லார்க்கும் பிடித்த ஒன்று உலகில் இல்லை. கடவுளிடத்தும், தம் உயிரிடத்தும், உணவு, உடை முதலியவற்றினிடத்தும் பிடித்தமில்லாதவரும் பலர் இருக்கின்றனர். ஒன்று ஒருகாலத்தில் பிடித்தமாயிருக்கும், பிறிதொரு காலத்தில் அதுவே பிடிக்காமல் இருக்கின்றது. பிடித்தமென்னும் இச்சொல்லும் எனக்கு முன்னரெல்லாம் பிடித்தமாக இருந்ததில்லை. இப்பொழுதும் நான் அதைப் பிடிக்கவில்லை. என்னை அதுதான் சில காரணம்பற்றிப் பிடித்துக்கொண்டது. இங்கு அப்பிடித்தமென்னும் சொல்லைப் பற்றிய ஆராய்ச்சி இல்லை. அது பின் வருதல்கூடும். இக்கட்டுரையைப் படிப்பவர்க்கு 'ஆது என்னும் சொல்லைப் பற்றிய ஆராய்ச்சி பிடித்தமாக இருக்குமோ? இராதோ? யான் அறியேன். சிலரேனும் இச்சொல்லாராய்ச்சியின் அருமையை உணர்ந்து, திருமுறையில் 'ஆது' எனும் சொல்லாட்சி அமைந்திருக்கும் அருமுறையைப் பாராட்டுவர். இதில் சிறிதும் ஐயம் இல்லை. இதுகண்டு அன்பர் பலர், மேலும் ஊக்கம் உறுத்தி முயல்விப்பரேல், அச்சொல்லாராய்ச்சியில் ஈடுபடும் நன்முயற்சி எனக்கும் எய்தலாம்.

தமிழகத்தில் பண்டைய நல்லிசைப் புலவரெல்லோரும் வேந்தரிடத்தும், ஏனை வீரரிடத்தும், தம் உயிர்க்கே அழிவு வரினும், அஞ்சாமல் உண்மையைச் சொல்லிய உயர்வுடையராய்

இருந்தனர். இப்பொழுதோ வீண் எண்ணங்கள் மிகுந்தும் வேண்டாதவை பெருகியும், போலிப் பெருமையையும் பொய் மரியாதியையும் விரும்புகின்ற நிலைமை வளர்ந்து வருகின்ற காரணத்தால் உண்மையைச் சொல்லவோ, கேட்கவோ, எழுதவோ, உலகம் இடர்ப் படுத்துகின்றது.

சில ஆண்டுகளுக்குமுன் ஒருவர் வீட்டு மண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது, அங்குக்கூடி இருந்த தமிழ்ப்புலவரிடையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பாட்டுக்களைப் பற்றிய பேச்சு நடந்தது. அதற்குக் காரணம் மணவீட்டிற்கு அருகில் அழுகையொலி கேட்டதே. முதலை வாயிலிருந்து மதலை வந்தது உண்மை அல்ல என்றார் ஒருவர். அவர் வெண்மைக்குத் திண்மைசெய்தார் மற்றொருவர். அதைக் கேட்டிருந்த ஏனைப் புலவோர் என்னை நோக்கி அதன் உண்மையை வினவினர். அவர்க்குத் தக்கவிடை சொல்லும் முன்பு. அவ்வுண்மையை இசையாத வறிஞரை நோக்கி. அதுபற்றிய திருப்பதிகம் எது? அதில் அவ்வரலாற்றை உணர்த்தும் திருப்பாடல்கள் எவை? என்று வினவும்படி ஒருவரைத் தூண்டினேன். அதனால் அவர் "வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணி நீ ஒழிவ தழகோ" எனத் தொடங்கும் திருப்பாட்டை உரத்த குரலில் கரத்தை நினைப்பூட்டும் வகையில் சுரத்திற்கும் சுரம் உண்டாகப் பாடினார். அப்பொழுது எல்லோரும் நகைத்தனர். எனக்கு அந்நகைப்பில் நோக்கம் இல்லை. "நீ ஒழிவதழகோ" என்றால்! "அருளோங்கும் சடையானே" என்று அவிநாசி முதல்வனை முன்னிலையாக்கிய இடத்தில் "நீ ஒழிவதழகோ" என்று இருக்க லாமோ? ஒழிதல் இல்லாத சிவபெருமான் ஒழிவது எங்கே? இங்கே 'நீ' என்றது பொருந்தாதே! முதலையால் கவரப்பெற்ற பிள்ளையை நீ என்றுபாடி அருளினரோ? என்று நினைத்து முடிக்குமுன், "வந்து உடன் கூடியமாணி" "குளத்திடை இழியாக் குளித்த மாணி" என முதலிலும் ஈற்றிலும் படர்க்கையில் இருப்பதும் "கிறி செய்தது என்னை?" என்னும் வினா, "சடையானே" என்ற விளியை நோக்கி நிற்பதும் தோன்றின. 'குளத்திடை உள்ளாடப்புக்கமாணி கிறி செய்தது என்னை?" என ஒன்பதாவது திருப்பாடலில் இருப்ப தும் நினைவில் வந்தது. ஈற்றுப்பாடலில் அன்றி முதலில் எட்டுப் பாடல்களிலும் சிவபெருமானையே முன்னிலையாக்கிப் பாடி

யருளினுர் நாவலர் கோமானுர். அப்படியிருக்க, "நீ ஒழிவ தழகோ" என்றது முன்னிலையான சிவபிரானையும் உணர்த்தாது படர்க்கையான மாணியையும் பொருந்தாது. அதனுல், நீ என்றது பிழை. இது நீர் என்று இருத்தல்வேண்டும். மாணி நீரில் ஒழிவதழகோ என்றே நம்பியாரூரர் தம்பிரானை நோக்கி இயம்பி அருளினுர் என்பது தோன்றிற்று. அதனை அங்குத் தெளிவுற வெளியிட்டேன். அது கேட்ட புலவர் பலருள் ஒருவரே பொருத்தம் என்று இசைந்து மகிழ்ந்தார். பிறர் தத்தம் கருத்தைத் தத்தம் செய்யவோ திருத்தவோ விரும்பினுரல்லர். இதனுல் உண்மையை ஏற்க உணர்வுடையார்க்கும் உள்ளம் இல்லை என்றது புலனுகும்.

'யாண்டு பலவாக நரையிலவாகுதல் யாங்காகியிர்' என்று முன்னிலையில் இருக்கத்தக்கது—இருந்தது யாங்காகியர் எனப் பிழைபட்டது. அது பிழையே என்று அதன் உரை உணர்த்து கின்றது. இவைபோலப் பிழைபட்டவற்றுள் ஒன்று, இங்கு எழுதலான ஆராய்ச்சிக்கும் ஏதுவாயிற்று.

சிவபிரான் இனியன், அவனைப்போல எவனும் எவர்க்கும் எங்கும் எப்போதும் இனியனுவான் இலன். இவ்வுண்மையைத் தெரிவிக்க அநுபவம் மிக்க அப்பரே தக்கவர். அவர் திருவாக்கே

"என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை,
என்னிலும் இனியான் ஒருவன் உளன்" என்பது.

இதில் ஆரும் என்பதில், யார் என்னும் சொல் தன் முதலாவது (யகர) மெய்யை ஒழித்து நின்ற உண்மை ஆரும் அறிவர்.

'ஈசனுர்க்கு அன்பு ஆர் யாம் ஆர்'

'ஆர் உற்ருர் ஆர் அயலார்'

'ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்'

'அருளாதொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆர்'

'நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர்'

'ஆவா என்னுவிடில் என்னை அஞ்சேல் என்பார் ஆரோ தான்'

எனத் திருவாசகத்திலும் 'ஆரும் அறிவர் அலகு பெருமை' என யாப்பருங்கலக் காரிகையிலும் யார் என்னும் வினு ஆர் எனவருதல் போல, யாது என்னும் வினு ஆது என வரலாகாதோ? அதனை அறிந்த அறிவே பின்வருமாறு கூறினுல் மாறுபடாதோ? படும்.

"யாதும் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதல் மடப் பிடியோடுங் களிறுவருவன கண்டேன்''

என்னும் தேவாரப் பாடற்பகுதியில், 'யாதும்' என்றிருப்பது பிழையுடையது. அது மோனைக்கு ஒவ்வாது. 'ஐயாறு' எனப் பின் உள்ளதற்கு ஒப்ப 'ஆதும் சுவடுபடாமல்' என்றே மொழிமன்னரால் அருளப்பெற்றது. அவர் தேவாரத்திலே மோனை எதுகைகளும் ஏனைய யாப்பியல் அணியியற் பொருள்களும், பழந்தமிழ்ச் சொற்களும், தொல்காப்பியச் சூத்திரக் கருத்துக்களுக்குத் தக்க அமைதிகளும் நிறைந்தும் செறிந்தும் உள்ளன. இந்த உண்மை எல்லாப் புலவர்க்கும் இனிய விருந்தாகும். இவ்வாறு எழுதும் இதனை இசைவார் எத்துணையர்? சில இடங்களில் இல்லாமையால் இருக்கும் இடத்தைப் போற்றுதல் வேண்டாவோ?

"என்னையா மோனையைக் கண்டான் இவன்'' அப்பர் சுந்தரர் தேவாரத்திலேயே குற்றம் சொல்லும் இவனுக்கு எவ்வளவு திமிர் இருக்கவேண்டும்? இப்படிச்சிலர் சினங்கொள்வர்.

"பெரியவர்கள் பாட்டிலே மோனையும் எதுகையும் ஏனையா? அருளில் தோய்ந்து மெய்மறந்து பாடிய பாட்டில் மோனையும் எதுகையும் இல்லாவிட்டால் என்னையா மோசமாப்போச்சு?'' இவ்வாறு சிலர் இரங்குவர்.

பெரியவர்களாயிருந்தாலும் பாட்டிற்கு உரிய விதிவிலக்குகளை அநுசரித்துப் பாடாவிட்டால், அது பாட்டாகுமா? அருளாளர் என்ருல், பாட்டின் அமைதியிலும் அவ்வருள் விளங்கவேண்டாமா? கண்டபடி வந்தபடியெல்லாம் பாடி அவை அருட்பாட்டு என்ருல் ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் உள்ள வித்தியாசத்தை அது காட்டுமா? அஞ்ஞானிபாடியதும் ஞானப் பாடலாய் விடுமே! அருள் பெற்றவர் பாடல்களில் இலக்கண நூல்கள் விலக்கியவற்றைக் காட்டவோ விதித்த

வற்றை இல்லை எனவோ முடியுமா? கட்டளைக் கலித்துறையைப் பாடியருளிய ஞானப் பெரியோர்கள், அதற்குரிய கட்டளையை மீறியதுண்டோ? திருவாசகத்தில். அடைக்கலப் பத்து, அக்கட்டளைக் கலித்துறையால் அமைந்தவாறும், எட்டெழுத்தில் அவை கெட்டவாறும், அவ்வமைதி கெட்டபின் கலவைப்பாட்டு எனப்பெயர் இட்டவாறும் அறிவார்க்குப் பெரியோர் பாக்களிலும் விதித்த இலக்கண விதிகள் விளங்கும் உண்மை புலப்படாதிராது. கோயில் மூத்த திருப்பதிகத்திலும் 4 - ஆவது திருவாசகம் கலந்திருப்பதால் கலவைப்பாட்டு எனல் ஆகாதோ? அது கட்டளைக் கலித்துறையன்றோ? பிறவித்தளை தட்டும் அப்பாட்டில் வெண்டளை கண்டவரில்லை. இவ்வாறு கழறுவார் சிலர்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க என்னும் இடத்தில், இரண்டுமுறை வாழ்க என்னும் சொல் வந்திருக்கின்றது. முதலில் வாஅழ்க என்று அளபெடுத்தது ஏன்? வெண்பாவின் இலக்கணத்தைக் கடைப்பிடித்துத்தானே! ஏனை இடங்களில் அந்த அளபெடை இல்லாததும் விதிக்கு முரண்படாமையை உணர்த்தும் அன்றோ? 'வணங்கிச் சிந்தை' என்ற இடத்தில் ஒற்று அளபெடுத்ததும் 'நீள் கழல்கள் காஅட்டி நாயிற்கடையாய்க்கிடந்த அடியேற்கு' என்றதில் உயிர் அளபெடுத்ததும் அந்த இலக்கணவிதியை ஒட்டித்தானே! திருத்தசாங்கம் பண்டாய நான்மறை உணர்த்தும் எல்லா வெண்பாக்களும் இலக்கண விதிக்கு மாறுபடாமல் இருத்தலாலும், திருச்சதகத்தின் முதற் பத்தும் நீத்தல் விண்ணப்பமாகிய ஐம்பதும் கட்டளையை மீறு தன்மையாலும், மற்றவையும் அவற்றிற்கு உரிய இலக்கணம் வழுவாமல் இருத்தலாலும் ஆளுடைய அடிகள் அருட்பாக்கள் விதிவிலக்குகளை நோக்கின அல்ல என்னும் அறிஞரும் உளரோ?

அருளாளர் பாடியவற்றுள், புதிய இலக்கணம் வகுத்தற்கு உரியவாகும்படி உதாரணமாகும் இலக்கியங்கள் அருளால் அமையும். இது பலரும் ஒப்பும் உண்மை. அருளாளர் பாக்களுக்கு இலக்கணம் வேண்டா என்பதும்: அப்பாக்களில் இலக்கணக்குற்றம் இருக்கலாம்; அவை குற்றமாக இருந்தாலும் அவற்றைக் கண்மூடித்தனமாகக் கொள்ளல் வேண்டும் என்பதும் அறிவுடையோர் ஏற்கத் தக்கன அல்ல. அவை

பண்டைய அருளாளரிடத்தில் இல்லை. இக்காலத்தில், தம்மை அருளாளர் என்று விளம்பரஞ் செய்தும் செய்வித்தும் தம்மை நாடி வாராத பெருமையைத் தேடி வருந்தும் பலர் பாடிவரும் பாக்களில் ஓடி ஒளிக்கும் கோடிக்கணக்கான இலக்கண விதிகளின் பேடித்தனம் சொற்போர்வீரர் நெஞ்சினைத் துன்புறுத்துகின்றது.

ஞானியர் யாது செய்தாலும், செய்துகொண்டே யாம் செய்திலோம், எல்லாம் சிவன் செயல் என்று, அச்செயலுக்குத் தாம் கருவிமாத்திரமாயிருந்து, அச் செயலால் வரும் பயனுக்குப் பாத்திரமாகாமல் உய்வர். அவற்றைச் சிவனே என்று சிவனே என்று கொள்வன். அதுவே எவனுக்கும் இல்லாமல் சிவனுக்கே உள்ள பெருமை ஆகும். அதை,

"யாதே செய்தும்(இ)யாம் அலோம் நீ என்னில்
ஆதே ஏயும் அளவில் பெருமையான்
மாதே வாகிய வாய்மூர் மருவினூர்
போதே என்றும் புகுந்ததும் பொய்கொலோ"

என்றருளிய சொல்வேந்தர் நல்விருத்தம் உணர்த்துவது காண்க. இதில், ஆதே (அதுவே) எனும் சுட்டுச்சொல், யாதே எனும் வினுச் சொல்லுக்கு ஏற்ப நின்று, வடநூல் வழக்காகிய யத்-தத் சப்தம் போன்றவாறு உணர்க. இவ்வாராய்ச்சியில் எடுத்துக் கொண்டது இந்த 'ஆது' அன்று, இஃது 'அது' என்னும் சுட்டுச் சொல்லானது முதல் நீண்டு 'ஆது' என்ருயிற்று. (ஆறனுருபாம் 'அது' 'ஆது' என நீளுதல் அறிக) இக்கட்டுரைக்குஉரியதோ 'யாது' என்பது 'ஆது' என மருவியதாகும். ஈது என்ற நீட்சியையும் நினைக, ஆதும் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது என்னும் இடத்தில், 'யாதும்' என்பதன் மரூஉ மொழியாகிய 'ஆதும்' என்பதைக் கொள்ளப் பலர் இசையார். யாடு-ஆடு, யாண்டு-ஆண்டு, யாமை-ஆமை, யாய்-ஆய், யாறு-ஆறு, யானை-ஆனை யாப்பு-ஆப்பு, யாத்து-ஆத்து, (சிந்தாமணி 1882) யாக்கை-ஆக்கை, யாளி-ஆளி, யார்-ஆர், யாரார்-ஆரார் என யகரமெய் போய் ஆகாரவுயிர் மட்டும் நிற்றல் வெளிப்படை. யகரமெய் முதலில் ஒழிதலை இம்மொழிகளால் அறியலாம். வாய்ப்பாட்டு வாப்பாட்டு, வாய்த்தது-வாச்சது, சாய்க்காடு-சாக்காடு, பைஞ் சாய்க்கோரை-பைஞ்சாக் கோரை, தூய்மை-தூமை, பொய்மை

பொம்மை, நோயுற்றுன் - நோவுற்றுன், சாய்ந்தது-சாஞ்சது தீய்ந்தது-தீந்தது, தீஞ்சது, தேய்த்தான்-தேச்சான் என்பவற்றின் இடையில் விகாரமாதலே அறியலாம். நாய், மாங்காய், நோய். கால்வாய் முதலியவற்றின் ஈற்றில் உள்ள யகரமெய் கெட்டு வழங்கலும் உண்டு. யுக்தி-உக்தி-உத்தி, யூகம்-ஊகம், என்னும் வடசொற்களிலும் யகரமெய் கெடுதல் காண்க. இவ்வாறு மொழியின் முதல், இடை, கடை மூன்றிடத்தும் யகரம் கெடுதல் அறியப்படும். படவே, 'சென்று யாது வேண்டிற்று. ஒன்று (அஃது) ஈவான்' என்னும் இடத்தில் 'சென்றுது' என்று அமைந்தவாற்றை மேல் வரும் திருத்தாண்டகத்தில் கண்டு, ஆதும் சுவடுபடாமல் என்றே ஆசிரியர் அருளினுராவர் என நன்குணரலாம். அத் திருப்பதிகத்தில் எட்டுப் பாடலில் அகரமும் மூன்று பாடலில் ஆகாரமும் (மோனை) முதலெழுத்தாக அமைந்த உண்மையும் இதனை வலியுறுத்தும்.

"குன்றுத மாமுனிவன் சாபம் நீங்கக்
குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை
அன்றுக அவுணர்புரம் மூன்றும் வேவ
ஆரழல்வாய் ஓட்டி அடர்வித் தானைச்
சென்றுது வேண்டிற் றென்றீவான் தன்னைச்
சிவனே எம்பெருமானென்றிருப்பார்க் கென்றும்
நன்றுகும் நம்பியை நள்ளாற் றுனை
நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்த வாறே"

என்றதில் உள்ள 'சென்றுது வேண்டிற்று ஒன்று' என்றதைச் சென்று யாதொன்று வேண்டிற்று என்றதாகக் கொண்டுரைத்தலில் தடை உண்டோ?

"வலமிகு வாளன் வேலன் வளைவா ளெயிற்று
மதியா அரக்கன் வலியோடு
உலமிகு தோள்கள் ஒல்க விரலால் அடர்த்த
பெருமான் உகந்த நகர்தான்
நிலமிகு கீழும் மேலும் நிகர் ஆதும் இல்லை
எனநின்ற நீதி யதனை
நலமிகு தொண்டர் நாளும் அடிபரவல் செய்யும்
நனிபள்ளி போலும் நமர்காள்"

என்று அருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாக்கிலும் யாதும் என்றது ஆதும் என நின்றதறிக. நிகராதும் (நிகர்+யாதும்) என்று இயைந்து நிற்றல் அறியத்தக்கது.

"ஆதும் இல்லை மற்று அவனில் என்று அதுவே துணிந்து"

"ஆவிசேர் உயிரின் உள்ளால் ஆதும் ஓர் பற்றிலாத
பாவனை யதனைக் கூடில் அவனையும் கூடலாமே"

என்று திருவாய்மொழியிலும் யாதும் என்பது ஆதும் என நின்றவாறு அறியத்தக்கது.

இதுவரை எழுதியவற்றுள் அறியலாகின்றவற்றின் சுருக்கம். 1 சொல்லாராய்ச்சி சிலர்க்கே பிடிக்கும். 2 பண்டைய நல்லிசைப் புலவர் உண்மையைச் சொல்ல அஞ்சாததுபோல இக்காலப்புலவரும் உண்மையைப் பரப்ப முயலுதல் வேண்டும். 3 சைவசமயாசாரியர்கள் செய்தருளிய அற்புதங்களில் நம்முடைய புல்லறிவைச் செலுத்தி அவற்றிற் பற்றுடைய நல்லோர்க்கு வருத்தம் விளைத்தலாகாது. 4 திருமுறைகளில் எழுதினோராலும் பதித்தோராலும் பிழைகள் இருக்கின்றன. "கவிழமலை தளரக் கடகக் கையால் எடுத்தான்' என்னும் (1-45-9) தொடக்கத்தை உடைய திருப்பாடலில் 'தரளக் கடகம்' தளரக் கடகம் என்று எழுத்து நிலை மாறிய பிழையை எல்லாப் பதிப்பிலும் பார்க்கலாம். எங்கள் தருமையாதீனத்து முதற்றிருமுறை வெளியீட்டில் (பக்-217) இத்திருத்தம் காணப்படும். அவ்வாற்றால், 'வழி போவார் தம்மொடும் உடன்கூடிய மாணி நீர் ஒழிவது அழகோ'' என்று இருத்தல் வேண்டும். 5 புறநானூற்றுப்பாட்டில் 'யாண்டு பலவாக' என்பதில் 'யாங்காகியிர்' என்று இருத்தல் வேண்டுவது 'யாங்காகியர்' என்று பிழைபட்டிருப்பது. 6 யாதும் என்னும் சொல் ஆதும் என மருவியது. இம் மரூஉ மொழியே 'ஆதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது' என்ற இடத்தும் அமைந்தது. இவ்வுண்மையை உணர்த்துவதில் பலர் பலவாறு கருதும் கருத்துப் பன்மை. 7 அருட்பாக்களிலும் இலக்கண அமைதி நிறைந்திருக்கும். 8 இது என்னும் சுட்டு ஈது என ஆதல்போல அது என்னும் சுட்டும் நீண்டு ஆது என ஆதல் உண்டு. 9 யாது என்பதன் மரூஉவாகிய ஆது வேறு; அது என்பதன் நீட்சியாகிய ஆதுவேறு. 10ஆது என்னும் மரூஉமொழி திருமுறைகளில் அமைந்த இரண்டிடங்கள். 11 திருவாய்மொழிச்சான்று.

பாவையெம்பாவை

திரு. ஓ. இராமலிங்கம் அவர்கள் M.A.,
மாற்றும் முதல்வர், ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி.

இந்துமதத்தில் சைவம் வைணவம் என்ற இரண்டு பெரும் பிரிவுகள் இருப்பது எல்லோரும் அறிந்ததே. எல்லாம்வல்ல ஒரு பெருந் தனிக் கடவுளை வழிபடுவதற்கு இரண்டு சமயங்களிலும் ஏராளமான நூல்கள் இருக்கின்றன. சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாவது திருமுறை மணிவாசகப் பெருமான் அருளிச்செய்ததாகும். அதில், திருவாசகம் கருங்கல் மனத்தையும் கரைத்து உருக்கும் தன்மையதாகும். அந்தத் திருவாசகத்தில் ஒரு பாவைப் பாட்டு இருக்கின்றது. அதுவே 'திருவெம்பாவை' என்பதாகும். அங்ஙனமே வைணவவழி பாட்டுப் பாக்கள் கொண்ட நாலாயிரப் பிரபந்தத்தில் நாச்சியார்திருமொழி என்ற ஓர் அருமையான பகுதி இருக்கிறது. தெய்வக்குழந்தை ஆண்டாள் நாச்சியார் பாடியது அது. அந்தத் திருமொழியிலும் ஒரு பாவைப் பாட்டு இருக்கின்றது. அதற்குத் 'திருப்பாவை' என்று பெயர். இந்தப் பாவையையும் எம்பாவையையும்பற்றி ஒரு சிறிது சிந்திப்பதே, 'பாவையெம்பாவை' என்ற இந்தக் கட்டுரையின் செயலாகும்.

சைவமும் வைணவமும் நமது இந்துமதத்தின் இரண்டு கண்கள் போன்றன. அந்த இரண்டு கண்களிலும் உள்ள இரண்டு மணிகளே, பாப்பாக்களே, பாவைகளே, இந்த இரு பாவைப் பாட்டுக்களும் ஆகும். கண்ணுக்கு எப்படி பாவை சிறந்ததோ அப்படியே சைவத்திற்கும் வைணவத்திற்கும் இப் பாவைப் பாட்டுக்கள் சிறந்தனவாகும். இப் பாட்டுக்கள் இரண்டும் உறங்குகிறவர்களை எழுப்பி, உடையவனுடைய அருள்நீரில் முழுக வாருங்கள் என்று அழைக்கின்ற பாட்டுக்கள். எழுப்புகிறவர்கள் மணம் ஆகாத கன்னிப்பெண்கள். எழுப்பப் பெறுகிறவர்களும் அத்தகைய கன்னிப்பெண்களே. கன்னிப் பெண்கள் தூய்மைக்கு அடையாளம். பெண்களே அன்புக்கு அறிகுறி. பெட்பு என்ற சொல்லின் அடியாக வரும் பெண் என்னும் சொல் அன்பு என்றே பொருளாகிறது. அன்பு செய்யும் மனம் உடையவர்கள் பெண்களாவர். ஏற்கனவே

ஒருவரிடம் தனது உள்ளத்தைப் பறிகொடுத்து அவருக்கு ஆட்படாதவள் கன்னிப்பெண். எனவே, கன்னிப்பெண்களே விழித்து எழுந்து, துயின்றுகிடக்கும் மற்ற கன்னியரையும் எழுப்பி, எல்லாம்வல்ல இறைவனுக்கு அன்புசெய்து அவனுக்கு ஆளாவதற்குப் பெரிதும் உரியவராவர். அவர்களே நாட்டின் நன்மைக்காக நல்ல மழை பெய்விக்குமாறு அப்பெருமானை வேண்டவும் வல்லவர்.

திருவெம்பாவையில் இருபது பாடல்கள் இருக்கின்றன. அவற்றில் ஒருபாதி எழுப்பும் பாடல்களாகவும், பின்பாதி குளிக்கும் பாடல்களாகவும் அமைகின்றன. முன் பத்துப் பாடல்களில் முதல் எட்டுப் பாடல்களே நேரே கன்னியர்கள் கன்னியர்களை எழுப்புவன. ஒன்பதாவது பாடல், ஆண்டவனிடத்தில் தங்கள் வேண்டுகோளைக் கன்னியர்கள் தெரிவித்துக் கொள்ளல். பத்தாவது பாட்டு குளிக்கச்செல்லும் வழியில் கோயிலுள்ள பெண்களிடம் கடவுளின் தன்மையைப்பற்றிக் கேட்டல். இதுவரைக்கும் எழுப்பும் பகுதியென்று கொள்ளலாம். இனி, பின் பத்துப் பாடல்களிலும் முதல் எட்டுப் பாடல்களே, 11 ஆவது பாடல் முதல் 18 ஆவது பாடல் வரை, நேரே அம்மையப்பரின் வடிவான குளத்தில் இறங்கி அருள் நீரில் குளிக்கும் பாடல்கள். 19 ஆவது பாட்டு ஆண்டவனிடம் வேண்டுகோளை விண்ணப்பித்தல். 20 ஆவது பாட்டு இறைவனை வாழ்த்துதல். இப்பத்தும் குளிக்கும் பகுதியாகக்கொள்ளலாம். எழுப்பும் பாடல்களுக்கு மட்டும் பொருத்தமாக அமைகின்ற 'ஏல் ஓர் எம்பாவாய்!' என்ற சொற்றொடர் மற்ற பாடல்களுக்கு மகுடமாக வருதலினால், எல்லாப் பாடல்களிலும் 'எம்பாவாய்' என்ற ஈறு அமைகின்றது. பாட்டில் தலைப்பே 'எம்பாவை' என்றாயிற்று.

திருப்பாவையில் முப்பது பாடல்கள். இங்கும் முதல் ஒரு பாதி எழுப்பும் பாட்டுக்கள், பின்பாதிபதினைந்தும் கோவிந்தன் என்னும் அருள் நீரில் ஆடலே என்று கொள்ளலாம். முதல் பதினைந்தில், 1 முதல் 5 வரை மார்கழி நோன்பைப்பற்றியன. மீதி 10 பாடல்களே கன்னியர்கள் கன்னியர்களை எழுப்புவன. கன்னியர்கள் அனைவரும் எழுந்து திரண்டு 16 ஆவது பாடலில் நந்தகோபன் மாளிகையை நண்ணுகின்றார்கள். மாளிகையாகிய

கோயிலைக் காவல்செய்பவன், அதன் வாயில்காப்போன், இருவரிடமும் மணிக்கதவம் தாள் திறக்குமாறு வேண்டுகிருர்கள். உள்ளே சென்று, கண்ணபிரானின் தந்தையாகிய நந்தகோபனை எழுப்புகிருர்கள். அன்னையாகிய எம்பெருமாட்டி யசோதையையும், உடன்பிறந்தான் பலதேவனையும், மணுட்டி நப்பின்னையையும் எழுப்புகிருர்கள். இவர்களை எழுப்புவதெல்லாம், உம்பர்கோமானுகிய கண்ணனை எழுப்புவதற்காகவேயாகும். "உன்கோயில் நின்றும் இங்ஙனே போந்தருளி, கோப்புடைய சீரிய சிங்காசனத்திலிருந்து யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்" என்று கண்ணனிடம் விண்ணப்பிக்கிருர்கள். "குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னேடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது" என்கிருர்கள். 29 ஆவது பாடலில் "எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னேடு உற்ருேமே யாவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்று" என்று வேண்டுகிருர்கள். 30 ஆவது பாடல் பயன்கூறும் பாடலாக அமைகின்றது. 'முப்பதும் தப்பாமே உரைப்பார் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்' என்று அப்பாடல் முடிகிறது.

திருப்பாவையில், குளிக்கின்ற செய்தியே வெளிப்படக் காணவில்லை. ஆனுல் பெண்கள் எழுந்துவருவதும், மற்றப் பெண்களை எழுப்பி அழைத்துச்செல்வதும், நீராடுவதற்காகவே என்று பாடல்களில் குறிக்கப்படுகிறது. 'மார்கழி நீராட மகிழ்ந்து ஏல் ஓர் எம்பாவாய்'. 'மாலே மணிவண்ணு! மார்கழி நீராடுவான்' என்ற வரிகளைக் காண்க. ஆனுல் குளித்தலே திருப்பாவையில் இல்லையா என்ருல், உண்டு என்று சொல்லலாம். குளம் ஒன்றில் குலக் கன்னியர் குளிக்காவிட்டாலும் மணிவண்ணன் என்னும் மாண்புடைய அருள்வெள்ளத்தில் அம்மகளிர் மகிழ்ந்து மூழ்குவதைப் பின்னைப் பதினைந்து பாடல்களில் காண்கின்ருேம். திருவெம்பாவையில், 'சீதப்புனல் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்தது' என்று சொல்லப்பெறுகிறது. திருப்பாவையிலோ ஆழிமறைக் கண்ணனே ஆன்ற பொய்கையாகக் கொள்ளப்பெற்றிருக்கிருன். 'நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன், ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' என்று திருவெம்பாவை 12 ஆம் பாடலில் வருவதும்காண்க.

மக்களின் சமய உணர்ச்சி புத்துயிர் பெறவேண்டியிருக்கும் இக்காலத்தில், இந்த இரு திருப்பாவைப் பாட்டுக்களும் அப் புத்துயிரைப் பலவகைப்பட்ட மக்களுக்கும் எளிதில் அளிக்க வல்லனவாகும். கன்னியர்கள்போல மாசில்லாத மனங்களும் இக்காலத்தில் பலதிறச் சூழல்களால் மாறுபட்டுத், திருவருள் வேட்கை இழந்தவைகளாய்க் கிடக்கின்றன. இரு பாவைப் பாட்டுக்களிலும் பல கன்னியர்களை எழுப்புவது அத்தகைய பலவகையான உயிர்களை எழுப்புவதாகும் என்று கொள்ளலாம். அனைத்து உயிர்களும் மல இருளில் சிக்கித் தூங்கிக் கிடந்துவிடாமல், ஆண்டவனுகிய அருள்நீரில் முழுகி இம்மை மறுமை நலங்களை இனிதுபெறத் துணையாவனவே இந்த இரண்டு பாவைப் பாட்டுக்களும், என்பதையுணர்ந்து சைவ வைணவ நூல்களாகிய திருவெம்பாவை திருப்பாவை இரண்டினையும் போற்றிப் பாடிப் படித்துப் பயனடைவோமாக!

முதல் வகுப்பில் தேறினுன்

முருகன் : செந்தில் எப்படி முதல் வகுப்பில் தேறிவிட்டான்?

கந்தன் ; ஆமாம்! அவன் தேறுவதே கடினம் என்றே நான் எண்ணினேன்; எங்ஙனம் அவனுக்கு முதல் வகுப்பும் கிடைத்து விட்டதோ? தெரியவில்லையே!

செவ்வேள் : உங்களுக்கு அந்த இரகசியம் தெரியாதுபோலிருக்கிறது? அவன் காலை மாலை இருவேளையும் தவருது உருக்கமுடன் "கந்தர்கலி வெண்பா" ஓதிவந்தான்!

21

திருப்பள்ளியெழுச்சி

'மாமூலர்'

இறைவனைப் படுக்கையிலிருந்து எழுப்புவது என்ற பொருளிலேயே 'திருப்பள்ளி யெழுச்சி' என்ற தலைப்பு இருக்கிறது. மாணிக்கவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில் 'திருப்பள்ளி யெழுச்சி' பாடுகிறார். நாலாயிரப் பிரபந்தத்தில் தொண்டரடிப்பொடி யாழ்வார் பாடிய 'திருப்பள்ளியெழுச்சி யொன்றும் உண்டு. இந்த இரண்டு பாடல்கள், அல்லது அவற்றில் ஒன்றன் சொற்பொருளை விரித்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. திருப்பள்ளியெழுச்சியின் கருத்தை ஓரளவு ஒருவாறு சிறிது சிந்திப்பதே இப்போது செய்யப்போவதாகும். திருவெம்பாவையோடு இம்மார்கழித் திங்களில் பாடுதற்குரிய பாட்டு திருப்பள்ளியெழுச்சியாதலின், இப்பொருள் பற்றிச் சிந்திப்பது இப்போது பொருத்தமாகும்.

கடவுள் நம்மால் உறக்கத்தினின்றும் எழுப்பப்பட வேண்டிய ஒரு பொருளாக இருப்பின், அக்கடவுளால் நமக்கு என்ன நன்மை உண்டாகக்கூடும் என்று இக்காலத்து மனம் எண்ணமிடுகிறது. தூங்கிக்கொண்டு கிடக்கும் சாமி ஒரு சாமியா என்று நினைக்க முற்படுகிறது அம்மனம். உயிர்களுக்கு உதவவேண்டிய காலம் அறிந்து உதவத் தானே முன்வராமல், உயிர்கள் தன்னையணுகித் தூக்கத்தினின்றும் தன்னை எழுப்ப வேண்டும் என்று எதிர்பார்க்கும் கடவுள் ஒரு கடவுளா என்று அம்மனம் ஆராயப்புகுகின்றது. அத்தகைய கடவுளை நாம் போற்றிப் பரவுவதுதான் எதற்கு என்றும் கருதுகிறது. இவ்வாறெல்லாம் ஓடித்திரியும் மனமுடையார்க்கு மாணிக்கவாசகப் பெருமான் திருப்பள்ளியெழுச்சி பாடியிருக்கிறாரே, தொண்டரடிப்பொடியாழ்வாரும் ஒரு திருப்பள்ளியெழுச்சிபாடியிருக்கிறாரே, இப்பெருந்தகையார்களுக்கு நமக்கிருக்கும் அறிவு கூடவா இல்லாமல் இருந்திருக்கும் என்னும் எண்ணம் தோன்றுதுபோலும். மாணிக்கவாசகப்பெருமான் ஒரு பெரும்பாண்டிய நாட்டினை, ஒரு தனித் திரு அமைச்சராக இருந்து, ஆட்சி புரிந்தவர். பல நல்ல நூல்களைப் படித்தவர். பேரறிஞர். எல்லாம் வல்ல பொருளை இனிது உணர்ந்தவர். அப்பொருளை 'ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!' 'நாற்றத்தின் நேரியாய்!

'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!' 'ஆற்றின்ப வெள்ளமே' 'கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச் சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!' என்றெல்லாம் உணர்ந்து உணர்ந்து உள்ளுருகி அழைத்தவர். 'கண்ணால் யானுங்கண்டேன் காண்க' 'தடக்கை நெல்லிக்கனி யெனக்கு ஆயினன்', 'அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்' 'அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன், என்றெல்லாம் தன் சொந்த அனுபவத்தை எடுத்து விளம்புகிறவர். 'இன்று எனக்கு அருளி, இருள்கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்' என்று அப்பேரொளிப் பிழம்பினை தன் உள்ளத் தாமரையில் உணர்கின்றார். அப்பெரும் பொருளே எல்லாவற்றின் உள்ளிருந்தும் இயக்குகின்றது, எல்லா வற்றிற்கும் அப்பாற்பட்டும் இருக்கின்றது, என்ற உண்மையை உணர்ந்து, 'ஒன்றும் நீயல்லை நீ அன்றி ஒன்றும் இல்லை, யார் உன்னை அறியகிற்பாரே, என்று வியக்கின்றார்.

இந்தப் பேரறிஞரா, இந்தப் பேருளாளரா, கடவுள் தூங்கிக் கொண்டிருக்கிறார், அவரை எழுப்ப மனிதன் போக வேண்டும் என்று எண்ணியிருப்பார்? இக்காலத்து இழிமனத் தின் ஞான ஏழ்மையா அப்பெருமானுக்கு இருந்திருக்கும்? மல இருளில் உறங்கிக் கிடக்கின்ற மனிதன் அருள் நீரில் முழுகு வதற்காக விழித்தெழ வேண்டுமே என்னும் இரக்கத்தால், 'திருவெம்பாவை' பாடிவைத்தார் அப்பெருமான். விழித்தெழுந்த அவன், எல்லா உயிர்களையும் உறங்கவைத்து, விழிக்கவைத்து நினைக்கவைத்து, நடமாடவைத்து, இன்னும் என்னென்ன வெல்லாமோ செய்யவைத்து ஆண்டருளும் பெரும் பொருளைத் தன் மனத்தகத்தே எழுந்தருளப் பண்ணுவதற்காகப் பாடு வதற்குத் திருப்பள்ளி யெழுச்சிப் பாடிவைத்திருக்கிறார்.

அவன் தாள்களை வணங்கவும் அவன் அருளே வேண்டி யிருக்கிறது. எனவே, என்றும் எங்கும் எழுந்தருளியிருக்கும் அப்பெரும்பொருள் தன் உள்ளக் கமலத்தில் வீற்றிருக்கின்றது என்று உணரவும் மனிதன் அப்பொருளினுடைய கருணையையே இறைஞ்சவேண்டியவனாகின்றான். அங்ஙனம் மனமலரில் இயல்பாகவே என்றும் எழுந்தருளியிருக்கும் இறைவனை அங் ஙனம் வீற்றிருக்கின்றான் என்று உணர்வதற்குத் திருவருளை வேண்டிப்பாடும் பாட்டே திருப்பள்ளி யெழுச்சியாகும்.

பூலோக விமர்சனம்

(பதினேழாம் நூற்றாண்டு வேங்கடாத்வரீ)

தமிழில் ஆக்கியவர்

பிர்மஸ்ரீ. ய மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,

தருமபுர ஆதீனக் கல்லூரித் தலைவர்.

ஸ்ரீமான் வேங்கடாத்வரீ காஞ்சீபுரத்திற்கு அடுத்த "அரசாணிப்பாலை" என்ற சிற்றூரில் ஸ்ரீ வைஷ்ணவகுலத்தில் உதித்தவர். இவர் வாழ்ந்த காலம் பதினேழாவது நூற்றாண்டு. லக்ஷ்மீஸஹஸ்ரம், உத்தரசம்பூ முதலிய உத்தமமான கிருதிகளை இயற்றிய இவருடைய "விச்வகுணாதர்சம்" என்ற 'சம்பு' மிகப் பிரசித்தம். பழையகாலப் பாடத்திட்டத்தில் சம்புக்கள் வாசிக்கும் மாணவன் விச்வ குணாதர்சம் வாசிக்காமல் இருப்பதில்லை. தற்காலப் பாடத்திட்டத்தில் இது முற்றிலும் மறக்கப்பட்டுவிட்டது விசனிக்கத்தக்கது.

வேங்கடாசாரியார் ஆத்ரேயகோத்ரத்தில் ரகுநாதர் ஸீதாம்பாள் என்ற பெற்றோர்களுக்கு ஜனித்தவர். இவருடைய பிதாமஹர் அப்பய்ய குரு என்ற ஸ்ரீநிவாஸாத்வரீ. ஸ்ரீநிவாஸாத்வரியின் மாதுலர் சரித்திரப்பிரஸித்திபெற்ற ஸ்ரீதாதாசாரியர். ஸ்ரீதாதாசாரியர் விஜயநகர மன்னர்களுக்கு ராஜகுருவாக இருந்தார். பஞ்சமதபஞ்ஜனம் என்ற நூலின் ஆசிரியர். சைவமதபிரதிஷ்டாபகரும் அத்வைதாசாரியருமான ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதரிடம் தோழமையும் போட்டிமனப்பான்மையும் கொண்டவர்.

பதினேழாவது நூற்றாண்டில் இந்தியாவின் நிலைமையைக் கூறுவது "விச்வகுணாதர்சம்". எந்த விஷயத்தைப்பற்றியும் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கலாமல்லவா? ஆதலால் ஸ்ரீமான் வேங்கடாத்வரீ இரண்டு கந்தர்வர்களின் ஸம்பாஷணையாக இந்தக்கிரந்தத்தை அமைத்திருக்கிறார். ஒருவன் 'விசுவாவசு'. இவன் எப்போதும் நல்லதையே பார்க்கும் சுபாவமுடையவன்.

மற்ருெருவன் "க்ருசானு" இவன் எப்போதும் குற்றத்தையே எடுத்துக்கூற முயலுபவன்.

இவர்கள் இருவரும் பூலோகத்தை ஒரு சுற்றுச் சுற்றி வரலாமென்று புறப்பட்டார்கள். இமயத்திலிருந்து ராமேச்வரம்வரையில் ஆகாயமார்க்கமாய் சஞ்சரிக்கிருர்கள். தங்கள் கண்களால் கண்டதை உள்ளது உள்ளபடி வருணிக்கிருர்கள். ஒவ்வொரு விஷயத்திலும் இவர்களின் நுட்பமான விமர்சனங்கள் வெளிப்படுகின்றன. குணங்களை எல்லாம் விசுவாவசு காணுகிருன். தோஷங்களை எவ்வளவு காணலாமோ அவற்றையெல்லாம் க்ருசானு எடுத்துரைக்கத் தயங்குவதில்லை.

இப்படி இவர்கள் விமர்சிக்கும் விஷயங்கள் நமக்கு மிகவும் ருசிகரமான விஷயங்கள். நாட்டில் பல்வேறு துறைகளின் நிலைமை அலசப்படுகிறது. ஆறுகள், மலைகள், காடுகள், நாடு நகரங்கள் இவைகளின் வருணனை ஒருபுறமிருக்க, கோயில்கள், தீர்த்தங்கள், ஜனங்களின் நாகரிகம், தேசாசாரங்கள், பாஷைகள், உத்யோகப்பிரவிர்த்திகள், நற்செயல்கள், கொடுஞ்செயல்கள், அரசாக்ஷியின் அம்சங்கள், பல மதஸ்தர்களின் போக்குகள், மதாசாரியர்கள், படிப்புத்துறைகள், பெரியோர்கள், கயவர்கள் இப்படியாக எவ்வளவோ விஷயங்கள் விமர்சனத்திற்குரியவனவாகின்றன.

கவி, மதராஸ் பட்டணத்தைப்பற்றிக் கூறும்போது ஆங்கிலேயர் வியாபாரிகளாக அங்கு நிலைபெற்றுத் தங்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததையும், அவர்களின் தோற்றம், ஆசாரம், குணங்கள், குறைபாடுகள் இவைகளையும் நன்கு ஆராய்ந்து குறிப்பிடுகிருர். கிரந்தகர்த்தா எந்தவிஷயத்தையும் நடுநிலைமைவகித்து இருபுறத்தோற்றங்களையும் சித்திரிக்கிருரே ஒழியப் பக்ஷபாதம், துவேஷம், வேற்றுமை, குறுகிய மனப்பான்மை முதலிய குறைபாடுடையவராக எங்கும் தென்படவில்லை. தற்கால ஆராய்ச்சியாளருக்குப் பொக்கிஷம் போன்ற இந்த அரிய நூலும் ஸம்ஸ்கிருத பாஷையில் இருக்கிறது என்ற துரதிர்ஷ்டத்தால் அறிவுக்கு அப்பால் இருளில் கிடக்கும் மாணிக்கம்போல் கிடந்துவிட்டதே என்று மனம் வருந்தி இதன் அரியபொருள்களை ஒருவாறு சுருக்கமாய் யாரும் படித்தற்குரிய தமிழ்பாஷையில் எடுத்துக்கூறலாம் என்பது என் ஆசை.

இதனுல் விசவகுணுதர்சத்தின் புகழ் விரியுமேயானுல் என்பணி பயனுடையதாகும்.

கடவுள் வணக்கம்

திருமாலின் மார்பிலிருக்கும் ஸ்ரீதேவியின்கையில் தாமரைப் பூ இருக்கிறதல்லவா? அதை அவள் விளையாட்டாகச் சுழற்றும் போது அதிலிருந்து தேன்திவலைகள் தொடர்ந்து பெருகிவிழு கின்றன. எங்கேவிழுகின்றன? பிரும்மதேவன் வாயில் – திருமாலின் நாபிகமலத்தில் வீற்றிருக்கும் பிரும்மதேவனுகிற குழந்தையின் வாயில். இதைப்பார்க்கும் தேவர்கள் நினைக்கிருர் கள் – "லோகமாதாவான ஸ்ரீதேவி தன் குழந்தையான பிரும னுக்கு சங்குப்பாலாடைபோன்ற தன்கைத்தாமரையினின்றும் தேனுகிற பாலைப் பெருகவிட்டுப் புகட்டுகிருள்" என்பதாக. கவி அந்த மது தாரை தன்னைப் புனிதனுக்கட்டும் என்று பிரார்த்திக்கிருர்.

கவியின் குலமும் கிரந்தத்தின் தோற்றுவாயும்

கர்ணுட ராஜ்யாதிபதியின் குருவான தாதாசாரியரின் ஸஹோதரியின் மகனுன அப்பய்ய குருவின் புத்ரன் ரகுனுத தீக்ஷிதகவி. அவர் பல யாகங்களைச் செய்தவர். அவர் குமாரர் வேங்கடாத்வரீ. இந்த விச்வகுணுதர்சத்தை இயற்றியவர். இவர் தர்க்கம், வேதாந்தம், மீமாம்ஸை, வியாகரணம் என்ற நான்கு சாஸ்திரங்களிலும் விற்பன்னர்.

கத்யம், பத்யம் கலந்த கவிதை "சம்பூ" எனப்படும். இது தேனும் திராக்ஷையும் கலந்ததுபோல் இனிப்பாயிருக்கும். இதை யார்தான் விரும்பமாட்டார்கள்?

ஒருசமயம் க்ருசானு, விசுவாவசு என்ற இரண்டு கந்தர் வர்கள் பூமண்டலத்தைச் சுற்றிப்பார்க்க எண்ணி விமானத்தில் ஏறிக்கொண்டு சஞ்சரிக்கலானுர்கள். அவ்விருவரில் க்ருசானு எதையும் குற்றஞ்சொல்லும்சுபாவமுடையவன். விசுவாவசுவோ என்ருல் எதிலும் உள்ள குணங்களை கிரகிக்கவல்லவன்.

சூரிய வருணனை

அவர்கள் புறப்பட்டதும் சூரியன் உதயமானபடியால், விசுவாவசு சூரியபகவானை வணங்கினான்:- "கோகபக்ஷிகளின் காதலை வளர்ப்பவனும், ச்சாயா ஸுவர்ச்சலாம்பா ஸமேதனும் வேதஸ்வரூபியுமான தேஜோமயனுக்கு நமஸ்காரம்."

க்ருசானு – இந்தத் தாபகாரியான சூரியனை ஏன் வணங்குகிறாய்? இவன்வழி நடப்பவர்களை வெய்யிலினால் பொட்டைகளாக்குகிறான்; பூமியை வறண்டுபோகச்செய்கிறான்; செடி கொடிகளை வாடச்செய்கிறான்; களைப்பாற உதவும் அழகிய குளம் குட்டைகளில் ஜலத்தை வற்றச்செய்கிறான். இவனிடத்தில் நற்குணங்களை எங்கு காணமுடியும்?

விசுவாவசு – கமலபந்துவான சூரியபகவானைக்கூட நீ தூற்றுகிறாயே! அடே அதிகப்பிரஸங்கி! இதைக்கேள் – சூரிய வெப்பத்தினாலல்லவா உலகத்தில் ஸுபிக்ஷத்தை ஏற்படுத்தும் மழை பெய்கிறது. சூரியனாலல்லவா கண்களைமூடும் இருள் விலகுகிறது. ஞானிகள் மோக்ஷத்திற்குச் செல்லும் மார்க்கத்தை *அளிப்பவனும், ஸ்ரீதேவியின் வாஸஸ்தலமான பத்மத்தை விகசிக்கச்செய்பவனும், ஸமஸ்தலோகங்களுக்கும் நன்மையைச் செய்பவனும், ஆகாயவெளிக்கு அலங்காரமாயிருப்பவனுமான சூரியனை எவன்தான் ஸ்துதிசெய்யமாட்டான்?

மேலும், சூரியனைப்பார்க்காதநாளை "துர்தினம்" என்றும், சூரியனைப்பார்த்தநாளை "ஸுதினம்" என்று கூறுவது வழக்கம். சூரியனால்தான் சரீரத்தில் ரோகநிவிர்த்தி ஏற்படுகிறது என்பது பெரியோர்களின் சித்தாந்தம்.

மற்றும், திக்பாலகர்களான இந்திராதி தேவதைகள் இருக்கும்போது பிராமணர்கள் சூரியனுக்கல்லவா தினமும் மூன்றுவேளைகளில் அர்க்யப்ரதானம் செய்கின்றார்கள்! ஏனெனில், மூன்று வேதங்களே சூரியரூபமாய்ஜ்வலிக்கின்றன என்பது சான்றோர்கொள்கை.

---

* சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு மோக்ஷத்திற்குச் செல்பவர்கள் செல்லுகிறார்கள் என்பது சாஸ்திரம்.

மேலும் ஒரு சுலோகத்தால் சூரியனை ஸ்துதிசெய்துவிட்டு விசுவாவசு க்ருசானுவுடன் கிழக்குமுகமாகவே விமானத்தைச் செலுத்திக்கொண்டுசென்று சூரியமண்டலத்தின் மத்தியில் விளங்கும் ஸ்ரீமந்நாராயணனை பின்வருமாறு வணங்குகிறான்.

"உயரிய குணங்களுக்கு இருப்பிடமானவரும், சரணாகதி செய்பவரைக் காப்பவரும், சகல பாபங்களையும் போக்கடிப்பவரும், ஸர்வபிராணிகளிடமும் அந்தர்யாமியாயிருப்பவரும், ஸ்ரீதேவியின் கண்களுக்கு ஸௌக்கியத்தைக் கொடுப்பவரும், இருளை (அஞ்ஞானத்தை, தமோகுணத்தை) விலக்குபவரும் ஆன சூரியமண்டலத்தின் மத்தியில் உள்ள ஸ்ரீமந்நாராயணனுக்கு நமஸ்காரம்."

மறுபடி பக்திப்பெருக்குடன் ஸ்துதித்தான் :- "உதய சூரியனின் கிரணங்களால் மலரும் தாமரையைப் போன்ற கண்களை உடையவனும், பக்தர்களுக்கு ஸம்சாரமாகிற கட்டை அவிழ்த்துவிடுபவனும், தாமரஸவாஸினியின் நாயகனும் ஆன பொன்னிற தேஜோமூர்த்தி எனக்கு அளவற்ற ஆனந்தத்தை விளைவிக்கிறது."

ஆண்டவனைப்பற்றிய அறிஞர் உரை

உண்மையைத்தான் நான் கடவுள் என்று தொழுகிறேன். இன்னும் நான் கடவுளைக் காணவில்லை. ஆனால், அவரைத் தேடிக்கொண்டிருக்கிறேன். இப்படித் தேடுவதில் நான் அருமை பெருமையாகப் பேணுகிற எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். என் உயிரைக்கூடத் தியாகம் செய்யத் தயாராக இருப்பேன்.

காந்தி அண்ணல்.

(மு. இரா.)

தைந்நீராடல்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

பங்கயப்பூம்புனல்:

தாமரை மலர் செறிந்த தடாகம். மதுவேட்டைக்குப் புறப்படும் வண்டுகள் மகிழ்ச்சிக் கீதங்களை இசைக்கின்றன. முன்பனிக்காலம். எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. இன்னும் பொழுது புலரவில்லை. கோழிகள் கூவுகின்றன. அதை அடுத்துக் குயில் குரல்கொடுக்கிறது. கதிரவன் வரவால் அழியப் போகும் இருள் தான்இருக்கும் சிறிதுநேரத்திற்குள்ளாவது தனியாட்சி செலுத்துவோம் என்றெண்ணியதோ என்னவோ? இடையாமத்தில் இருந்ததைவிட இப்போது இருள் மிகுதி. விடிவெள்ளி விழியிமைப்பதுபோல் வீசுகிறது ஒளி. ஓய்வு போதும்; உணர்ச்சியோடு விழி! எழு!! வேலைசெய்!!! என்னும் பொருள் பொதிந்த கோழியின் கூக்குரல் மீண்டும் எங்கோ ஒரு மூலையில்.

இடைகளிலேகுடங்களையேந்தி அன்னநடைபோட்டுஅசைந் தாடி இளம் பெண்கள் சிலர் அந்த இலைபடர்ந்த பொய்கை நோக்கி வருகின்றனர். வந்தவர்களில் சிலர், "கரையிலே அமர்ந்தனர் கையது கொண்டு மெய்யது பொத்திய நிலையில்".

மற்றும் சிலர், காந்தள் போன்ற மெல்விரலைத் தண்ணீரில் நனைத்து 'ஆ' எனக் கதறினர்; அலறினர்.

அரைநாழிகை அகன்றது. துணிவுள்ள பெண் ஒருத்தி பங்கயப் பொய்கையில் பாய்ந்தாள். 'முகேர்' என்ற ஒலி எழுமாறு முழுகினாள்; நீந்தினாள். கைகளும் கால்களும் தண்ணீரைத்துழாவின. குளிரகன்ற அந்தக் குயில்மொழியாள் ஏனையோரையும் அழைத்தாள். எல்லோருமே ஒருவர்பின் ஒருவராக பங்கயப்பூம்புனலில் பாய்ந்தாடுகின்றனர். குளிருக்குப்பயந்து

உடலைத் தண்ணீரில் நனைத்துக் கரையேறினால் மீண்டும் வந்து குளிர் உடலைப்பற்றும். நீந்தி உடல் சளைக்கக் குளித்தால் குளிரகலும் என்ற முறை தெரிந்த அவர்கள் நீண்ட நேரம் நீரில் மூழ்குகிறார்கள்.

நாழிகை நகர்கிறது. உதயசூரியனின் கிரணங்கள் உலகை ஊடுருவிவருகின்றன. கரையேறிய அக்கன்னியர் கடவுளை நோக்கிச் சிறிதுநேரம் பிரார்த்தனை செய்கின்றார்கள். வீடு திரும்புகிறார்கள்.

இது மணிவாசகர் மார்கழிமாதம் திருவாதிரைக்குமுன் பத்துநாட்களின் விடியற்காலங்களில் கண்ட வெளிநிகழ்ச்சிகள்.

"மாதர்கொண் மாதர் எல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்ஈரைந்தே யாகிய தினங்கள் எல்லாம்
மேதரு மனைகள்தோறும் அழைத்து இருள் விடிவதான
போதிவர் தம்மிற்கூடிப் புனல்தடம் ஆடல்செய் வார்".

திருவாதவூரர் புராணம்.

பழைய வழக்கம்:

இத்தகைய ஒரு நோன்பு நீண்டநாட்களாகத் தென்னாட்டில் நிலவிவந்திருக்கிறது. காலப்போக்கில் காரணம் தெரியாமல் எத்தனையோ சடங்குகள் கைவிடப்பட்டன. இந்த மார்கழி மாதம் நீராடி நோற்கும் நோன்பு மட்டும் கைவிடப்படாமல் நம் நடைமுறையில் நல்லதொரு செயலாக இருந்துவருகிறது. தென்னாட்டில் வளர்ந்த சமயங்களும் இதைப் பின்பற்றின. சைவரும் வைணவருமேயன்றிச் சகலரும் இந்த மார்கழி நோன்பைப் பின்பற்றினர்.

இது மகளிர் செய்யும் நோன்புவகைகளில் ஒன்று என்பதை நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் மற்றும் திருவெம்பாவை திருப்பாவைகளிலிருந்து அறியலாம். மாணிக்கவாசகர் பெண்களுக்குரிய விளையாட்டுவகைகளில், அம்மானையாடல், பொன்னூசலாடல் முதலியனவற்றைத் தெய்விகப் பாடல் பாடிப் பெண்கள் விளையாடுவனவாக அமைத்துள்ளார். 'மார்கழிமாதம் திருவாதிரைக்கு பத்துநாள் முன் தொடங்கித் திருவாதிரையில் முடிவுபெறுவது மார்கழி நீராடல் என்றும்

பௌர்ணிமாந்த முறைப்படி திருவாதிரைப்பௌர்ணமி அன்று தொடங்கி அடுத்தபௌர்ணமிவரை தொடர்ந்து தைமாதத்தில் நடைபெற்று முடிவதுண்டாதலின் 'தைந்நீராடல்' என்றும் பெயர்பெற்றன என்று பண்டிதமணி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

> "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால்
> நீராடப் போது வீர்''

என்று திருப்பாவைகூறும். இந்நோன்பு முன்னர் கன்னிப்பெண்களால்மட்டும் நோற்கப்பெற்றுவந்தது. பின்னர் மகளிர் பலராலும் கைக்கொள்ளப்பெற்றது. நோன்புக் காலங்களில் கன்னிப்பெண்கள் சாணத்தைப் பிடித்து அதை அடையாகத் தட்டிவருவர். இது சந்திரனுக்கு நோன்பு முடியும் காலத்தில் எருவிட்டு இறைஞ்சுதற்காகக் கைக்கொள்ளப்பெற்றது போலும். ஐந்துமுதல் ஒன்பதுவரை வயதுள்ள கன்னிப்பெண்களே இச்செயலுக்கு உரியவர். மணிவாசகர் கூறிய திருவெம்பாவைக்கு 'இறைவனை நாயகனாகவும் உயிர்களை நாயகியாகவும் பாவித்துப் பாடப்பெற்ற' தென்றும் ஆண்மாக்களும் இது செய்தற்குரியர் என்றும் கூறில் எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க என்று கூறுவது மலைவாம். பெண்கள்,

> "ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்
> ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்
> பனிநீர் தோய்தலும் பாவை யாடலும்''

செய்தற்குரியர் என்பது பிங்கலந்தைச் செய்யுள். இந்நோன்பு பாவையாடல், அம்பா ஆடல், தைந்நீராடல் என்று இலக்கியங்களில் கூறப்பெறுகின்றது. தைந்நீராடலைப் பரிபாடல் விரிவாக்கூறும். இப்பிறழ்ச்சிக்குக் காரணம் மாதங்களைச் சூரியன் இராசியில்செல்லும்காலத்தை வைத்துக் கணிப்பதும், சந்திரன் நக்ஷத்திரங்களில் செல்லும் நாளை வைத்துக் கணிப்பதுமாக இருவழக்கங்கள் இருந்ததுதான். சூரியனை வைத்துக் கணக்கிடும் மாதப்படி இந்நோன்பு தைமாதமும் கொண்டாடப்பெற்று வந்தது. சந்திரனைவைத்துக் கணக்கிடும் முறைப்படி இன்று மார்கழிமாதம் நடைபெற்றுவருகிறது.

மற்றுமொரு செய்தி. மார்கழிமாதம் தேவர்கட்கு விடியற் காலம்என்னப்படுவது. இதற்குக்காரணம், தைமாதம்வடக்குநோக்கிச் சூரியன் செல்வதேயாகும். தெற்குநோக்கியிருந்த காலத்தில்

வடக்கில் இருள்சூழ்ந்திருந்ததாகக் கணக்கிட்டு, அப்பொழுது, திருக்கயிலாயத்தில் பெருமான் பள்ளிகொள்வார் என்றும், இமையோர் கண்ணிமைத்துறங்குவர் என்றும், தைமாதத்திற்கு முன் ஒருமாதம் அவர்கட்கு விடியற்காலநேரம் என்றும் கூறி இறைவனுக்குப் பள்ளியெழுச்சி பாடப்படுகிறது. ஆறுமாதம் தேவர்கட்கு பகல் என்றும் ஆறுமாதம் இரவென்றும்கொண்டு ஒருவருஷம் தேவர்கட்கு ஒருநாள் என்று கணக்கிடுவது பழைய முறை.

நீராடல்:

மார்கழிநோன்பில் நீராடல் மிகமுக்கியமானது. இலக்கியங்களில் நீராடல் ஒரு விளையாட்டு எனக் கூறப்படுகிறது. ஆடவரும் மகளிரும் கலந்து களித்துக்காலம்போவதேதெரியாமல் விளையாடுவார்களாம். ஆட்டனத்தியும் ஆதிமந்தியும் ஆற்றுநீராடலில் கலந்துகொண்டதை அகநானூறுகூறும். அறிஞர்கள் இதனை அறிவர். சிலப்பதிகாரம்போன்ற இலக்கியங்களில் இந்நீராடலைக் காணலாம். ஆடிப் பதினெட்டாம் பெருக்கும் இத்தகைய நீராடல் விழாத்தான். "தீதுநீங்கக் கடலாடியும் மாசுபோகப் புனல்படிந்தும்" வந்த செய்தியைப் பட்டினப்பாலை கூறுகிறது. மார்கழி நோன்பை நோற்கும் மங்கையரும் விடியற்காலம் எழுந்து ஆறுகளிலேனும், குளங்களிலேனும் நீராடுவர். நீராடிக் கரையேறிப் பாவை வழிபாடு செய்வர்.

பாவை வழிபாடு:

பாவை என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் காணப்படுகின்றன. பெண்தெய்வத்தையும் பெண்ணையும் இச்சொல் சிறப்பாகக்குறிக்கும். ஈரமண்ணால் பிடித்துவைத்து அதைப் பாவையாக அதாவது பெண்தெய்வமாகக் கௌரியாகவோ காத்யாயனியாகவோ பாவித்தல் மரபு. ஆடிப் பதினெட்டாம்பெருக்கன்று இம்முறை பெண்களால் செய்யப்படுவதாக இன்றும் இருந்து வருகிறது. கொல்லிப்பாவை என்ற சொல் கொல்லிமலையில் இருக்கும் பெண்தெய்வத்துக்கு வழங்கியபெயர். புறநானூறு மங்கையர் மணலால் செய்த பாவைக்கு மலர்சூட்டி வழிபட்டு நீராடுதலை,

'திணிமணல் செய்வுறுபாவைக்குக் கொய்பூத்தைஇத்
தண்கயம் ஆடும் மகளிர்"
—புறம்.

'கையால் திணித்துப் பிடித்துச் செய்யப்பெற்ற மணற்பாவைக்குக் கொய்துவந்து பூக்களைச்சூட்டி வழிபட்டு மீண்டும் குளிர்ந்த குளத்தில் குளிக்கும் மகளிர்' என்று குறிக்கிறது. மற்றுமொரு பாடல்,

''அரிமயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும்
................வஞ்சி''

—புறம்.

'திரண்ட முன்கையையுடைய மங்கையர் மணற்பாவைக்கு மலர்சூட்டி வழிபட்டு தண்பொருநையாற்றில் குளிப்பர்' என்று கூறும்.

நோன்புக்கு மூலகாரணம்:

இந்நோன்புக்குரிய காரணங்களுள் சிறந்தவை சில. மார்கழி நோன்பையே சிறப்பாகக்கூறும் மணிவாசகரின் திருவெம்பாவையும், ஆண்டாளின் திருப்பாவையும் ஒரே கருத்து உடையன. கருத்தளவில் மட்டுமல்ல கற்பனையளவிலும் சில ஒத்துள்ளன. திருவெம்பாவையும் மழைவேண்டிப் பிரார்த்திக்கிறது. திருப்பாவையும் 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும்மாரிபெய்து செந்நெல் செழித்து வளரவும், வள்ளற் பெரும் பசுக்கள் வாழவும் பிரார்த்திக்கிறது. மணிமொழி புகலும் மங்கையர், இறைவனைநோக்கி உன்னடியார் தாள் பணிவோம், அவர்க்கே பாங்காவோம், அவரே எங்கணவர், அவர் ஏவியதையே செய்வோம் என்று இறைஞ்சுவர். ஆண்டாள் 'என்றைக்கும் ஏழேழ்பிறவியும் உன்றனோடிருக்கவும், உனக்கே ஆட்செய்யவும் அருள்' என்று தன்நிலையில் வைத்துப் பிரார்த்திக்கின்றார்.

பாண்டிநாட்டில் பாய்ந்தோடும் வையையாற்றின் வெள்ளத்தில் தைநீராடிய தையலார் ஆற்றைநோக்கி 'தைநீரே! நாம் எம் காதலரை விரும்பியவாறு அடையவேண்டும்' என்று வேண்டுவார்களாம். ஒருசிலர், 'மது உண்டு மலரைப்பிரிந்து செல்லும் மதுகரம்போல எங்கணவர் எங்களை நீங்காமல்

உடன் இருக்கவேண்டும். எங்களுக்கு இளமை, செல்வம், சுற்றம் இவை நிலைத்திருக்கவேண்டும்' என்று வேண்டுவார்களாம்.

" நீதக்காய் தைநீர் நிறந்தெளிந்தாய் என்மாரும்
கழுத்தமை கைவாங்காக் காதலர் புல்ல
விழுத்தகை பெறுகென வேண்டுதும் என்மாரும்
பூவீழ் அரியிற் புலம்பப் போகாது
யாம்வீழ்வார் ஏமம் எய்துக என்மாரும்
கிழவர் கிழவியர் என்னுது ஏழ்காறும்
மழவீன்று மல்லற்கேள் மன்னுக என்மாரும் "

பரி. 11, 115, 121.

மழைவேண்டி இந்நோன்பு நோற்கும் செய்தியை பரிபாடல் மற்றுமோரிடத்தில் "வெம்பாதாக வியனிலை வரைப்பென" என்று கூறும். தரணி வாழவும் தாங்கள் வாழவுந்தான் இந்நோன்பைப் பெண்கள் பின்பற்றினர்.

நோற்கும் முறை:

இந்நோன்பை மேற்கொள்ளும் மணமாகாத மகளிர் விடியற்காலம் எழுந்து ஒருவரைஒருவர் துயில் எழுப்பி ஊரின்புறத்தேயுள்ள ஆற்றிலோ குளத்திலோ நீராட வேண்டும். நீராடி ஈரமணலைப்பிடித்துவைத்து அதைப் பார்வதி தேவியாகப் பாவித்து மலர்சூட்டி வழிபடவேண்டும். வழிபட்டு மேற்கூறியவாறு தான்வாழவும், தரணிவாழவும் பிரார்த்தித்துப் பின்னர் அவ்வுருவத்தை ஆற்றில் இட்டு மீண்டும் மூழ்கிக் கரை சேரவேண்டும். நோன்பு மேற்கொள்ளும் காலங்களில் 'நெய்யுண்ணாமலும், பாலுண்ணாமலும், மையெழுதாமலும், மலர் சூடிக்கொள்ளாமலும், தீங்குசெய்யாமலும்' இருக்கவேண்டும் எனத் திருப்பாவைகூறும். 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம்பாடி ஆடு' என்று திருவெம்பாவையும், 'நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்' எனத் திருப்பாவையும் தேவியை வழிபடலைக் கூறுகின்றன. ஆனால் திருவெம்பாவை 'ஏழைபங்காளனைப் பாடு, சிற்றம்பலக்கூத்தன் சீறடிகளை ஏத்திச் சுனைநீராடு என்றும் கூறுகிறது.

இலக்கியங்களில்:

பழைய இலக்கியங்களில் பரிபாடல் ஒன்றே இந்நோன்பை விரித்துக்கூறுகிறது. 'பனிமிகுந்து குளிர்செய்யும் காலமாகிய முன்பனிப் பருவத்தில் மார்கழிமாதத்தில் திருவாதிரைநாளில் சிவபெருமானுக்கு விழாக் கொண்டாடத் தொடங்கினர் அந்தணர். உலகம் மழையால் குளிர்க என்று அம்பா ஆடலைச் செய்யும் கன்னியர் முதிய பெண்களிடம் முறைகேட்டு விடியற் காலம் நீராடுகிறுர்கள். நீராடியபின் வாடைக்காற்ருல் குளிர் பொறுக்கமுடியாத அப்பெண்கள் அந்தணர் கரையில் செய்யும் வேள்வித்தீயருகே சென்று தம் ஈர ஆடையை உலர்த்துகின் றனர்.'

"பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிரை யாதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப
வெம்பாதாக வியனில வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட
பனிப்புலர் பாடிப் பருமணல் அருவியின்
ஊதைஊர்தர உரை சிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பின்
தையன் மகளிர் ஈரணி புலர்த்தர"

என்றும்,

"தாயருகா நின்று தவத்தைந் நீராடுதல்
நீயுரைத்தி வையை நதி."

என்றும் பரிபாடல் பகுதிகள் குறிப்பிடுகின்றன.

கலித்தொகையில் இரந்து குறையுறும் தலைமகன் தலை மகளைப் பார்த்து 'கன்னிப்பருவத்தில் பல பெண்களோடு சேர்ந்து தைந்நீராடினுயே அந்த நோன்பின் பயனை இன்று பெறுவாய்' என்று கணவனுகத் தன்னை அடையும் குறிப்பைக் கூறுகின்றுன்.

"வையெயிற்றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீராடிய தவந்தலைப் படுவாயோ" கலி. 59

மற்றுமொருபாடலில் தலைவன் 'என்னைக் கணவனாகப் பெறுவதற்கு தலைவி தைமாத நீராடலைச் செய்கின்றாள்' என்று கூறுகின்றான்.

"இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத்திங்கள் தண்கயம் படியும் பெருந்தோட்குறுமகள்."
கலி 80.

'குறிஞ்சிநிலம். கொடிச்சியால்காக்கப்படும்தினைக்கொல்லை. முற்றிய தினைக்கதிர்களை கைநிறையத் திருடி அதனை உராசி உமிபோக்கித் தன் இருகன்னங்களிலேயும் அடக்கிக்கொண்டிருக்கும் மந்தி ஒன்று மரக்கிளையில், மந்தியின் பக்கத்தில் அதன் காதற்கணவன் கடுவன். மழைபெய்கிறது. குரங்குகளின் முதுகு நனைகிறது. இதனைக்கண்ட புலவர் ஒருவர் 'மார்கழி நோன்பை மேற்கொண்ட மங்கையர் தைமாதத்தில் தாங்கள் நீராடி நோன்பை முடித்துத் தன் காதலரோடு பொங்கல் உண்டு மகிழ்வது போன்றது அந்தக்காட்சி எனக் கூறுவர். இது நற்றிணையில்,

"வான் பெயல்நனைந்த புறத்த நோன்பியர்
தையூணி ருக்கையில் தோன்றும்" நற். 22.

என்று கூறப்படுகிறது. சமாதானத்துக்குக் காத்திருந்தான் அந்தத்தலைவன். தோழி வருகிறாள். தலைவனே நின்புற ஒழுக்கத்தைக் காதால் கேட்கும்போதே கோபிக்கிறாள் தலைவி. கண்ணால் கண்டால் என்னாகுமோ தெரியவில்லை. ஊடிய அவளது கோபந்தணிய நீ தைமாதத்தில் பலரும் மூழ்கிக் குளிக்கும் பங்கயப் பொய்கைபோன்ற பரத்தையர் மார்பைக் கைவிடு. அப்பொழுதுதான் அவள் ஊடல் தணியும் என்று கூறுகின்றார். இது ஐங்குறுநூற்றில்,

"நறுவீ ஐம்பால் மகளி ராடும்"
தைஇத் திங்கள் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணும் நின்பரத்தை மார்பே" ஐங். 84.

என்பது பாடற்பகுதி.

ஆதிரை விழா:

பரிபாடலில் ஆதிரைநாளில் சிவபெருமானுக்கு விழா எடுப்பதாகக் கூறப்படுகிறது. திரு ஆதிரை நாளில் நடராசப் பெருமான் திருவீதிவலம் வருவார். திருவாதிரை நக்ஷத்திரம் சிவபெருமானுக்குரியது என்பதை, 'ஆதிரை நாளுகந்தானும்' என்பது முதலிய தேவாரப் பாடற் பகுதிகளால் அறியலாம். நோன்பு முடித்துப் பெண்கள் அணிகளணிந்து புதிய ஆடை உடுத்தி பாற்சோற்றில் நெய்பெய்து இனிமைகூட்டி உண்பர் எனத் திருப்பாவை கூறும். களி உண்ணுதல் இன்றையமரபு. மார்கழிநோன்பின் முடிவில் பெண்கள் பாவைத்தெய்வத்துக்குப் பாயசம் நிவேதிப்பது மரபு. களி உணவும் உண்பர் போலும்.

ஆண்டவனைப்பற்றி அறிஞர்கள்

உன்னுடைய வாழ்க்கையில் இறைவனைப்பற்றிய அனுபவம் இல்லையாயின், உடனே இறைவனை உண்டு பண்ணிக்கொள். மாபெரும் சக்தி ஒன்று உண்டு என்பதை நான் உணர்கிறேன்.

எட்டிரிக்கன்பேக்கர்.

தாயும் தந்தையும் நம்மீது அன்புள்ளவர்தாம். ஆனால் இறைவனே நம்மீது அளவற்ற அன்புள்ளவன்.

டேனிஷ் பழமொழி.

மனிதனுடைய மனச்சாட்சியே இறைவனுடைய அசரீரியாகும்.

பைரன்.

(மு. இராம.)

கந்தபுராணக் கவிச் சித்திரம்

ச. த.

கட்டுரை எண் 9

சரபத்தைக் கண்ட சிங்கம்:-

சிங்கம் விலங்குகட்கெல்லாம் அரசன்தான். அதிலும் குட்டி. இளமையும் வலிமையும் ஊக்கமும் மிடுக்கும் எல்லாந்தான் இருக்கின்றன. தன்காட்டிலே விலங்குகளைக் காட்டிலும் பீடுநடையை உடையதுதான் சிங்கம். வள்ளுவர் கூட இதனைப்பார்த்துக் கற்பரசியின் கணவனுடைய பெருமித நடைக்கு ஒப்பிடுகின்றார். அத்தகைய சிங்கக்குட்டி ஒருநாள் ஒரு சரபத்தைப் பார்த்துவிட்டது. அவ்வளவுதான்! சிங்கக் குட்டிக்கு உடம்பெலாம் குப்பென்று வியர்த்துவிட்டது. கால்கள் தடுமாடுகின்றன. கண்களில் மருட்சிவாயிலாக அச்சம் காட்சியளிக்கின்றது. அதனால் வாயில் கவ்வியிருந்த யானையின் மூளையையும் மெய்ம்மறந்து நழுவவிட்டுவிட்டது. மயங்கிக் கீழேவிழுந்துவிட்டது. அதுபோல மன்மதன் மகா சரபமூர்த்தியாகிய தவத்திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானைக் கண்டான். அச்சத்தால் உடல் வியர்த்தான். நடுங்கினான். கையிலுள்ள வில்லும் அம்பும் சோர்ந்தன. மயங்கி வீழ்ந்தான்.

மன்மத மேகம் விழுந்தது:-

மன்மதனாகிய மேகம் குருநாதனைக் கண்டு அஞ்சியது. புருவமாகிய வில் வளைந்தது. வியர்வை மழையாகக் கொட்டியது. மயங்கி வீழ்ந்த வேகத்தில் மார்பு பூமியில் 'படார்' என்று அடிபட்டது. அது இடிபோலிருந்தது. பூமியின்மேல் அப்படியே மன்மதமேகம் மயங்கிக்கிடக்கிறது.

கண்டாள் ரதிதேவி: புரட்டிப் புரட்டிப் பார்த்தாள் பேச்சில்லை மூச்சில்லை. சரிதான் இறந்துவிட்டார்போலும் என்று எண்ணினாள். அப்படியே வாரி எடுத்தாள். கையால்

ஏந்தினுள். தேறுதல் கூறினுள். மன்மதனுக்கு ஒருவாறு உணர்ச்சிபிறந்தது. நொந்துகொண்டே துயிலுகின்றுன்.

'சிரிப்பாலே மூன்று கோட்டைகளைப் பொடியாக்கின இறைவனேடு சண்டையிடுக' என்று என்னைத் தேவர்கள் அனுப்பினுர்களே! அன்றே எனக்கு அழிவுக்காலம் தொடங்கி விட்டது – சந்தேகமில்லை! இறைவனைப் பார்த்த உடனேயே என் உயிரைக் காணவில்லையே! அப்படியிருக்க என்கை அம்பா! வெற்றிகாணப்போகிறது? என்னபைத்தியக்காரத் தனம்.

புயல்காற்றின்முன் கைவிளக்கு:-

அடிக்கிறது புயல்காற்று. அதற்கு எதிர்த்து ஒரு கைவிளக்கைக்கொண்டு சென்றுல் என்னமதியாகும். கணப் பொழுதாவது அது ஒளிவிடுமா? அதுபோலத்தான் இறை வன்முன் நான் சென்றுலும். என்னைப் பிரமன் முதலிய தேவர்கள் அனுப்பிவிட்டார்கள். இன்னும் கணநேரத்தில் அவர்பார்வையாற் சாம்பலாகப்போகிறேன்.

தாக்கினுல் வலிபெற் றுள்ள மருத்தின்முன் தனித்த தீபம்
போக்கினுல் நிற்ப துண்டோ அனையது போலத் தேவர்
வாக்கினுல் மனத்தால் எட்டா வள்ளல்முன் உய்த்தார் அன்னுன்
நோக்கினுல் இனிச்சில் போதின் நுண்பொடி யாவன் போலாம்.

(காமதகனம் 82)

[தாக்கு - மோதியடித்தல். மருத்து - காற்று. தனித்த தீபம் என்றது ஏற்றிக்கொள்வதற்கும் வேருென்றில்லாத கைவிளக்கு. போக்கினுல் - செலுத்தினுல். வள்ளல் என்றது கருணையுள்ளம் படைத்தவர், ஒருக்கால் தீமை வருமாயினும் அவரருள் வழங்குவர் என்ற குறிப்பைக்கொண்டு. நோக்கினுல் - பார்வையால்]

விதியை எப்படி வெல்லமுடியும்?

திருவுள்ளத்தில் எண்ணினுல் போதும். இறைவன் எல்லாவுலகத்தையும் அழிக்கும் எல்லையற்ற ஆற்றலையுடை யவர். அப்படிப்பட்ட இறைவனேடு சண்டைபோடப்

போகிறேன். அதுவும் பூத்தம்லரமபைக்கொண்டு. நினைத்துப் பார்த்தால் எனக்கே சிரிப்பு சிரிப்பாகத்தான்வருகிறது. எல்லாருக்கும் பிறப்பை விதிக்கிற விதியென்னும் பெயர் படைத்த பிரமனுகத்தான் இருக்கட்டும். ஆரை விட்டது விதி. எல்லாம் அவன் அருள். இனி நான் சும்மா தூங்கிக் கிடக்கக்கூடாது. வில்லேயும் அம்பையும் எடுக்கிறேன். தொடுக்கிறேன். நடந்தது நடக்கட்டும் என்று எண்ணிக் கொண்டே பரமசிவன்பக்கத்திற்சென்று சண்டைக்கு ஆயத்த மானுன். மேருமலேயின் தெற்குச் சிகரத்தின் நிகழ்ச்சியிது.

மனேவதிநகரிலே:-

இந்திரன்: என்ன பிரமதேவரே! சிவனிடம் மன்மதனே அனுப்பினீரே; அவன்நிலே எப்படியாயிற்று என்று பார்க்க வேண்டாமா? அவனேமட்டும் அனுப்பிவிட்டுச் சும்மா இருக்க லாமா? வாரும் போகலாம். என்று அவனேயும் அழைத்துக் கொண்டுவேகவேகமாகக் கைலேமலேச்சாரலிலேஒருபக்கத்தில் மறைந்துநிற்கிருன். சிவபெருமானேத் தியானித்து நின்ருர் கள் எல்லாரும்.

சாகப்போகிறவனுக்குச்சமுத்திரம் கணேக்காலளவுதான்:-

மன்மதன்: யோசித்துப்பயனென்ன? நடக்கிறது நடக்கப் போகிறது. இடிக்குப்பயந்து வானத்தின்கீழிருப்பதா? சாவது நிச்சயம். இந்தச் சாந்த சமுத்திரமாகிய சதாசிவமூர்த்தியைக் கண்டஞ்சலாமா? நினேத்ததை முடிப்போம் என்று ஐந்து பாணங்களேயும் ஒருசேரவிட்டான். பயத்தால் இப்படிச் செய்தான். மற்றவர்கள்மேல் விடுவதாயிருந்தால், முன்னே தாமரையம்பை விடுவான். அவன் அவளேயும், அவள் அவனேயும் நினேத்துத் தடுமாறச்செய்வான். வேடிக்கை பார்ப்பான். பின் மாம்பூவைப் பிரயோகஞ்செய்வான். நினேப்பு பிழைப்பைக் கெடுக்கும். உடம்பெல்லாம் தேமல் படரும். அதனேக்கண்டு தன்னுற்றலுக்கு மெச்சுவான். இப்படியே ஒன்று ஒன்ருக முல்லேவரைவிட்டுக் கொன்றும் மகிழ்வான். அதற்கு இங்கே நேரமில்லே. எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து விட்டான்.

எறிதரு கணிச்சிச் செங்கை யீசன்மேல் இலக்கம் நாடும்
குறியினர் போல நின்ற கொடுந்தொழில் மாரன்; துஞ்சும்
நெறியினர்க்கு அச்சம் உண்டோ நினைத்தது முடிப்பன் என்னு
நறுமலர் வாளி ஐந்தும் நாதன்மேற் செல்ல விட்டான்.

(காமதகனம் 88.)

[கணிச்சி - மழு. இலக்கம் - குறி. குறியினர் - இலக்குப் பார்த்து நிற்பவர். மாரன் - மன்மதன். துஞ்சுநெறியினர் - இறப்பவர்கள். வாளி - அம்பு.]

அவ்வளவுதான். இறைவன் கொஞ்சம் கண்விழித்துப் பார்த்தார். நெற்றிக்கண் மன்மதனைச் சாம்பலாக்கிவிட்டது. எங்கும் ஓரே புகைகவ்விக்கொண்டது. அந்தக்காட்சி எப்படியிருந்தது தெரியுமா? கச்சியப்பரைக் கேட்போம்!

ஓரே வெள்ளையான கயிலைமலை. அதிலே கரும்புகையும் செந்தீயும் எங்கும் கதுவிநிற்கிறது. முன்னொருகாலத்தில் தேவர்களும், அசுரர்களும்கூடிப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது பாற்கடலின் நடுவிலே கரிய விடம் எழுந்ததே அதனைப்போல இருந்தது என்கிறார்.

ஆலையஞ் சிலைவேள் ஆகம் அழல்படக் கயிலை யின்கண்
ஏலவெம் புகையும் தீயும் எழுதரும் இயற்கை நாடின்
மாலயன் முதலோர் யாரும் மதித்துழி விரைந்து பாலின்
வேலையின் நடுவுதீய விடமெழுந் தனைய தம்மா.

(காமதகனம் 90.)

[ஆலை அம் சிலை - ஆலையில் இட்டு சாறுகொள்ளத்தகும் கரும்பாகிய வில். வேள் - மன்மதன். ஆகம் - உடல். மதித்துழி - கடைந்தகாலத்து. பாலின் வேலையின் நடுவு - பாற்கடலின் நடுவில்.]

இதனைக்கண்டார் நந்திதேவர். இறைவன் நெற்றிக்கண் தீயாசுட்டது. இல்லை! இல்லை! சிவபெருமானையும் வென்று

விடுவேன் என்று துணிந்துவந்தானே! அவன் செய்கையே அவனைச் சுட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில், இரதி, வயிற்றிலும், வாயிலும் அடித்துக்கொண்டு வந்தாள். நந்தியம்பகவான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினுள். நந்திதேவர் சொல்லுகிருர்; அம்மா! இவையெல்லாம் இறைவன் ஆன்மாக்களுடைய பொல்லாக்குணம் போக்கி ஆட்கொள்ளுகின்ற முறை. கவலைப்படாதே; இப்போதே உன்கணவனை எழுப்பித்தருவார் என்று சொன்னுர். அதனைக் கேட்டு அனைவரும் ஆரவாரித்தனர்.

ஐந்தொகை யாற்றின் மாடே அமலனை நினைந்து நோற்ற
நந்தியந் தேவன் இன்ன நவிறலும் அவற்சூழ் கின்ற
அந்தமில் கணத்தோர் கேளா அகிலமுய் பொருட்டால்எங்கோன்
புந்திகொள் அருளின் செய்கை போற்றெடுத் தனராய் உற்ருர்.

(காமதகனம் 94.)

[ஐந்தொகை யாற்றின் மாடே - திருவையாற்றுத் தலத்தில், சிலாதமகரிஷியின் புதல்வராகத் தோன்றி, சிவபெருமானை நினைத்துத் தவஞ்செய்த. இன்ன - இத்தகைய ஆறுதல் மொழிகளை. அகிலம் உய்பொருட்டால் - உலகமுய்யும் பொருட்டாக. புந்திகொள். அருளின் செய்கை - திருவுளங்கொண்ட அருளிப் பாட்டினை.]

“ஞானசம்பந்தம்”

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

ஒவ்வொரு ஆங்கில மாதம் 10உ வெளிவரும்.

ஆண்டுக் கையொப்பத் தொகையை முன்னரே செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

செயலாளர்,
“ஞானசம்பந்தம்” அலுவலகம்,
தருமபுரம், மாயூரம் P. O.

அறிவியலும் வாழ்வும்

திரு. ந. சம்பந்தம் B.A., (Hons) அவர்கள்
தமிழ் விரிவுரையாளர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

உலகிலே மக்கள் வாழ்க்கைக்கு நுண்பொருள் ஆராய்ச்சியும் பருப்பொருள் ஆராய்ச்சியும் இன்றியமையாது வேண்டற்பாலனவாகும். உலகிலே காணப்படும் பொருள்களின் தன்மைகளைக் கருவிகளின் துணைகொண்டு ஆராய்ந்து அவைகளின் தன்மைகளையறிந்து அவைகள் மக்கள் வாழ்க்கைக்கு எவ்வாறெல்லாம் பயன்படுமென்று அறிந்து வாழ்க்கையை எளிதாகவும் இன்பமுடையதாகவும் ஆக்கிக்கொள்வதே பருப்பொருள் பற்றிய ஆராய்ச்சியின் பயனாகும். நமது புறக்கண்களுக்கு எட்டாதமனம், உயிர் முதலிய அகவுறுப்புக்களையும் இவ்வுலகை இயக்குகின்ற பரம்பொருளையும் பற்றி ஆராய்ந்து செய்யத்தகுவன இவை செய்யத்தகாதன அவை என்று அறிந்து ஒழுகி மறுமையின்பம் பெறுவதே நுண்பொருள்பற்றிய ஆராய்ச்சியின் பயனாகும். உலகின் பிற பகுதிகளிலே அறிவு விழிப்படையாத காலந்தொட்டே நமதுநாட்டுப் பெரியோர்கள் இவ்விரு வகை ஆராய்ச்சியிலும் மேன்மைபெற்று இன்புற்றிருந்தார்கள். நுண்பொருள் ஆராய்ச்சியேஇடையறு இன்பமளிப்பதென்று அறிந்து சடப்பொருள் ஆராய்ச்சியில் அதிகமாக ஈடுபடவில்லை. மிகப் பிற்காலத்தில் மேலைநாட்டு மக்களில் பலர் சடப்பொருள் ஆராய்ச்சியில் பெரும்பங்கு கொண்டு தங்கள் வாழ்க்கைகளையே அர்ப்பணித்தார்கள். ஒரு பொருளின் முடிந்த தன்மையையடைய பல அறிவாளிகள் தங்கள் வாழ்க்கைகளை அர்ப்பணித்தார்கள். ஆனால் நம்நாட்டில் திண்ணியராக எத்தனைபேர் நுண்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்களோ, அத்தனை பேரும் தனித்தனியே இன்பம் பெற்று நமக்கும் வழிவகுத்துச் சென்றுள்ளார்கள்.

இக்காலத்தில் நம்நாட்டு மக்கள் மேல்நாட்டு ஆராய்ச்சியினால் எழுந்த பொருள்களைக்கண்டு அங்காந்தவாயர்களாகி நம்நாட்டுப் பண்டைப் பெருமைகளை மறந்து "மேல்நாட்டவரின் பெருமை என்னே! நம்நாட்டவரின் அறியாமையென்னே!

என்றும் பிதற்றுகின்றார்கள்.'' ஆனால் நம்நாட்டுக் கலையறிவினையும், பண்பாடுகளையுங்கண்ட மேல்நாட்டவர் நம்முன்னோர்களின் பெருமையினையுணர்ந்து போற்றுகின்றார்கள். இயல்பாகவே சடப்பொருள் ஆராய்ச்சியில் பெருங்கவலைகொள்ளாத நம் முன்னோர்கள் ஆங்கிலேயர் ஆட்சியினாலும் பொறியியல் அறிவில் குன்றிவந்தார்கள். தூலப்பொருள் ஆராய்ச்சியில் உச்சநிலையடைந்தவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியிலும் இருந்திருக்கின்றார்கள். இக்காலத்தில் மேலைநாட்டவர் கருவிகளின் துணைகொண்டு கண்டுள்ள உண்மைகளில் சிலவற்றை நம் முன்னோர்கள் கருவிகளின் உதவியில்லாமலே கண்டுள்ளார்கள் என்றால் நம் முன்னோர்களின் அறிவியல்தான் என்னே! நம்நாட்டில் கிடைத்த தாதுப்பொருள்களைக் கண்டறிந்து அவைகளைத் தனியாகவும், சேர்க்கையாகச் சேர்த்தும் பயன்படுத்தியுள்ளார்கள். மக்களுக்கு ஏற்படும் பிணி வகைகளைப் பகுத்துணர்ந்து அவைகளைப் போக்கிக்கொள்ள மருந்துகளையும் கண்டார்கள். இதற்கும் மேலாக மருந்துகளே இல்லாமல் பிணிகளைப்போக்கும் யோகாசனவகைகளைக் கண்டார்கள். நம்நாட்டு எண்ணெயாக்கும் செக்கினைக் கண்டு ஆச்சரியமுற்று நம் அறிவுடைமையைப் பாராட்டுகின்றான் ஆங்கிலேயன், என்று ஒருபெரியார் கூறக்கேட்டுள்ளேன்.

நம் நாட்டு முன்னோர்கள், உயிர்ப் பன்மைகளெல்லாம் சூரிய வொளியால்தான் வாழ்கின்றனவென்றும், பசும் புல் தலை காண்பதற்கு இன்றியமையா விசும்பின் துளிக்குக் காரணம் சூரியனே யென்றும், அறிந்து கைம்மாறுவேண்டாக் கடப்பாடுடைய சூரியனைப் பரவினார்கள். இப்பொழுது மேல்நாட்டுப் பரிசோதனை முறையால் சூரியவொளியிலுள்ள செடிகளின் இலைகளில்தான் மாவுப்பொருள் உண்டாகிறதென்றும் இருட்டிலுள்ள செடிகளின் இலைகளில் மாவுப்பொருள் உற்பத்தியாவதில்லை யென்றும் அறிகிறார்கள். சிறிது காலத்திற்கு முன்னர்ச், சந்திர மண்டலத்தில் குடியேறலாமென்று பரிசோதனைகள் பல செய்தனர், ஆனால் ஜலவாயுக்குண்டைக் கண்டு பிடித்து அதன் அளவிறந்த சக்தியினையுணர்ந்ததும் சந்திரமண்டலம் ஜலவாயுவால் நிரம்பியுள்ளதென்று அவ்வெண்ணத்தைக் கைவிட்டனர். நமது முன்னோர்கள் எல்லா உயிர்களையும் வளர்க்கக்கூடிய ஒரு சக்தி சந்திரவொளிக்கு உண்டென்று அறிந்திருந்தார்கள். எனவேதான்

" திங்களைப் போற்றுதும்
திங்களைப் போற்றுதும் "

" ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும் "

" மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும் " (சிலப்பதிகாரம்)

என்று வாழ்த்தினார்கள் வணங்கினார்கள்.

தொலைநோக்குக் கண்ணாடி இல்லாத காலத்திலேயே நம் முன்னோர்கள் விண்மீன்களுக்கும், கிரகங்களுக்குமுள்ள வேறுபாடுகளை யறிந்து, பெரிய கிரகங்களுக்குச் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது முதலிய பெயர்களையும் சூட்டினார்கள். அவைகள் ஒன்றையொன்று இழுத்து (ஆகர்ஷித்து) நிற்கின்றனவென்றும் அறிந்திருந்தார்கள்.

" அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
யொன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் றுன் அணுப்புரையச்
சிறியவாகப் பெரியோன் தெரியின் "

என்ற மணிவாசகப்பெருமானது மணிமொழிகள் உன்னுந் தோறும் உன்னுந்தோறும் உவமையிலா இன்பமூட்டுகின்றன. புவி, நீர், தீ, காற்று, விண் ஆகியவைகளுக்கு எத்தனை எத்தனைத் தத்துவங்கள் என்று அறிந்துள்ள முன்னோர்களின் பகுத்தறிவைப் பாராட்டாமலிருக்க முடியுமா!

" பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி "

(திருவாசகம்)

[தொடரும்.]

அம்மா அப்பா

வித்துவான், திரு. சேதுசுப்பிரமணியப்பிள்ளை அவர்கள்

தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

ஒரு பெரியவர், ஒருநாள் ஓர் அழகிய காவியுடையணிந்து முழுநீறுபூசிய முனிவர் வடிவுடன் சென்றுகொண்டிருந்தார். கையில் நானூறு ஐந்நூறு பக்கங்கள் அடங்கிய நூல் ஒன்று வைத்திருந்தார். மேல்பகுதி அழகிய சிவந்த பட்டினுல் அணி செய்யப்பட்டிருந்தது. சென்ற பெரியவரையும், அவர் கையில் அழகுசெய்யும் நூலையும் கண்ட நான், அவரை நெருங்கி வணங்கினேன். வணங்கின என்னை வாழ்த்துரைகள் சொல்லி புன்முறுவல்பூத்த முகத்துடன் இன்சொற்கள் வழங்கிக் கொண்டே சென்ருர். நானும் அவர் சொன்ன சொற்களில் கருத்தைச் செலுத்திப் பின்னேசென்றேன்.

செல்லும்போது, "சுவாமி! தங்கள் திருக்கரத்தில் அழகு செய்யும் நூல் எப்பொருளை அறிவிப்பதோ?" என்றேன். "எல்லா இடத்தும் எங்கும் நிறைந்து நிற்கும் மெய்ப்பொருள் எழுத்து வடிவிலும் இருக்கத்தானே வேண்டும்? இவ்விதம் இன்பமயமாக இருப்பதை எளியமக்களும் எளிதில் அறியும் விதமாகப் பலநெடுங்காலம் தவம்கிடந்து கண்ட காட்சியை உருவடிவில் எழுதிக்காட்டுவது எளிய காரியமா? அந்த அற்புத உருவத்தை எழுத்து வடிவத்தில் அமைத்துக்கொண்டிருப்பது இந்நூல்- இந்த அற்புத உருவமே உலகெலாம் படைத்தளித்துள்ள பெருமையுடையது" என்ருர் குருநாதர்.

அப்போது நான் குருவை வணங்கி, 'அறிவுத்தெய்வமே! பெருமையுடைய அற்புத உருவத்திற்கு இட்ட பெயர்களில் ஏதாவது இரண்டு சொல்லிக்கொடுங்கள்" என்று வேண்டி வழிபட்டேன். "ஒருநாமம் ஓர் உருவம் இல்லாதது அப்பரம் பொருள்? அதற்குச் சொன்ன பெயர்கள், 'அம்மா அப்பா' என்ருர். "அம்மையே அப்பா ஒப்பிலாமணியே" என்ற பாடலையும் உபதேசம் செய்தருளினுர்.

உபதேசம்பெற்ற எனக்குப் பழைய அறிவு நினைவிற்கு வந்தது. சந்தேகம் பிறந்தது. ஐயம், திரிபு, அறியாமை, தோன்றியபோது அவற்றை நீக்குதற்குரியவர் குருவே எனத் துணிந்து "ஞானகுருவே! எளியேன் மனதில் ஓர் ஐயம் தோன்றியது. அதனை நீக்கி யருளவேண்டும்" என்று விண்ணப்பித்தேன்.

ஞானகுருவும் "ஐயத்தைக்கூறு" என்று சொன்னார். எனக்கு ஒரு தம்பி தோன்றினான். நானும், எனது தந்தையும் மற்றும் சில உறவினரும் வெளியே இருந்தோம். எனது தாய் கரு உயிர்த்த அறையில், சில உறவினப் பெண்களும் பணிப் பெண்களும் இருந்தனர். பல பெண்மணிகள் உள்ளிருந்ததால் தம்பி பிறந்தவுடன், 'வீறு, வீறு' என்று அழுத ஓசை வெளியே கேட்கவில்லை. குழந்தை பிறந்தது என்ற செய்திமட்டும் நாங்கள் கேட்டோம். உடனே எனது தந்தையார், "குழந்தை அழு கிறதா?" என்று கேட்டார். "வீறு, வீறு என்று கதறுகிறது" என்று உள்ளிருந்தவர்கள் சொல்ல எனது தந்தையார் மன மகிழ்ந்தார். அம்மகிழ்ச்சியைப் புன்முறுவல்மூலம் என்னிடம் "உனக்குத் தம்பி பிறந்துள்ளான்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

அதுசமயம் நான் அப்பாவைப்பார்த்து "அப்பா! தம்பி அழுகிறான் என்பதைக் கேட்டுச் சிரிக்கலாமா? நாமும் அழ அல்லவா வேண்டும்" என்றேன். பிற உயிர் அழும்போது நாமும் அழுதல் அல்லவோ? நீதி" என்றேன். அதற்குத் தந்தை "இதுசமயம் பிறந்த தம்பி நன்றாக அழுதால் உயிரோடுள்ளான் என்பது குறிப்பு. இக்குறிப்பால் மகிழ்தல்வேண்டும்" என்றார். தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்ற பழமொழிப்படி அவர் சொல்லைத் தலைமேற்கொண்டு மேலும் நினைக்கும்போது, என் நிலைமை நினைவுக்கு வந்தது?

நானும் இவ்வுலகில் தோன்றிய அன்று கதறிக்கதறி அழும் போது தந்தை, "குழந்தை அழுகிறதா? அழுகிறதா?" என்று கேட்டு எனது அழுகையை விரும்பி ஆனந்தித்துத்தானே இருத்தல்வேண்டும். ஆதலால் அழ அழப் பிறந்த மகனைக்கண்டு தந்தையும், மற்றவர்களும் ஆனந்தித்தல் உலகியற்கை என்பதை அறிந்தேன். மேலும், அழ அழப் பிறந்தது ஆ[illegible] குழந்தை என்றதும் தாய் ஆனந்தப்பட்டாள்.

தன் மகன் கல்வி கேள்விகளினுல் சான்றவன் என்று கேட்டபோது மிகவும் மகிழ்வாள் என்று நான் நீதிநூலாகிய வள்ளுவர் நூலைக் கற்றபோது அறிந்தேன்.

" ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருே னெனக்கேட்ட தாய் ''

இதனுல் அழ அழப்பிறந்த நாம் ஆனந்தமாக வாழச் சில அறங்களை உபதேசித்தருள எனது தந்தையை வேண்டினேன். அப்போது அப்பா, உடனிருந்த மற்றவர்களும் அறியக் கூறிய தாவது :-

'' இவ்வுலகில் பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்வோம், இளமைக்காலம் இப்போது, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சோம்பலாய் இருந்துவிடாதே, பிறந்த உயிர் இறப்பது நிச்சயம். ஆதலால் அறிவு வந்தவுடன், புகழ்ச்சோதி நிலைத் திருக்கும்படியான செயலை இவ்வுலகில் செய்! அதுவே நிலைத்த உனது பெருமையைக் காட்டும் பேரானந்தம் தரும். சோம்பி இருந்தால் இறப்பு வந்துவிடும். நெருப்புப் பிடித்த ஆடையுடை யவன் தன்னைக் காத்துக்கொள்ள விரைந்து முயற்சி செய்வது போல விரையவேண்டும் மகனே! நீ தூங்குவதுபோல ஒருநாள் இறந்துவிடுவாய். கிடைத்த காலத்தில் நல்லதைச் செய்துவிடு. காலத்தின் அருமையையும் விரைவின் வேகத்தையும்

" உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.''

என்று எளிய சொல்லில் வள்ளுவர் கூறினுர்'' என்ருர்.

மேலும் அவர் சொன்னுர்:- பிறந்த மக்கள் அன்பு வாழ்க்கை வாழவேண்டும். அன்பில்லாத வாழ்க்கை மிருக வாழ்க்கையாகும். மக்கள் வாழ்க்கை ஆகாது. எறும்பு முதல் எல்லா உயிர்களுக்கும், தாவரங்களுக்கும் பொதுவாக உஷ்ணத் தையும், வெளிச்சத்தையும் தரவே சூரியன் காலையில் கிழக்கில் வானில் தோன்றுகிருன். தோன்றியவன் உஷ்ணத்தை எல்லா உயிர்களும் தாங்கப், புழுமட்டும் பகல் 12 மணிக்குத் துடியாய்த் துடிக்கிறது. துடிப்பை உற்று நோக்கியவர்கள் மிகவும் பரிதாபப் படுவார்கள், ஏன்? பொதுவாக வானில்தோன்றிய சூரியன்

காய்வது புழுவினிடத்தில் உள்ள வெறுப்பா? அல்லது பகையா? அல்லது ஏளனமா? பிறந்த மக்களே! ஒருவர் அன்பில்லாத வாழ்க்கை வாழ்ந்தால் அவரை நீதித்தெய்வம் புழுதுடிக்கும் துடிப்பைப்போலத் துடிக்க விட்டுவிடும். மிருக வாழ்க்கை வாழக்கூடாது. வாழ்ந்தால் இயற்கையே தண்டனையைத்தரும், எலும்பில்லாத புழுவிற்கு இயற்கையான சூரியனே தண்டனை அளிப்பதுபோல இயற்கைத் தெய்வமே தண்டனையைத்தந்து துடிதுடிக்கச் செய்யும். இந்த உண்மைகளை

"என்பு இலதனை வெயில் போலக்காயுமே
அன்பு இலதனை அறம்"

என்ற குறளில் உவமையின் வாயிலாக அச்சம் உண்டாகும் படிச்சொல்லியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகையார். அன்போடு வாழ்வதற்கு இந்த உபதேசம். எவ்வளவு போற்றத்தக்கது!

அன்புடன் வாழ்ந்தால் அப்போது ஆனந்தம் உண்டாகும். வானில் உள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரம், முதலியன நமக்கு வெளிச்சம்தந்து உதவும். இவ்வுதவியைப்பெற்று வாழும் மக்களாகிய நம்மிடம் விளக்கு ஒன்றுள்ளது, அதைச் சுடர் விளங்கச் செய்து வாழ்வதே மேலான வாழ்க்கையாகும். அவ் விளக்குத்தான் பொய்யா விளக்கு. இவ்விளக்கை விளங்கச் செய்து பாடுபட்டால் வானில் உள்ள ஏனைய சுடர்கள் இதற்கு ஒப்பாகா. செந்தீயும் இதற்கு ஒப்பாகாது. ஏனென்றால் மக்கள் மனதில் உள்ள பொய் என்ற இருட்டை வாய்மை என்ற வெளிச்சமே நீக்கும். ஏனைய வெளிச்சங்கள் போக்கா? ஆதலின் பொய்யா விளக்கை என்றும் இவ்வுலகில் நிலைத்திருக்க நாம் நமது உள்ளங்களில் ஏற்றவேண்டும். அது சிறந்தது.

"எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

அழ அழப் பிறந்த நாம் ஆனந்தமாக வாழ அன்போடு இருக்கவேண்டும். மேலும் வாய்மையுள்ள சூரியனாக விளங்கி ஏனைய சுடர்கள் போக்காத பொய்யிருளை ஓட்டவேண்டும். இவ்வித வாழ்வே இன்பவாழ்வு. இதை வள்ளுவர் வாய்மை என்ற பெயரால் உபதேசித்திருக்கிறார். அதன்படி ஒழுகலே சிறந்த வாழ்க்கையாகும்."

இவ்விதம் தந்தை சொன்னதை அறிந்து அவ்விதமே நடந்து வந்திருக்கிறேன். 'சுவாமி! இன்று சர்வலோகமும் படைத்தவரை அப்பா என்கிறீர்கள். அவர் எங்குள்ளவர்? எப்படிப்பட்டவர்? எவ்விதமாக நம்மை ஆட்கொள்பவர்? என்று கேட்டேன். இந்த ஐயங்களைப் போக்குகின்றவகையிலே குருமுனிவர் கையில்வைத்திருந்த புத்தகத்தைத் திறந்து இப்பாடலைச் சொன்னார்.

திருவாசகம். கண்டபத்து நிருத்ததரிசனம் 3-வதுபாடல்.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

இறைவன் தன்னுடைய வடிவத்தை யான் அறியாத காலத்திலே, என் அறிவில் அவன் புகுந்து, உள்ளத்தில் நிலை பெற்று, என்எண்ணத்தைத்திருத்தி, உடம்புகொண்டு குருவாக எழுந்தருளிவந்து, திருவருளினால் என்னை ஆட்கொண்டருளியவனாகிய திருத்துருத்தியென்னும் திருப்பதியில் வீற்றிருந்தவனது இன்பம் பயக்கும் மங்களமான திருவடியை ஆசையோடு நாயனைய அடியேன் அழகுகொண்ட தில்லைத் திருச்சபையிற் காணலுற்றேன், என்ற பொருளையும் சொல்லி நான் உலகம் படைத்த அப்பாவை அறிவதற்கு முன்னர் அவர் என்னைப் பக்குவப்படுத்தி ஆண்டதன்மையையும் விளக்கினார்.

சுந்தரமூர்த்திநாயனாரை இவ்வுலகில் பிணிநீக்கி ஆட்கொண்டவர் திருத்துருத்தியார். அவரே குற்றாலத்திலுள்ள இறைவர். சுந்தரருக்கு உடல்நோய் கார்த்திகை ஞாயிறன்று காவிரியில் மூழ்கி வணங்கிய பெருமையால் நீங்கிற்று என்ற வரலாற்றைக் குருநாதர் கூறினார். பின் திருத்துருத்திப் பிரான் கோயிலுக்கு அழைத்துச் சென்று சர்வலோகநாயகியையும், தில்லைப்பிரான் முதலிய எல்லாப்பிரான்களும் தோன்ற ஆண்டவன் காட்சியளிக்கும் பெருமையையும் காட்டினார். நான் இவற்றிலிருந்து உலகங்களையும் உயிர்களையும் படைத்த அம்மா அப்பாவே கோயிலில் திருவுருக்கொண்டு விளங்கும் இறைவர் என்பதை நன்கு அறிந்து அப்பெயரையே சொல்லி வழிபடலானேன்.

சில சிவதலக் குறிப்பு

சிவக்கவிமணி, திரு. C. K. சுப்ரமணிய முதலியார் அவர்கள் B.A.,
கோவை.

திருச்சிற்றேமம் :- தஞ்சை ஜில்லா பட்டுக்கோட்டை தாலூகா அறந்தாங்கி ரயில் பாதையில் திருச்சிற்றம்பலம் என்று வழங்குவது. இது திருத்துறைப்பூண்டிக்கு அடுத்த சித்தாம்பூர் என்பதுடன் மயங்கி அறிதற்பாலதன்று.

திருக்கடைமுடி :- ஆனைதாண்டவபுரத்துக்கு அடுத்த கீழையூர் என்று சிலர் கருதுகின்றார்கள், அது அன்று. தஞ்சை ஜில்லா கோவிலடிக்குக் கிழக்கே 1½ நாழிகை யளவில் உள்ள திருச்சென்னம்பூண்டி.

திருவிசயமங்கை :- கொள்ளிடக்கரையில் உள்ள கோவந்த புத்தூரில் உள்ள பதி. "கொள்ளிடக்கரைக் கோவந்தபுத் தூரில் வெள்விடைக்கருள் விசையமங்கை" என்பது தேவாரம். கும்பகோணம் பக்கமுள்ள சுந்தரப்பெருமாள் கோயில் புகைவண்டி நிலயத்துக்கு 4 நாழிகை அளவில் உள்ள சிவதலத்துடன் மயங்கி அறியற்பாலதன்று.

திருச்செந்துறை :- திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 6 நாழிகை காவிரிக்குத் தென்கரை அந்தநல்லூருக்கு 1 நாழிகை அளவில் உள்ளது.

தேவார வைப்புத்தலங்களுட் சில

ஏமநல்லூர் :- கும்பகோணம் தாலூகாவில் உள்ள திரைலோக்கி என்னும் பதி. இது திருவிசைப்பாப் பெற்ற பதி.

இரும்புதல் :- மாயூரம் தாலூகா இரும்புதலை என்று வழங்குமூர்.

திருஇடைக்குளம் :- தஞ்சை ஜில்லா பாவநாசம் தாலூகா மருத்துவக்குடி.

வளைகுளம் :- வட ஆற்காடு ஜில்லா அரக்கோணம் தாலூகா வளர்புரம் என்பது.

கண்ணை :- திருவண்ணாமலை தாலூகா செங்கண்மா என்பது.

திருக்காரிக்கரை :- செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரி தாலூகா ராமகிரி என்று வழங்குவது.

திண்டீச்சரம் :- என்பது திண்டிவனம்.

மயிண்டீச்சரம் ;- என்பது சேலம் ஜில்லா தர்மபுரி தாலூகா அதமன்கோட்டை.

அதியரையமங்கை :- திருவதிகை.

இவற்றைப்பற்றி வித்துவான், திரு. மு. இராகவையங்கார் அவர்கள் "கலைமகள்" பத்திரிகையில் எழுதியுள்ளார்கள். அன்பர்கள் சரிபார்த்து வேறு விவரங்கள் இருந்தால் தெரிவித்தால் உபகாரமாயிருக்கும். முக்கியமாய், தேவார வைப்புத் தலங்களையும் திருவாசக வைப்புத் தலங்களையும்பற்றித் தெரிய வேண்டியவை பல உள்ளன.

மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், தருமபுர ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி.

ஓடிய கதை:

✱ பறம்புநாட்டுக்கும் பாண்டியநாட்டுக்கும் பகை. பறம்பு நாடோ சிற்றரசு. பாண்டியநாடோ பேரரசு. மன்னன் உக்கிரப் பெருவழுதி, பறம்புக் குறுமன்னர் வீரவேளுடன் போர்தொடுக்க எண்ணுகிறான். ஒற்றர் தலைவன் சந்தனத் தேவன்பால் ஆணையிடுகிறான் அரசன். போர் நிகழ்ச்சிக்குச் சில்நாள் முன்பு குறுநில மன்னர் வீரவேள் தாமே முன்னணியில்நின்று போரிட எண்ணுகின்றார். புதல்வி பொன்னியிடம் செய்தி சொல்ல வருகிறார். புதல்வன் பாரியும் புறப்படுகிறான் போர்க்களத்துக்கு. 'தங்கைக்கு உறுதுணையாகத் தங்கியிரு' என்று பணித்துவிட்டு பதிலை எதிர்பார்க்காமலேயே போய்விடுகிறார் மன்னர். பறம்புக் கோட்டைக்குள் பதுங்கிவந்த சந்தனத்தேவன் இளவரசி பொன்னியின் எதிர்பாராத தாக்குதலுக்குத் தப்பிவிடுகிறான். இளவரசியின் ஒடிந்த மனதைத் தன் அன்புப் பேச்சுகளால் ஒட்டிவைக்கிறாள் தோழி மல்லிகை. "இளவரசனும், இள வரசியும் பூங்காட்டு மண்டபத்துக்குப் போகிறார்கள். அங்கே நிலாமுடியனின் துடிசையிலே வீரவேள் சினத்துக்கு ஆளான அந்தப் புதிய வீரனைச் சந்திக்கிறார்கள். மனமாறி இளவரசன் நண்பனாகிவிடுகிறான் அந்த மாவீரன்".

ஏழாம் அத்தியாயம்

போருக்குப்பின் மதுரை

பாண்டியநாட்டுக்கும் பறம்புநாட்டுக்கும் நிகழ்ந்த போர் ஏராளமான படைச்சேதத்தை இருதரப்பிலேயும் உண்டாக்கி முடிந்தது; குறைந்தது ஒருதிங்களாவது போர் நிகழ்ந்திருக்கும்

போர் என்றால் எளிதா என்ன? எண்ணற்ற கரிகளும், பரிகளும், காளையர்களும், காவலர்களும் வீர மரணம் என்ற வெற்றிக்கு உரியவராயினர். பாண்டியர் படைக்குத்தான் இறுதியில் வெற்றியாக முடிந்தது.........

பறம்புமன்னர் வீரவேள் போரில் வீர மரணம் எய்தினர். பறம்புப்படை இறுதிவரை போராடி உயிர்நீத்தது. எண்ணற்ற இளைய வீரர்கள் விழுப்புண்பட்டு உயிர்நீத்துக் கிடந்தனர். ஆம்! அவர்கள் விரும்புவதும் அதுதானே!

தமிழ்மண்ணிலே பிறந்த வீரர்கள் தம்முடைய வீரவாழ்க் கையிலே வீணாக முடிந்த நாட்கள்; வெற்றியாக முடிந்த நாட்கள் என்று பகுப்பர். அவற்றில், போரில்சென்று போராடி விழுப்புண்பட்ட நாளெல்லாம் வெற்றியாகமுடிந்த - வாழ்விலே பயன்பட்ட திருநாட்கள். விழுப்புண்படாத நாட்கள் வீணான வெறுநாட்கள்; இஃது அக்கால வீரர்மரபாயிருந்தது. வள்ளு வரும் இவ்வருந்தமிழ்ப் பண்பாட்டைத் தம் குறள் நூலில் அழகு பெறக் கூறியுள்ளார்.

பறம்புமாநில வீரர்கள் தங்கள் நாட்களைப் பயன்பட்ட நாட்களாகக் கழித்தவர்கள். இறுதியிலும் விழுப்புண் ஏற்றுத் தாய்த்திருநாட்டின் தன்மானம்காக்கப் பெரும்போரிலே செத்து மடிந்தார்கள்.

பாவலர் தமிழக வீரத்தைப் பாட்டிசைத்தனர்; சிற்பியர் தமிழர் சிறப்பைக் கலைவடிவமாக்கினர். நாட்டுமக்கள் நாடெங் கும் நடுகல் எழுப்பி நல்விழாக் கொண்டாடினர். பிரான்மலை யிலுள்ள பெண்டிர் தத்தம் ஆடவரைப் பிரிந்ததனால் வருந்தின ரில்லை; பெருமிதமுற்றனர். தாய்நாட்டுச்சேவையிலே தன்னலம் நோக்குவதா தமிழர் பண்பு? பண்பிற் சிறந்தவர்கள் காதலராக வாய்த்தனரே என்று மகிழ்ந்தனர்!

ஆயினும், மன்னரை இழந்த பறம்புநாடோ மறுகியது; மனம் சோர்ந்தது. எங்கும் காண இயலாத துக்கம்! வீடுகளின் கதவுகள் அடைபட்டுக்கிடந்தன. வீதிகளிலே நடமாடுவாரையே காணவில்லை. அரண்மனையிலே அமைதி குடிகொண்டிருந்தது.

கோயில்களிலே பூசனைகள் தடைப்பட்டுக்கிடந்தன. வீதிகளில் புயலுக்குப்பின் நிலவும் அமைதி! போரால் விளைந்த கொடுமை— பறம்புநாட்டில்! ஆனால் பாண்டிநாட்டிலோ!.........

மன்னன் உக்கிரப்பெருவழுதிக்கு மாபெரும் மகிழ்ச்சி. பறம்புக்கோட்டையினர் செருக்கு அடக்கப்பட்டுவிட்டது என் பதிலே அடங்காக்களிப்பு. பறம்புப்போரிலே வெற்றிபெற்ற பாண்டிய மாவீரர்கள் வரிசை வரிசையாக வந்து மன்னனின் ஊக்கப்பதக்கங்களை வாங்கிக்கொண்டு சென்றவண்ணமிருந் தனர். அரண்மனையிலே விழாக் கொண்டாடுவதுபோன்று எல்லையிலா மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. வீதிகளில் ஆடவரும் பெண்டிரும் தம்மை அணிசெய்து அங்குமிங்கும் அலைந்தனர். மாடங்கள்தோறும் மகளிர் கூடிநின்று வீதியில் போவோர் வருவோர்மேல் பூமழை சொரிந்தனர். தத்தம் மாளிகையின் மேல்மாடங்களில், போருக்குச் சென்று வெற்றியொடு திரும்பிய ஆண்மைமிக்க வீரர்கள் தத்தம் காதலியரிடத்தில் தாம் போரிலே செய்த வீரச்செயல்களை விவரித்துக்கொண்டிருந்தனர். எதிர்த்து வந்த எண்ணற்ற வேழங்களை வேல் எறிந்து வென்ற செய்தி யைச் சில காதலர் பேசிக்கொண்டிருந்தனர். எதிரிப்படையிலே இருந்த பரிப்படையைச் சின்னபின்னப்படுத்திக் குருதிப் பெருக்கிலே குதிரைமேல் இருந்து போரிட்ட மாண்பை மனைவி யரிடம் சிலர் சொல்லிக்கொண்டிருந்தன்ர். திரளாக வந்த தேர்ப்படையிடைத் தான் ஒருவனாகப் புகுந்து, அலைத்த செய்தியை அழகாகச் சொல்லிக்கொண்டிருந்தனர் சிலர்.

இன்னும் சிலர், யானைத் தந்தங்கள் அழுத்திய தம் மார்புகளுக்கும், நீண்ட வேல் கிழித்த தம் பெரும் புண்ணோடு கூடிய உடம்புகளுக்கும் வந்த அம்புகளால் வாய்பிளந்த அகலங் களுக்கும் கூரிய வாள்கிழித்த கொடும்புண் மேனிகளுக்கும் தத்தம் காதலியரைத் தழுவி, அவர் தம் கொங்கை வெம்மையால் ஒற்றடம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

“யானை வெண்கோடு அழுத்திய மார்பும்
நீள்வேல் கிழித்த நெடும்புண் ஆகமும்
எய்கணை கிழித்த பகட்டெழில் அகலமும்
வைவாள் கிழித்த மணிப்பூண் மார்பமும்

மைம்மலர் உண்கண் மடந்தையர் அடங்காக்
கொம்மை வரிமுலை வெம்மை வேதுறீஇ''

என்று அவர்கள் செய்தியைப் பாட்டிசைத்தனர் சிலபாவலர்.

அரண்மனையின் நிலாமுற்றத்தில் அமைக்கப்பெற்றிருந்த மணித்தவிசில் பாண்டிமாதேவியின் பக்கத்தில், அவளது கருங் கூந்தலைத் தன்கரங்களால் இலேசாக நீவிவிட்டவண்ணம் இருந்தான் மன்னன் உக்கிரப்பெருவழுதி.

பாண்டிமாதேவியைப் பிரிந்து இத்துணைக்காலம் தனியே யிருந்து போரில் ஈடுபட்டதில்லை மன்னன்! இந்தத்தடவைதான் முதலாவது.

'அரசே! வெற்றியிலே திளைக்கும் நம்நாட்டு வீதிகளைப் பார்த்தீர்களா?'

'தேவீ! ஆம்; தாய்நாடு பெற்ற வெற்றியை வீரர்கள் போற்றிக் கொண்டாடுகிருர்கள்!'

'அரசே! இதேநேரத்தில் மற்ெருரு செய்தியை நினைத்தால் என் மனம் மிகத் துன்பமுறுகிறது!'

'தேவீ! ஏன்? அப்படித் துன்பம் உறும்படி ஒன்றும் நிகழ வில்லையே இப்போது!'

'..........................'

'அரசி! ஏன் பேசாமல் இருக்கிருய்? வேழத்தை வீழ்த்திய வீரக்கைகள்! தேர்களைத் தாக்கிய திரள் தோள்கள்! குதிரை களைக் குலைத்த குன்ரு வீரம் படைத்த கரங்கள்! இவற்றைப் பெற்ற நம்நாட்டுக் காளைகள், பாண்டியநாட்டுக்காக - இந்த மண்ணின் இணையற்ற வீரத்தை இருநிலத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காக செய்த மகத்தான போர்! மாபெரும் போர்! வெற்றி! வரலாற்றிலே மறக்கமுடியாத வெற்றி! இதனைக் கண்டு இதயம் களிக்கவேண்டிய எழிலரசினீ! மனம் மகிழ வேண்டிய மாதரசினீ! பிறவாயாக்கைப் பெரியோனுல் – பிறை சூடிய பெருமானுல் – நீலமணிமிடற்று ஒருவனுல் நம் பாண்டிய

நாட்டுக்குக் கிடைத்த வெற்றியைக் கண்டு பரவசப்பட வேண்டிய பாவைநீ! ஏன் கவலை? அன்பே! சொல்லமாட்டாயா?'

உணர்ச்சிப்பெருக்கால் உந்தப்பட்ட உக்கிரப்பெருவழுதி யின் உரைகளைப் பாண்டிமாதேவி புரிந்துகொள்ளாமல் இல்லை. இருப்பினும் அவள் இதயம் பறம்புநாட்டைப்பற்றியே இடை யருது எண்ணிக்கொண்டிருந்தது. தன் காதலன் கட்டியுள்ள இந்த மகத்தான வெற்றிக் கோட்டைக்குப் பலியான பறம்புநில மாவீரர்களையும், எல்லாவற்றையும்விட அஞ்சாது போராடி வீரமரணம் அடைந்த பறம்புமன்னர் வீரவேளைப்பற்றியும் அவள் எண்ணியபோது அவள் மனம் மிக்க வேதனைப்பட்டது.

'அரசே! என்னை மன்னித்துவிடுங்கள்......நம்நாட்டுக்குக் கிடைத்த வெற்றியைக்கண்டு உள்ளம் மகிழாத அத்துணை உள்ளமிழந்தவள் அல்லநான்! ஆயினும் கணக்கில்லாமல் பலி யான பறம்புநில வீரர்களையும், பறம்புமன்னர் வீரவேளின் வீரத்தையும் எண்ணினேன்! வேறொன்றும் இல்லை!'

உக்கிரப்பெருவழுதி எழுந்தான். இருவரும் முற்றத்தின் ஓரத்தே உள்ள கைப்பிடிச்சுவரின் அருகு சென்று நின்றனர். வானத்தில் வெண்ணிலா பால்மழை பொழிந்துகொண்டிருந் தான்! விண்மீன்கள் இயற்கைத்தாயின் நீலப்புடைவையில் பதித்த புதுவயிரங்களாக மின்னின! ஒருகணம் அங்கு அமைதி நிலவியது! இப்போது பாண்டிமாதேவியே பேசினாள்:-

'அரசே! பிரான்மலை, அதைச்சுற்றியுள்ள பகுதிகள் இவற்றை நாம் இருவரும் ஒருமுறை சென்று கண்டுவர வேண்டும்!'

'தேவி! அப்படியே போனால்போகிறது! எனக்கும் இந்த எண்ணம் உண்டு! பறம்புமன்னரின் மகன் பாரியையும், மகள் பொன்னியையும் கைதுசெய்ய ஒரு படை போயிருக்கிறது! நாமும் நாளையே........'

'அரசே! என்ன! இளவரசனையும் இளவரசியையும் கைது செய்யவா.........?'

'ஏன் அரசி! ஏன் இப்படிக் கேட்கிறாய்.........? கைது செய்யத்தான்.........!'

'அரசே! என்ன கொடுமை இது! அவர்களைக் கௌரவமான முறையில் நடத்தவேண்டாமா நாம்! ஒரு அரசனின் மக்கள்!.........'

'பாண்டிமாதேவி! சந்தனத்தேவன்தான் போயிருக்கிறான்; அவர்களுக்கு ஒன்றும் நேராது! தக்கமுறையிலேயே அழைத்து வருவான்! நீ கவலைப்படவேண்டாம்!'

சந்தனத்தேவன் என்றதும் பாண்டிமாதேவியின் மனத்தில் கொஞ்சம் சஞ்சலம் உண்டாகிவிட்டது. சந்தனத்தேவனை அவளுக்குப் பிடிப்பதில்லை. அவனுடைய நடத்தை, போக்கு முதலியவை அவனுடைய தூய்மையை விளக்குவனவாகத் தோன்றவில்லை அரசிக்கு. அவனுக்கு எல்லா உரிமையும் உக்கிரப்பெருவழுதி கொடுத்திருந்தது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவனிடத்தில்மட்டும் அவளையறியாமல் ஒரு சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அதன் காரணமும் அரசிக்கு விளங்கவில்லை. 'வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம்' என்ற திருக்குறள் வரியைப் படிக்கும்போதெல்லாம் அவளையறியாமல் நெஞ்சில் சந்தன்த்தேவன்தான் தோன்றிநின்றான்! ஆம்; அதுவும் உண்மைதானே!

முன்னொருமுறை பாண்டிநாட்டின் தலைசிறந்த துறைமுகப் பட்டினமான கொற்கை நகருக்குத் தானும், மன்னனுமாகச் சென்றிருந்த சம்பவம் இப்போது பாண்டிமாதேவியின் எண்ணத்துக்கு வந்தது. அந்த எண்ணம் நினைவுக்குவந்தவுடனேயே அவனைப்பற்றிய வெறுப்பும் அரசி நெஞ்சில் கிளைவிட்டது.

*

(தொடரும்)

மகளிர் பகுதி :

திருவாதிரை ஒருவாய்க்களி

'கமாமு'

'திருவாதிரை ஒரு வாய்க்களி' என்னும் சொற்றொடர், மார்கழிமாதம் திருவாதிரை நாளிலே எல்லோர் வாயிலும் திகழும் ஒரு சொற்றொடராகும். சித்தூர் மாவட்டம் முதல் திருநெல்வேலி மாவட்டம் வரையில், எல்லாத் தமிழ்வழங்கு மாவட்டங்களிலும் இது இன்றும் வழங்குகின்றது. ஆண்பாலர் வாயில் பயிலுவதைக் காட்டிலும் பெண்பாலர் வாயிலே தான் இது மிகுதியாகப் பயிலுவதைப் பார்க்கலாம். அவர்களே வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒருவாய் கிடைக்கும்படி இக் களியைச் செய்து அளிப்பவர்கள். தமிழர்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் இக் களி மார்கழித் திருவாதிரையன்று செய்யப் பெறுகின்றது. தமிழர்களின் பண்பாடு ஒன்றே என்று முடிவு செய்வதற்குக் கிடைக்கும் சான்றுகளில் இது ஒரு சான்றாகும்.

களி உளுத்தமாவினாலும், பிறவகையினாலும் செய்யலாம். ஆனால் திருவாதிரையன்று செய்யும் களி அரிசியை வறுத்துப் பொடிசெய்து, நெய்யும் சர்க்கரையும் சேர்த்துக் கிண்டுவதாகும். அரிசி வறுத்த பொடியைப் பொரிமாவு என்போம். எனவே 'ஒருவாய்க்களி' என்பதற்கு மாற்றாகப் 'பொரிமாக்களி' என்று சேர்த்து திருவாதிரை பொரிமாக்களி என வழங்கவும் கேட்டிருக்கலாம். இயல்பாக இக்களியில் ஏலம் பொடிசெய்து இட்டு வாசனையூட்டுவார்கள், குங்குமப்பூ பச்சைக் கர்ப்பூரமும் இதில் கலந்து இதன் மணத்தையும் சுவையையும் பெருக்குவார்கள். நெய் கிடைக்காவிட்டால் எண்ணெயும், சர்க்கரை கிட்டாத போது வெல்லமும் சேர்த்துக் கிண்டுவார்கள். எப்படியும், எவ்வகையிலாவது எவ்வளவு எளிய வீட்டிலும் இக்களி திருவாதிரையன்று காலையில் கிண்டப்படும். அதற்கு எதிரீடு செய்து அதனோடு கலந்து அருந்தச் சுவைதரும் உளுந்து வடையும், அன்று செய்வார்கள்.

இப்போது 'அல்வா' என்று சொல்லுகிறோமே அதன் மூதாதைதான் இந்த இனிய களி. நமது முன்னோர்கள் செய்து

அருந்திய பண்டங்களிலே களியும் வடையும் சிறந்த இரண்டாகும். இக்களி ஆறியபின் சாப்பிட்டால் அவ்வளவு சுவையில்லை. சூடோடு கூடியகளி 'உட்களி' எனப்படும். 'உட்கு' என்றால் தெலுங்கில் 'சூடு' என்று பொருள். அச்சொல் தமிழிலிருந்து அங்குச் சென்றிருக்க வேண்டும். எனவே 'உட்களி' என்பது சூடான களி என்று பொருள்படப் பயன் படுத்தப் படுகிறது. 'ஓடிவந்த காலுக்கு உட்களியும் வடையும்' என்று இன்றும் சிற்றூர்களிலே வழங்கக் கேட்கிறோம். மாப்பிள்ளை அழைப்பிற்கு அந்தக்காலத்திலேயே உட்களியும் வடையும் முதலில் இலையில் படைப்பார்கள். வடை சிறந்ததொரு பண்டம் என்பதை ஆந்திரரும் உணர்ந்திருந்தார்கள். இன்றும் ஆந்திர நாட்டில் ஒரு பழமொழி வழங்குகிறது.

'வின்டே பாரதம் வினவல
தின்டே காரெறு தினவல'

என்பது அப்பழமொழி. கேட்டால் பாரதம் கேட்கவேண்டும். தின்றால் உளுந்துவடை தின்னவேண்டும் என்பது அதன் பொருள். ,காரெலு' என்பது உளுந்து வடையைக் குறிக்கும் நல்ல ஆந்திரச்சொல்.

வாய்க்கு இனிதாகக் கிடைக்கும் இந்தப் பொரிமாக்களி, மார்கழி மாதம் திருவாதிரை யன்று செய்யப்பெறுவது. அதனை எல்லாம் வல்ல கூத்தப்பெருமானுக்குப் படைப்பதற்கேயாகும். அன்று அப்பெருமானுக்கு அதைப் படைப்பானேன்? அரசு எலாம் வழங்கும் தனியரசான அந்த ஆடலரசுக்கு நாம் வகுத்திருக்கும் விண்மீன் திருநட்சத்திரம் — திருவாதிரையாகும். பிறவா யாக்கைப் பெரியோனுகிய அப்பெருங் கூத்தன் விண்மீன் திருவாதிரை யென்கிறோம். நாம் ஒவ்வொருவரும் பிறந்த நட்சத்திரத்தை நாம் பாராட்டிக் கொள்வதுபோல, ஆதியந்தமில்லா அப்பேரொளிப் பிழம்புக்கு நாம் வகுத்திருக்கும் திருவாதிரை நட்சத்திரத்தன்று அந்த அரும் பெருஞ்சோதிக்கு, நாம் சிறந்ததாகப் பண்டைக்காலத்திலே கொண்டிருந்த பண்டமாகிய களி செய்து படைத்து வழிபடுகின்றோம்' அன்று அப் பேரருளான் உயிர்களுக்கு அருள்புரிந்து ஆட்கொள்ளும் நாள் என்று கருதி அந்நாளில் இச்சிறப்புக் கொண்டாடுகிறோம். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு மார்கழித் திருவாதிரையாகிய அந்த நன்னாளிலேயே முத்தியருளினன் என்பதை யெண்ணிப் பாராட்டுகிறோம்.

மாணிக்கவாசகப் பெருமானை வாவென்று அருளி தனது அருட்பேரொளியொடு இரண்டறக் கலப்பித்துக் கொண்டது உன்னி, எனக்கும் அங்ஙனம் ஒருவாக்கு அளிப்பது என்று கொல் என ஏங்கும் முகத்தால், 'திருவாதிரை! ஒருவாக்களி' என்று நாம் ஒவ்வொருவரும் விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம். திருவாதிரை என்ற விளி, அந்த விண்மீனைத் தனக்கு உடைய வனை எல்லாம் வல்ல பெருமானையே சுட்டுவதாகும். இங்ஙனம் விண்ணப்பிக்கும் பழக்கத்தால் 'திருவாதிரை ஒருவாய்க்களி' என்பது 'திருவாதிரை பொரிமாக்களி' ஆனதொடு நில்லாமல் 'திருவாதிரை! ஒருவாக்கு அளி என்றும் வழங்கப்பெறு வதாகிறது.

இனி, திருவாதிரை விண்மீன் எங்ஙனம் பிறவான் இறவா னாகிய பெம்மானுக்குப் பொருத்தப் பெறுகின்றது என்று ஒருசிறிது பார்ப்போம். நட்சத்திரங்களிலே மிகப்பெரியதொரு நட்சத்திரம் திருவாதிரை. சூரியனைக் காட்டிலும் 1200 மடங்கு ஒளியுள்ளது. ஏறத்தாழ 20 மடங்கு எடையுள்ளது. அடுத்த படியுள்ள விண்மீன் கிருத்திகை. அது ஞாயிற்றைக் காட்டிலும் 1000 மடங்கு ஒளியுள்ளது. அது முருகனுக்குரிய விண்மீனாகக் கருதப்படுகிறது. திருவோணம் சூரியனைப் பார்க்கிலும் 9 மடங்கு ஒளியுடையது. அது திருமாலின் திரு நட்சத்திரமாகக் கூறப்படுகிறது. பிறவாயாக்கைப் பெரியோனின் பெரியதொரு விண்மீனுடன் தொடர்பு படுத்துவது பொருத்தந்தானே?

மார்கழித் திருவாதிரை விழா தமிழ் மக்கள் வாழும் இட மெல்லாம் கொண்டாடப் பெறுகின்றது. என்றாலும் அது வீடு தோறும் விளங்கும் சிறப்பு, மகளிராலேயே இருக்கின்றது. அதற்கு முன்னாளே சில ஆயத்தங்கள் செய்துகொள்வார்கள். அன்றுவிடியல் எழுந்து நீராடி மற்றோரையும் நீராட்டுவித்துக் கழுவி, மெழுகிக் கோலமிட்டு தோரணங்கட்டி, உள்ளன்போடு களி கிண்டி வடை சுட்டு நடுவீட்டை அழகுசெய்து, அங்கே குத்துவிளக்கின் ஒளி நிரப்பி, ஆடலரசின் அருளை நினைந்து எல்லோரையும் அவ்வருளை நினைக்கவைத்து பொரிமாக்களியும் வடையும் படைத்து 'ஒருவாக்களி' என வேண்டி, எல்லோருக் கும் ஒருவாய்க்களி அளித்து மகிழ்விப்பர்.

பாவை நோன்பு

வித்துவான். திருமதி. சிவ. மீனுட்சிசுந்தரசிவை, அவர்கள்
சென்னை.

இப்பரந்த உலகில் வாழும் மக்களுக்கும், இறைவனுக்கும் உளதாய ஒரு தொடர்பு சமயமாகும். மக்கள் தம் வாழ்க்கையை எவ்வெம் முறையில் நடத்தினுலும் அவரவர் நிலைக்கேற்ப இறை உணர்ச்சிச் சிறிது சிறிதாகத் தோன்றி வளர்ச்சியுற வேண்டுமென்னும் பெரு நோக்கத்தால் ஆன்றோர்களும் அருளாளர்களும் சமயத்தைப் பலப்பல வகையாகப் பரப்பினுர்கள். செய்யுள், கதை, சிறுநூல், இலக்கியம் முதலியன வாயிலாகவும் பரவச்செய்தார்கள். அரிய கருத்துக்களை மக்கள் எளிதாக உணர்ந்து பயிலத்தக்க முறையில் அவை அமைந்திருந்தன. அவைகளில் சில, பெண்கள் பலர் ஒன்று கூடி விளையாடும்போது பாடுவன போல அமைந்திருப்பன. தும்பிப்பாட்டு, தெள்ளேணம் அம்மானை, சாழல், பொற்சுண்ணம், பாவை என்பன அவற்றில் சில ஆகும்.

பாவைப்பாட்டைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிலும், தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி முதலிய நூல்களிலும் இருக்கின்றன. பிங்கல நிகண்டில்கூட பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கு உறுப்புக் கூறுகிற இடத்தில் 'பேணுஞ் சிறப்பில்'' என்னுஞ் சூத்திரத்துள் "பனிநீர் தோய்தலும், பாவையாடலும்'' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதனுல் நீராடலும், பாவைப்பாட்டும், தமிழ் நாட்டில் பழங்காலத்திலேயே பெரு வழக்கில் இருந்தன என்று தெரிகிறது. இப்பாவை பாடும் முறையை, மணிவாசகப்பெருமான் மங்கை மணுளனுகிய சிவபெருமானின் ஒப்பற்ற இணையடிகளைச் சிந்திக்கும் முறையில் பயன் படுத்திக் கொண்டனர். அவர் பாடியருளிய பாவைப் பாட்டே சைவமக்களாகிய நாம் சிரமேல் வைத்துப் போற்றும் "திருவெம்பாவையாகும்''. அதுபோலவே சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாகிய ஆண்டாளும் சமயத்துறைக்கு அப்பாவைப் பாட்டைப் பயன் படுத்தித் 'திருப்பாவை' என்னும் பெயரோடு பாடி, அது நாலாயிரப் பிரபந்தத்தில் ஒரு தனி இடம் பெறச் செய்தார்.

சங்க காலத்தில் பெண்கள் மார்கழி, தை மாதங்களில் விடியற்காலையில் எழுந்து நீர், நிலைகளுக்குச் சென்று நீராடி

மணலால் அம்பிகையின் திருவுருவம் அமைத்துப் பாவை நோன்புநோற்பார்கள். அம்பிகையைக் குறித்து நீராடிச் செய்யும் நோன்பாதலினால் இந்த நோன்பைப் பரி பாடலில் ஆசிரியர் நல்லந்துவனார் 'அம்பா ஆடல்' என்று குறிக்கின்றார். 'அம்பா'என்பது அம்பிகையை. பரிபாடலில் 11-வது பாட்டாகியஇப்பாடல் "இம்மண்ணுலகம் மழை பெற்றுக் குளிர்வதாக" என்று சொல்லி அம்பா வாடலைச் செய்வதற்குக் கன்னிப் பெண்கள் கூடி, ஆடலின் முறைமையை முதிர்ந்த பெண்கள் உணர்த்த, ஆடலைத் தொடங்கினார்கள் என்னும் கருத்துப்பட இருப்பதால், கன்னியர்கள் மழை பெய்யத் திருவாதிரை நாளில் வையைக் கரையில் நின்று முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் அருட்சக்தியை வேண்டினார்கள் என்பது தெரிகிறது. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் தொடங்கி இந் நீராட்டு தைத்திங்களில் முடிவதால் இது 'தைந்நீராடல்' என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இப்பரிபாடல் பகுதியால் சங்ககாலத்தில் கன்னிப்பெண்களிடையே இந்நீராடி நோற்கும் நோன்பு பெரு வழக்காய் இருந்து வந்ததென்பது தெளிவாக அறியப்படுகிறது.

ஆயர் கன்னியர்கள் கார்த்தியாயினிதேவியை மணலால் பாவை உருவில் அமைத்து நோன்பு நோற்றார்கள் என்பது பாகவதத்தால் தெரிகிறது. ஆதலின் ஆண்டாள் திருப்பாவையின் கருத்தும், மழை பொழியவும், தக்க தலைவனை யடையவும் கன்னிப் பெண்கள் வைகறையில் நீராடி, மணலால் பாவை வடிவமைத்து கார்த்தியாயினி தேவியைக் குறித்து நோற்கும் நோன்பை மேற்கொள்வது என்பது பெறப்பட்டது. அந் நோன்பு இனிது நடைபெறக் கண்ணனது துணையை நாடினார்கள். திருவெம்பாவையிலும் கன்னியர்கள் தக்க தலைவனைப் பெறத் திருவருளை நாடினார்களென்றும், நாடு செழிக்க மழையை வேண்டினார்களென்றும் காண்கிறோம்.

திருவெம்பாவையின் கருத்து மல இருளில் உறங்கியிருக்கின்றவர்களை எழுப்பி அருள் நீரில் முழுக வருமாறு அழைப்பதாகும். அதனை "மல இருள் உற்று உறங்காமல் மன்னு மல பரிபாகர் அருள்ஜல முழுக வருகளனச் செப்பல் திருவெம்பாவை" என வரும் ஆன்றோர் வாக்கால் அறியலாம். நம்மை இயக்கிக் கொண்டிருக்கின்ற ஆற்றல்கள் சோம்பலான

நிலையிலிருக்க, அவற்றை விழிக்கச்செய்து அச்சக்திகளை எழுச்சிபெறப் பண்ணுகின்ற கருத்துக்கள் இப்பாடலில் இருக்கின்றமையால் திருவெம்பாவையின் கருத்து சக்தியை வியந்தது என்று அப்பாடல் பகுதியின் தலைப்பிலேயே குறிக்கப் பெற்றிருப்பதும் பொருத்தமாவதைக் காணலாம். சக்தியைப் பார்வதியாக நாம் வழிபடுகின்றோம். அச்சக்தியின் பல பிரிவு களாக ஒன்பது சக்திகளை அல்லது பத்து சக்திகளையும் பொருத்த மான பல பெயரிட்டுக் குறிக்கின்றார்கள்.

பாவைப் பாட்டு நீராடுதலை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகும். ஆதலின் பண்டைநாளில் நீராடுதலை மக்கள் மிகவும் போற்றிவந்தார்கள் என்பது தெரியவருகின்றது. இச் செய்தி அகநானூறு, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களில் காணப்படும் செய்தியாகும். இளவேனில் நீராடுதல், சித்திரை நீராடுதல், ஆதிரை நீராடுதல், தைந்நீராடுதல் எனப்பல நீரணி விழாக்கள் அக்காலத்தில் இருந்தன. அவற்றுள் திருவெம்பா வைக்கும் திருப்பாவைக்கும் அடிப்படையாக இருப்பது தைந் நீராடலேயாம். பழைய சங்க இலக்கியங்களில் இருக்கும் குறிப்பினால் இதனை யறியலாம்.

தைமாதத்தில் நீரே நலம் பெறும் குளிர்ச்சியுடையதாக இலங்குமென்ற கருத்து இப்புறநானூற்றுச் செய்யுளில் வருகிறது.

“தைஇத் திங்கள் தண்கயம் போல
கொளக்கொளக் குறைபடா கூழுடை வியன் நகர்”

அதாவது தைத்திங்கள் காலத்திய குளிர்மை மிகுந்த குளம் போல, கொடுக்கக் கொடுக்கக் குறைபடாத செல்வங்கள் மிகுந்த பெருநகர் என்பதாகும். இன்றும் இத்தைத்திங்களிள் நீரின் தன்மையைப்பற்றிக் குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறு நூறு, நற்றிணை முதலிய நூல்களில் பல குறிப்புக்கள் இருக் கின்றன. விரிப்பின் பெருகும்.

கன்னியர்கள் தைந்நீராடி பாவை நோன்பு நோற்றார்கள் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்றிரண்டு குறிப்புக்களை மட்டும் பார்ப்போம்.

இது கலித்தொகை 59 ஆவது பாட்டில் வருகிறது:

“வையெயிற்றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீராடித் தவந்தலைப் படுவாயோ?”

இதன் கருத்து, கூரிய பற்களையுடைய இளைய மகளிர்க்கு நடுவே ஒப்பனை செய்யப்பெற்று அழகாலே பொலிவுபெற்று, தைத்திங்களில் நீராடிநோற்ற நோன்பின்பயனைப் பெறு வையோ, பெறுய்காண், என்பதாகும். இது ஒரு தலைவன் தலைவியைப் பார்த்து இங்ஙனம் என்னை வருத்துவாயாயின் நீ செய்த தவம் பயன் இன்றும் என்று கூறியதாக வரும் பகுதியாகும்.

ஐங்குறு நூற்றில்,

" நறுவீயைம்பால் மகளிராடும் தைஇத்திங்கள் தண்கயம்
போலப் பலர் படிந்துண்ணும் நின் பரத்தை மார்பே "

என வருகிறது.

இது ஒரு தோழி தலைவனுடைய ஒழுக்கமற்ற செயலைக் கண்டு செறுத்துக் கூறியதாகக் கூறும் பகுதியில் வருவது. 'மணமிக்க மலர்களைச் சூடிய கூந்தலையுடைய பெண்கள் கூட்டம் கூட்டமாக வந்து நீராடும் தைத்திங்களின் குளிர்ச்சி பொருந்திய பொய்கைபோலிருந்தது பரத்தையின் மார்பு, என்பது இவ்வரிகளின் பொருளாகும்.

இவற்றால், மகளிர் தண்கயத்தில் தைந்நீராடி, நோற்பார்கள் என்பது தெரிகிறது. இவ்விலக்கியக் குறிப்புக்களினால் சங்க காலத்துப் பெண்கள் தைந்நீராடுதலை மிகவும் போற்றினார்கள் என்பதும் அறியப்படுகிறது. பாவை நோன்பு நோற்ற நல்ல கன்னியர்களையே போற்றி மணக்க அக்காலத்து இளைஞர்கள் விரும்பினார்கள் என்று நற்றிணையில் 80 ஆவது பாடலில்வருகின்ற குறிப்பு நமக்கு அறிவிக்கின்றது.

முதற்கூறிய பரிபாடல் 11-ம் பாட்டின் கருத்து, திருவெம்பாவை, திருப்பாவைகளின் கருத்தோடும் ஒருவாறு ஒத்திருப்பதால் பாவை நோன்பு சங்ககால முதற்கொண்டே வழக்கில் இருந்து வந்ததென்று அறியலாம். கன்னியர்கள் நாடு செழித்து ஓங்க மழையை வேண்டினார்களென்பதும், தங்கட்குத் தக்க, ஒத்த கணவரை வேண்டினார்கள் என்பதும் முக்கிய கருத்துக்களாகும். தெய்வப்புலவர் வள்ளுவரும்

''தெய்வந்தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை ''

என்றார்.

பெண்களின் கற்பின் ஆற்றல், இறைவனிடம் உள்ள ஆழ்ந்தபற்று, உயிர்களிடம் உள்ள அன்பு, அருள் முதலிய வைகளினுல் தான் மழைபெய்யும் என்பது தெளிவாகிறது. இதனுலன்றே ஔவையாரும்.

‘ நெல்லுக்கிறைத்த நீர்வாய்க்கால் வழி ஓடி
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவருளரேல் அவர் பெர்ருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை,

என்ருர்.

இப்பாட்டில் நல்லார் என்பதற்கு நல்லவர் என்பதைக் காட்டிலும் பெண்மகள் எனப் பொருள்கொள்ளின் பொருள் சிறப்புறும் என நினைக்கின்றேன். பெண்களை நல்லார் என்று குறிப்பிடுவது வழக்கு. ஆனுல் பெண் என்ருல் பெண் உருவில் இருப்பவர்கள் எல்லாரும் பெண் ஆகார். பெண்மைத் தகைமை யுடையவள் எவளோ அவளே நல்ல பெண்ணுவாள். அவள் பொருட்டே மழை பெய்யும் எனக் கொள்ளலாம்.

பண்டைநாளில் இம்மைப்பயன் கருதி கன்னியரால் நோற்கப்பட்ட பாவை நோன்பு, பின்பு மறுமைப்பயன் கருதி அடியவர்களால் இறைவனைநோக்கிப் பாடப்பெறும் பெருமை அடைந்தது. இப்போது பழைய செய்திகள் மறக்கப்பட்டு, கன்னிப் பெண்களால் இந்நோன்பு நோற்கப்படாமலும் போயிற்று.

ஆனுல் மார்கழித் திங்களில் பொதுவாக ஆண், பெண், முதியோர், இளையோர் முதலியவர்களில் எல்லோரும் இல்லா விடினும் ஒரு சிலராவது விடியற்காலையில் எழுந்து நீராடி, திருவெம்பாவை, திருப்பாவை முதலியன ஓதி இறைவனை வழி படுவது வழக்கிலிருக்கிறது. சைவ மகளிராகிய நாம் மார்கழி மாதத்தில் மட்டும் அல்லாமல் எல்லா நாட்களிலுமே விடியலில் எழுந்து தூயநீரில் மூழ்கி, திருவெண்ணீற்றை நெற்றி நிறக்கப் பளிச்சென்று பூசி, குங்குமம் அணிந்து, உருக்கமுடன் ஓதுவ தற்கு உரிய அருட்பாடலாக இருப்பது திருவெம்பாவையும், திருப்பள்ளி யெழுச்சியுமாகும்.

சங்க இலக்கியக் குறிப்புக்களினுல் சங்ககாலக் கன்னியர்கள் பாவை நோன்பை எவ்வாறு போற்றினுர்களென்றும், அந்

நோன்பு அம்பிகையைக் குறித்து வழிபடும் நோன்பென்றும், மார்கழித் திங்களில் விடியல் நீராடிச் செய்யும் நோன்பென்றும், அந்நோன்பினை நோற்ற கன்னியர்களையே போற்றி மணக்க அக்காலத்து இளைஞர்கள் விரும்பினார்களென்றும், அந் நோன்பை நோற்பதால் பெண்கள் தங்கள் கணவன்மாரது இடர்ப்பாட்டையும், மனமாற்றத்தையும் நீக்கவல்ல ஆற்றல் பெற்று கணவன்மாரோடு ஒத்த மனத்தராய் நல்வாழ்வு வாழ் கின்ற உரம்பெற்றார்களென்றும் அறிகிறோம்.

இக்காலத்தும் பாவை நோன்பைக் கன்னியர்கள் நோற்கா விடினும், மார்கழித் திங்களில் விடியற்காலையில் மகளிர் தமது முற்றத்து வாசலில் பசுமையுறச் சாணந் தெளித்துப் பெருக்கி அழகிய பெரிய பெரிய கோலங்களை இட்டு, அக்கோலங்களின் நடுவில் ஆவின் சாணத்தைப் பிசைந்து உருட்டிவைத்து, அதன் மீது பொன் நிறமுள்ள பூவாகிய பூசனிப் பூவைக் கவின்பெற வைப்பார்கள். அக்காட்சி காண்பதற்கு மிக்க அழகாக இருக்கும். இது இறைவனது படைப்பு வன்மையை உணர்த்து வதாகும். இவ்வாறு பூ வைத்து இறைவனது ஆற்றலை வழிபடு கின்றார்கள். பல அலுவல்களினாலும், பிறவற்றாலும் சமயம் சிவத்தொண்டு, சமயச்சடங்கு, திருநாட்கள் முதலியவற்றை மறந்த ஆண் மகனுக்கு இக்காட்சி, இறைவன் நினைவு, திரு நாட்கள் முதலியவற்றை நினைவூட்டுவதாகும். இன்னும் மார்கழித் திங்கள் முழுவதும் விடியற்காலையில் நான்கு மணிக் கெல்லாம் குத்து விளக்கை வழிபாடியற்றும் இடத்தில் பொருத்தி வைப்பார்கள். இது ஆண்டவனை ஒளியாக வழிபடு வதாகும்.

ஆதலின் இப்போது பெண்கள் பாவை நோன்பு நோற்கா விட்டாலும், சமயம் இன்றைக்கும் பெண்களால்தான் இந்நிலையிலாவது இருக்கின்றது. மங்கையர்க்கரசி, திலகவதியார் முதலான பெண்ணின் நல்லார்கள் போல் மகளிர் முன்வந்து, முயற்சி செய்து சமயப்பயிரை, சைவப்பயிரை நன்கு வளர்த்துத் தழைக்கச் செய்யவும், நமது கன்னியர்கள் மீளவும் பாவை நோன்பு நோற்கும் பெற்றியர்களாக இலங்கவும், வேண்டு மென்று அம்பிகையை அகங்கனிந்து வேண்டுவோமாக!

சிறுவர் பகுதி :

மாயப்பேய்

விமலா.

மயானபுரத்துக் கோயில் ஒருமாத காலமாகப் பாழடைந் திருந்தது, ஆறுகால பூசை நடைபெறும் அந்தக் கோயில் இருளடைந்து காணப்பட்டது. காரணம் கோபுரத்தில் ஒரு மாயப்பேய் இருப்பதாக ஊரெங்கும் வதந்தி. கோயிலுக்குள் ஒருவர் இருவர்கூட வந்து போவதையும் நிறுத்தினர். ஏன்? தெருவில்கூட மாலைவேளைகளில் மக்கள் நடமாடுவதில்லை. கோயிலுக்குச்செல்லும் குழந்தைகள் அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தன.

மயானபுரத்து மன்னன் மாரவேள், சில மந்திரவாதிகளை அனுப்பி கோயில் கோபுரத்தில் இருக்கும் மாயப்பேயை மந்தி ரத்தால் கட்டிவர அனுப்பினான். மந்திரவாதி அரசனிடத்தில் சன்மானங்கள் அதிகம் பெறலாம் என்று கோயில் கோபுரத் தருகில் வருகிறான்.

சீ ...... யாரது ...... நில்?

என்ற குரல் கோபுரத்திலிருந்து வருகிறது. அடுத்து

போ ... வெளியே ... .

குரல்கேட்டு குலை நடுங்கினான் மந்திரவாதி. சொல்லாமல் கொள்ளாமல் ஓட்டம் பிடிக்கிறான் மந்திரவாதி. மன்னன் மாரவேள் மனங்கலங்கினான். ஊரெங்கும் இதைத் தம்பட்டங் கொட்டி அறிவித்தான். கோபுரத்திலிருக்கும் மாயப்பேயை விரட்டுகிறவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு. கொட்டை எழுத் துக்களில் பகல்பொழுதில் சுவரெங்கும் எழுதப்பட்டன, பல நாட்கள் சென்றன. யாரும் முன்வரக் காணோம். ஒரு குருவிக்காரன், 'குருவி ஜோஸியம்' 'குருவி ஜோஸியம்' என்று கூறி காலணா அரையணாவிற்கு ஜோஸியம்கூறிப் பிழைக்கிறவன் மயானபுரத்துக்கு வருகிறான்.

படுப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. கோயில் மண்டபத்தை அடைகிறான்.

'ஐயோ! அங்கே ஒரு பிசாசு இருக்கிறது அங்கு போகாதே! போகாதே! என்று அவன்மீதும் இரக்கங்காட்டித் தடுத்தனர் சிலர். அதை அவன் பொருட்படுத்தவில்லை. இரவு 8-மணி இருக்கும். அவன் முகத்தில் தெளிவு இல்லை. ஏதோ இழந்து விட்ட பொருளை எண்ணிக் கவலைப்படுவதுபோல இருந்தது அவன் முகம். கணத்தான் கோபுரத்திலிருந்து ஒரு குரல்வந்தது.

யாரது.........

குருவிசோசியக்காரன் முகத்தில் குதூகலம் காணப்பட்டது கோபுரத்தில் ஏறினான். புருக்களின் உறுமல். மேலும் ஏறினான். வௌவால்கள் சில இறைக்கையடித்துக்கொண்டன. அந்தக் குரல் மீண்டும் வருகிறது. அஞ்சவில்லை. கோபுரத்தின் ஐந்தாவது அடுக்கை அடைந்தான். அங்குதான் காணமல் கை தவறிப்போன அவன் 'காதற்கிளி' தங்கியிருந்தது. அவனைக் கண்டதும் இறக்கையடித்துப் பறந்து அவன் கைமீது வந்து உட்கார்ந்தது. கிளியை எடுத்து முத்தமிட்டுக் கொஞ்சினான்.

மறுநாள் அந்தமண்டபத்தில் சப்தமில்லை. குருவிசோசியக் காரன் ஒவ்வொருவராக பயத்தைத் தெளிவித்து கோயிலுக்குள் அழைத்துவந்தான். இப்பொழுது அந்தச் சத்தமில்லை. மன்னன் மாரவேள் காதுக்கு இந்தச் செய்தி எட்டியது. குருவிக்காரனை அழைத்துக் கேட்டான். 'அரசே என்னிட மிருந்த அதிர்ஷ்டக்கிளி ஒருமாதகால்மாகக் காணமல் இருந்தது. அதற்குப் பேச்சுப் பழக்கிவைத்திருக்கிறேன். என்னுடைய பொருள் எல்லாவற்றையும் பாதுகாத்துத் திருடர்கள் வந்தால் 'யாரது போ வெளியே' என்று சொல்லும். அது இந்தக் கோபுரத்தில் இருந்தது. எனக்குக்கிடைத்துவிட்டது என்றான். அங்கிருந்தவர்களெல்லாம் ஆச்சரியத்தோடு மாயக் கிளியைப் பார்த்தார்கள். ஆயிரம் பொன் பரிசும் அவனுக்கே கிடைத்தது.

இப்போது கோயிலில் முன்போலவே பூசை நடக்கிறது. மணியோசை டாண் டாண் எனக் கேட்கிறது.

நமது செய்திகள்

'விசாகு'

குன்றக்குடி
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விஜயம்

இராமேசுவரத்திலிருந்தபடியே பாடினர் இலங்கையிலுள்ள தலங்களை ஞானசம்பந்தர். கடல் கடந்து சமயம் பரப்பும் இன்றியமையாமை சமய குரவர்களுக்கு ஏற்பட்டதில்லை. தற்போது குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக சுவாமிகள் அவர்கள் கடல் கடந்து கீழை நாடுகளாகிய மலேயா முதலிய நாடுகளில் சமய உணர்வு உண்டாக்கும் சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள். 23—12—54 அன்று மகாசந்நிதானம் அவர்கள் சென்னைத் துறைமுகத்திலிருந்து பயணம் தொடங்கினார்கள். நாடெங்கணும் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெற்றன.

தருமையீன்ற தவமுனிவர்:

குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் தருமபுர ஆதீனம் 25 வது மகாசந்நிதானம் அவர்களிடம் சைவ சம்பிரதாயப்படி துறவுபூண்டு பல ஆண்டுகள் இந்த ஞானபூமியிலேயே இருந்து வளர்ந்தவர்கள். தருமையாதீனத்தின் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானிடம் அளவற்ற அன்பு கொண்டவர்கள். எனவே 20–12–54 அன்று பயணம் சிறப்புற முடியவேண்டி தருமைக்கு எழுந்தருளி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களையும் சந்தித்து ஞானபுரீஸ்வரர் ஆலயம் சென்று வழிபாடாற்றியருளினார்கள்.

பாராட்டு விழா:

அன்று மாலை 3 மணிக்கு ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆதீனப் பல்கலைக் கல்லூரிக்கு எழுந்தருளினார்கள். ஆதீனத்திருக் கூட்டத்து அடியார்கள் சார்பில் 'போற்றியுரை' ஒன்று குறுக்கை தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத். முத்துக் குமரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வாசித்

தளிக்கப்பெற்றது. அடுத்து ஆதீனக் கல்விநிலையங்கள் சார்பில் ஆதீனக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் வாழ்த்துக் கவிமாலை ஒன்று வாசித்துச் சமர்ப்பிக்கப் பெற்றது. பின்னர் ஆதீனக் கல்லூரி மாற்றும் முதல்வர் திரு. கி. இராமலிங்கம் M. A. அவர்கள் ஆசிரியர்கள் சார்பில் பாராட்டுரை ஒன்றைப் படித்துச் சமர்ப்பித்தார்கள். பாராட்டுரையாக ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், திரு. சொ. சிங்காரவேலன் அவர் களும் ஆதீனக் கல்லூரி மாற்றும் முதல்வர் திரு. கி. இராமலிங்கம் M. A. அவர்களும், ஆதீனக் கீழைக்கலை நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. கை. முருகையாப்பிள்ளை அவர் களும் பாராட்டைத் தெரிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ப்திலுரையாக வெளிநாடு சென்று அன்பு, அருள், அறம் இவற்றை விளக்கிச் சமயம் பரப்பி வருவதாகக் கூறியருளினார்கள்.

பொற்பதக்கம்:

தருமையாதீனம் 25 வது மகாசந்நிதானம் அவர்கள் பெய ரால் குன்றக்குடி ஆதீனம் மகாசந்நிதானம் அவர்கள் இந்தப் பொற்பதக்கத்தை வழங்க மூன்றாண்டுகளுக்குமுன் ஏற்படுத்தி யுள்ளார்கள். ஆதீனக் கல்லூரியில் முதலாகத் தேர்வுறும் மாணவர் இப்பரிசு அடைதற்குரியார். இந்த ஆண்டு ஆதீனக் கல்லூரியில் முறையாகப் பயின்று ஸ்ரீ வில்லிபுத்தூர் உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றுகின்ற வித்து வான். திரு. S. சிவப்பிரகாசம் அவர்களுக்கு இப்பரிசு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் வழங்கப் பெற்றது. பரிசுபெற்ற கல்லூரிப் பழைய மாணவர் திரு S. சிவப்பிரகாசம் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார். திரு முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் பொற்பதக்கம் பெற்ற சிவப்பிரகாசத்தைப் பாராட்டி மாணவர் ஊக்கத்தோடு படித்து ஒவ்வொருவரும் இதை அடைய முயலவேண்டுமெனக் குறிப்பிட்டார்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தலைவர் பிர்மஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரிகள் M. A. B. L. அவர்களால் நன்றியுரை தெரிவிக் கப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாலை 5 மணிக்கு எழுந்தருளினார்கள்.

குடந்தை சிவனடியார் திருக்கூட்ட ஏழாவது ஆண்டுவிழா

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திறப்புரை

தில்லையில் சிவனடியார்களாகிய சேனையைத் திரட்டி, சேனாபதியாகிய திருவாதவூரர் படை எடுக்க உத்தரவிட்டுப் படை எழுச்சி பாடுகிறார், 'ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப் பறை அறைமின், மதிவெண்குடை கவிமின், நீற்றுக் கவசம் புகுமின் 'தொண்டர்களே; தூசி செல்வீர்! பத்தர்களே சூழப் போகீர்! யோகியர்களே! பேரணியுந்துங்கள். சித்தர்களே! கடைக்கூழை செல்லுங்கள்' மாயப்படையை முறியடித்து வான நாடு செல்லுவோம் என்று. சிவனடியார்களைப் படைதிரட்டிப் பாசறையாக்கினார் திருச்சிற்றம்பலத்தைத் திருவாதவூரர்.

இத்தகைய ஒரு படையிருப்பு குடந்தையிலிருக்கிறது. படையின் சேனாபதி, தலைவர், திரு. P. T. S. குமாரசாமி செட்டியார் அவர்கள். வளர்ந்துவரும் இந்தச் சிவனடியார் திருக்கூட்டத்துக்கு 1–1–55 அன்றோடு ஏழாண்டு வயது நிரம்பியுள்ளது. இந்தக்குழந்தைக்கு ஆசிகூறி, வளர்ந்துவரும் வளமையை, வனப்பைக் கண்டுகளிக்க தருமபுரம் ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் எழுந்தருளினார்கள்.

ஏழாவது ஆண்டுவிழா மிகச் சிறப்பானமுறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. குடந்தை ஸ்ரீ கும்பேசுவர ஸ்வாமி ஆலயத்தில் மங்களாம்பிகா நூல் நிலையத்தில் இவ்விழா நடைபெறுவது வழக்கம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் வருகையைப்பெற்ற குடந்தை மக்கள் குதூகலம் அடைந்தார்கள். குழந்தை தன் தந்தையைக் காணும்போதுள்ள மகிழ்ச்சி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைக் காணும்போது சிவனடியார் திருக்கூட்டத்துக்கு இருந்தது. திருவலஞ்சுழி விநாயகர் சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு ஏற்பட்ட திருவுள்ளக்குறிப்பு இப்படிக் குடந்தையில் சிவன் அடியார் திருக்கூட்டமாகப் பரிணமித்திருப்பதை எண்ணி

எண்ணி மக்கள் இன்புற்றனர். மாலை 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ கும்பேசுவரசுவாமி ஆலயத்தை அடைந்தார்கள். கோவில் மரியாதைகள் பார்க்கப்பெற்றன. நகரப் பெருமக்களால் மாலை மரியாதைகள் செய்யப்பெற்றன. சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் சைவத்திரு. P. T. S. குமாரசாமிச் செட்டியார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை அழைத்துச்சென்றார்கள். கோயிலெங்கும் மக்கள் திரள் திரளாகக் கூடியிருந்தனர்.

ஆலயதரிசனம் :

நேரே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆலயம்சென்று வழிபாடாற்றினார்கள். அபிஷேக அர்ச்சனைகள் ஆதீனச்சார்பில் நடைபெற்றன. ஸ்ரீகும்பேசுவரருக்கும் ஸ்ரீமங்களாம்பிகைக்கும் பட்டுப் பரிவட்டங்கள் சார்த்தப்பெற்றன. பக்தர்கள் பலரும் ஆலயம்சென்று வழிபாடாற்றினர்.

வழிபாட்டுக்குப்பின் :

வழிபாட்டுக்குப் பின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மங்களாம்பிகை நூல் நிலையத்துக்கு எழுந்தருளினார்கள். இது தான், சிவனடியார் திருக்கூட்ட ஆண்டுவிழா மண்டபம். மகாசந்நிதானம் அவர்கள் இருப்பிடத்திற்குச்சென்று எழுந்தருளினார்கள். மங்களாம்பிகை நூல்நிலையம், மக்கள் வெள்ளத்தினால் நிரம்பியிருந்தது. வெளியிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் நின்றுகொண்டிருந்தனர்.

வரவேற்புரைகள் :

ஆதீன ஓதுவாமூர்த்தி திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்களின் கடவுள் வாழ்த்துக்குப்பின் நகரப்பிரமுகர்கள் பலராலும் அருள்நெறி மன்றத்தாராலும், பல சங்கங்களாலும், வரவேற்புரைகள் வாசித்தளிக்கப் பெற்றன. சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் சிவசேனாபதி திரு. P. T. S. அவர்கள் உணர்ச்சிப் பெருக்கால் உரைகுழற மெய்குழற ஒரு வரவேற்புரை ஒன்றை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வாசித்தளித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திறப்புரை :

மக்கள் பரந்த உள்ளமாகவிருந்து கடவுளை வழிபட வேண்டும். பல்லாண்டுகளாக தெய்வீக நெறியை அழியாது வளர்க்கும் வழியில் பெரியபுராணம் முதலாகப் பல ஞான நூல்கள் இருப்பதைப் படித்துப் பயன்பெறவேண்டும். பல்வேறு பந்தங்களினின்றும் மனிதவர்க்கம் தூய்மையான ஞானவழியில் வீறுகொண்டு எழுந்து பக்திமார்க்கத்தில் ஈடுபடவேண்டும். ஒரு மனப்பட்டு தியானிப்போருக்கும் வேண்டுவோர்க்கும் வேண்டு வதைக் கொடுப்பான் கருணாநிதி. இதற்குச் சான்றாகக் காரைக் கால் அம்மையார் சரித்திரம் உள்ளது.

சைவ சமயத்தில் உள்ள சாத்திரம் பரந்த தர்மங்களை அழியாமல் பாதுகாத்தும் வளர்த்தும் வருகிறது. மகத்தான தத்துவங்களை சைவசமயம் போதிக்கிறது. எல்லாவற்றையும் ஆதரித்து பிரகாசிக்கின்ற சமயம் இது. என்றென்றும் ஆஸ்திகம் உயர்ந்து வளரும், நாஸ்திகம் எல்லாம் அழியும், ஆஸ்திக சுதந்திர ஆதர்ச வேகத்தின் முன் எந்தத் தீய நாஸ்திகமும் நிலைபெற்று நிற்கமுடியாது என்று கூறியருளினார்கள்.

வாழ்த்துரை :

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் தமிழகத்தின் மாண் பினையும் சோழநாட்டின் பெருமையையும் விளக்கி, புலவர் வாழ் புகழை விவரித்து, குடந்தைக் கோயில்களின் முக்கியத்து வத்தை எடுத்துக்காட்டி, சிவனடியார் திருக்கூட்டம் தோன்றிய வகையை விவரித்து, அன்பே சிவம் என்பதைச் சுட்டிக்காட்டி, அடியார் யார் என்பதைத் தெளிவுபடுத்தி, நால்வகை அடியவர் களின் தன்மையைக் குறிப்பிட்டு, அடியார்களின் தலையாய கடனை வற்புறுத்தி, அடியாரும் கடவுளே என்று வலியுறுத்தி, ஐந்தெழுத்தின் உட்கருத்தை ஊன்றவைத்து, திருநீற்றின் பேற்றை அறிவுறுத்தி, வேந்தர் ஒருமையை உணர்த்தி தோத்திரம் சாத்திரம் இவற்றின் அவசியத்தையும் எடுத்து விளக்கிக் காட்டினார்கள்.

நம்பிக்கைத் துரோகம் எவருக்குமாகாது. அத்துரோகம் நம்மை அணுகாமல் இருக்க வேண்டினால் அடியார் கூட்டம்

பெருகவேண்டும். அவர் கூடுவதே கூட்டம். ஆண்டவனும் ஆன்மாக்கள் அவனை இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வணங்க நமக்குத் தலையும், வாழ்த்த வாயும் வைத்து உதவினன் என்றால் அடியார் கூட்டத்தைக் காட்டிலும் அருளுறவுக்கு உரியது வேறு உண்டோ! அடியவர் திருக்கூட்டத்தில் இக் காலத்தில் இந்நாட்டில் சைவத்துக்கு ஓர் ஆக்கமும் சைவ மக்க ளுக்குப் புதிய ஊக்கமும் ஏனையோர்க்குத் தத்தம் சமயத்தில் நோக்கமும் ஏற்பட்டிருக்கின்றன என்று ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை கூறினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளிய 'திறப்புரையும் வாழ்த்துரையும்' 'தனியே அச்சிடப்பெற்றிருந்தது. சைவத்தின் சிறப்பு திருநீற்றின் சிறப்பு ஐந்தெழுத்தின் சிறப்பு மங்கையர்க் கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார் இவர்களின் பெருமைகள் இவற்றை விளக்கியருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களால் அருளப்பெற்று அச்சிடப்பெற்றிருந்த நூலை ஆதீனப் பல்கலைக்கல்லூரி மாற்றும் முதல்வர் திரு. கி. இராமலிங்கம் M. A. அவர்கள் வாசித்தார்கள். அச்சிட்டவை அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன.

சொற்பொழிவுகள் :

அன்றையநாள் மங்கையர்க்கரசியார் திருநாள். இன்றைய தலைவர் பழனி, சைவ சித்தாந்தசரபம்; சிவஸ்ரீ ஈசான சிவா சாரியார் அவர்கள். தலைவர் தம் முன்னுரைக்குப் பின் ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்; புலவர், திரு, முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் சொற்பொழிவாற் றினார்கள்.

பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி திரிபுவனம் ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி ஆலயத்தை அடைந் தார்கள். அங்கு வழிபாடு நடைபெற்றது. இரவு 11 மணிக்குத் தருமையை அடைந்தார்கள்.

திருவெம்பாவை மாநாடுகள்

தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருள் ஆணையின் வண்ணம், வழக்கம்போல் ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் ஆதீன சமயப் பிரசாரகர்களைக் கொண்டு திருவெம்பாவை மாநாடு நடத்தப் பெற்றது.

வள்ளலார்கோயிலில்

30—12—54 வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரர் கோயிலில் மாநாடு நடைபெற்றது. திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் முதற் பாடலுக்கும், மாயூரம் குமரக்கட்டளை, கட்டளை விசாரணை, ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள் இரண்டாவது பாடலுக்கும் விளக்கங்கள் கூறினர். ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாற்றும் முதல்வர், திரு. கி. இராமலிங்கம் M. A., அவர்கள் முறையே எட்டு பாடல்களுக்கு 'பெண்கள் துயில் எழும் முறையிலும் பேசிக்கொள்ளும் முறையிலும்' விளக்கங்கள் கூறக்காலை நிகழ்ச்சி முடிந்தது. மாலை 4-மணிக்கு மாநாடு தொடங்கியது. பண்டித திரு. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் 11 முதல் 14 பாடல்களுக்கு விளக்கம் கூறினர். ஆதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் 15 முதல் 17 வரை உள்ள பாடல்களுக்கு விளக்கம் கூறி மார்கழி நோன்பைப்பற்றி விவரித்தார். தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் 18 முதல் 20 வரை உள்ள பாடல்களுக்கு விளக்கம் கூறினர். அடுத்து தமிழ்க்கல்லூரி வித்துவான் வகுப்பு மாணவர், திரு. ம. சிவசம்பு சிவபோக சாரத்தின் சிறப்பைக் கூறினர். ஆதீன ஆகம பாடசாலை ஆசிரியர் வியாகரண சிரோமணி பிர்மஸ்ரீ M. S. சுப்பிரமண்ய சர்மா அவர்கள் 'ஐந்தெழுத்தின்' சிறப்பை எடுத்து விளக்கினர்கள்.

இரவு 8-மணிக்குத் திருவாரூர் திரு. T. V. நமசிவாயமவர் களின் இன்னிசை மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர்கள் திரு. சம்பந்தம் பிள்ளை அவர் களும், திரு. விஸ்வநாதய்யர் அவர்களும் இசைக்கருவிகள் வாசித்தனர்.

இரவு 8-30 மணிமுதல் திரு. T. K. கோதண்டராம ஐயர் அவர்கள் குழுவினரின் இன்னிசையரங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இரவு 9 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

திருக்கடவூரில்

31—12—54 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீ அமுத கடேஸ்வரர் ஆலயத்தில் மாநாடு நடைபெற்றது. தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவெம்பாவையில் முதல் ஐந்து பாடல்களுக்கு விளக்கம் கூறினர்கள். ஆதீனக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் அவர்களும் ஆதீனக் கிளைக்கலை நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. கை. முருகையாபிள்ளை B.A., L.T., அவர்களும் ஷை பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. வீ. சபேசன் அவர்களும் ஐந்தைந்து பாடல்களுக்கு விளக்கங்கள் தந்தனர்.

மாயூரம் குமரக்கட்டளையில்

1—1—55 சனிக்கிழமை மாலை 6 மணிமுதல் ஸ்ரீ சுப்பிர மணியஸ்வாமி தேவஸ்தானத்தில் மாநாடு நடைபெற்றது. தேவஸ்தானம் கட்டளை விசாரணை, ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் முதல் ஐந்து பாடல்களுக்கு அரும்பொருள் விளக்கங்கள் கூறினர்கள். ஆதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் மார்கழி நோன்பின் மாண்பை விவரித்தார். ஆதீனக் கல்லூரி மாணவர் திரு. ம. சிவசம்பு ஏனைய பாடல்களுக்கு விளக்கம் கூறினர்.

திருபுவனத்தில்

2—1—55 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி ஆலயத்தில் மாநாடு நடைபெற்றது. திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மாயூரம் குமரக்கட்டளை, கட்டளை விசாரணை, ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், குறுக்கை தேவஸ்தானம் கட்டளை விசாரணை, ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் ஆதின இளவடியார்கள் ஸ்ரீமத் சண்முகசுவாமிகள், ஸ்ரீமத் சட்டைநாத சுவாமிகள், ஸ்ரீமத் குமாரசாமி சுவாமிகள் ஆகியோரும், ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், ஓரியண்டல் மிடில் ஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. வி. சபேசன் அவர்களும், ஆதீனத் தொண்டர் திரு. மருணிக்கியார் அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள்

பறியலூரில்

3—1—55 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஸ்ரீ வீரட்டேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் ஷை ஆதீன சமயபிரசாரகர்களைக் கொண்டும், மற்றும் வேதசிவாகம பாடசாலை ஆசிரியர் திரு. சுப்பிரமணிய சர்மா. கல்லூரித் தமிழ்ப் பேராசியர்கள் முதலியோர்களைக் கொண்டும் மாநாடு நடத்தப் பெற்றது.

சீகாழியில்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருஞானசம்பந்தர் ஆலயத்தில் திருவெம்பாவை மாநாடு காலை 10 மணிமுதல் தொடங்கி நடைபெற்றது. சைவத்திரு. இராமநாத முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், புலவர் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் ஸ்ரீமத் குமாரசுவாமி

சுவாமிகள் அவர்கள், ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள், வித்துவான், சொ. சிங்காரவேலன் அவர்கள், திரு. கி. இராமலிங்கம் அவர்கள் M. A., திரு. சிவஞானம் அவர்கள் ஸ்ரீமத் சண்முக சுவாமிகள் அவர்கள், திரு. K. முருகையா பிள்ளை அவர்கள் ஆகியோர்கள் திருவெம்பாவைப் பாடல்களுக்கு அரும் பொருள் விளக்கங்கள் நயப் பொருள்கள் கூறினர். தேவஸ்தானத் தேவாரவகுப்பு மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

வைத்தீஸ்வரன் கோயிலில்

ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் ஆலயத்தில் காலை 9 மணி முதல் தொடங்கிமாநாடு நடைபெற்றது. மேற்குறிப்பிடப் பெற்றோர்களால் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கங்கள் கூறப்பட்டன. மாலையில் யானைமீது திருவாசக ஊர்வலம் நடைபெற்றது.

திருக்குவளையில்

திருக்குவளை ஸ்ரீ கோளிலியப்பர் ஆலயத்தில் திருவாரூர் இராஜாங்கக் கட்டளை, கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் மாநாடு நடைபெற்றது. ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஆதீனப்பல்கலைக் கல்லூரி மாற்றும் முதல்வர் திரு. கி. இராமலிங்கம் M. A., அவர்கள், தமிழ்ப் பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் ஆதீன சமயத்தொண்டர் திரு. சிவஞானம் அவர்கள், ஆதீனப் பல்கலைக் கல்லூரி 4-ம் ஆண்டு மாணவர் திரு. S. சுந்தரராசன் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள் ஆகியோர் திருவம்பாவைப் பாடல்களுக்கு விளக்கந்தந்தனர்,

79

ஆதீன சமயப் பிரசாரம்

ஆதீனத்திற்குச் சொந்தமான, குத்தாலம், ஸ்ரீ உக்தவேதீஸ்வரர் கோயிலில் கார்த்திகை ஞாயிறு தீர்த்தச் சிறப்பை முன்னிட்டு 11—12—54 மாலை 5 மணிக்கு சமயப் பிரசாரம் நடைபெற்றது. ஆதீனத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்கள், புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'சமயச் சின்னங்களைப்பற்றியும், வித்துவான், திரு. C, சிங்காரவேலன் அவர்கள் 'இன்றைய வாழ்வில் சமயம்' என்பது பற்றியும் ஆதீனக் கல்லூரி மாணவர் திரு. ம. சிவசம்பு அவர்கள் 'சமயத்தின் பொற்காலம்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர். பலரும் வந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

திருக்கடவூரில் :

திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேஸ்வர சுவாமி ஆலயத்தில் தேவஸ்தானச் சார்பில் நான்காவது சோமவாரம் 13—12—54 திங்கட்கிழமை மாலை 5 மணிமுதல் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. ஆதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'குருவருள்' என்பதுபற்றியும், பண்டித திரு. அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் 'வெண்ணீறு' என்பதுபற்றியும், ஆதீனக் கீழ்த்திசை நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர், திரு. கை. முருகையாப் பிள்ளை B.A.,L.T., அவர்கள் 'அஞ்செழுத்து' என்பதுபற்றியும், மேற்படி நடுநிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள் 'கோயிலை'ப்பற்றியும் ஆதீன சமயத்தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்கள் 'தொண்டு' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்.

சமயப் பிரசாரம்

தருமபுர ஆதீன சமயத்தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்களைக் கொண்டு கீழ்க்கண்ட ஊர்களில் சமயப் பிரசாரம் நிகழ்த்துவிக்கப் பெற்றன.

17—12—54 வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயிலில் திரு மருணீக்கியார் அவர்கள் 'மாணிக்கவாசகரும் திருவெம்பாவையும்' என்பதுபற்றிப் பேசினுர்கள்.

18—12—54 காலே 7-30 மணிமுதல் திருப்புன்கூர் ஹரிஜனர்சேரியில் 'நந்தனுர்' பெருமையை, எடுத்து தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்கள் விளக்கினுர்கள். அன்று காலே 9 மணிக்கு சேத்தூர் ஆதாரப் பாடசாலேயில் சமயப் பிரசாரம் நடைபெற்றது. ஆசிரியர். திரு. பஞ்சவர்ணம் அவர்கள் தலேமைவகித்தார்கள், தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்கள் 'குழந்தை உள்ளம் என்பதுபற்றிப் பேசினுர்கள்.

அன்று காலே 11 மணிக்கு தலேஞாயிறு கோயிலில் திரு. சம்பந்தம் பிள்ளே அவர்கள் தலேமை வகித்துப் பேசினுர்கள். தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்கள் 'ஞானசம்பந்தரைப் பற்றிப் பேசினுர்கள். திரு. முத்தையாப் பிள்ளே அவர்கள் வரவேற்புரை கூறினுர்கள். திரு. சாமிநாதப் பிள்ளே அவர்கள் நன்றி கூறினுர்கள். இரவு 7-30 மணிக்குத் திருப்புன்கூர் தேவஸ்தானத்தில் மாணிக்கவாசரைப்பற்றிப் பேசினுர்கள். ஆலய அலுவலர் நன்றிகூற அன்றையநிகழ்ச்சிகள் முடிவுற்றன.

19—12—54 இரவு 7-30 மணிக்கு சீகாழி திருஞான சம்பந்தர் கழகத்தில் சமயப்பிரசாரம் நடைபெற்றது. சீகாழி தேவஸ்தானக் கட்டளே விசாரணே, வித்துவான். ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலேமை வகித்தார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி முதலியார் அவர்கள் வரவேற்புகூறக் கூட்டம் தொடங்கப் பெற்றது. 'ஆலய வழிபாடு' பற்றி திரு. மருணீக்கியாரால் பேசப்பெற்றது. திரு. இராமநாத முதலியார் அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

20—12—54 சீகாழி சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில், சப்ரிஜிஸ்ட்ரார் திரு. தியாகராசய்யர் M. A., அவர்கள் தலேமைதாங்க கூட்டம் தொடங்கப்பெற்றது திரு. மருணீக்கியார் அவர்கள் 'திருநாவுக்கரசர்' என்பது பற்றிச் செற்பொழிவாற்றினுர்கள். திரு. இராமநாத முதலியார் அவர்களால் நன்றி கூறப்பெற்றுக் கூட்டம் இனிது முடிந்தது.

21—12—54 புள்ளிருக்கு வேளூரில் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவாலயத்தில், திரு. மருணீக்கியார் 'திருப்பாவையும் ஆண்டாளும், என்பது பற்றிப் பேசினார்கள். 22—12—54 அன்றும்மதம் வேண்டுமா? என்பது பற்றியும் பேசினார்கள்.

23—12—54 சீகாழி தேவஸ்தானத்தில் சூரியனார்கோயில் ஸ்ரீமத் மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்தார்கள். சமயம் வேண்டுமா? என்பது பற்றி திரு. மருணீக்கியார் அவர்கள் பேசினார்கள். திரு. சுப்பராய முதலியார் அவர்களால் நன்றி கூறப்பெற்றுக் கூட்டம் முடிவுற்றது.

24—12—54 தென்பாதி திரு. T. T. பிள்ளை அவர்கள் சத்திரத்தில் சமயப்பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பெற்றது. திரு. மருணீக்கியார் அவர்கள் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கம்கூறினார்கள்.

25—12—54 தஞ்சை சிறைப்பள்ளியில் மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையின் சிறப்புக்களைப் பற்றி திரு. மருணீக்கியார் அவர்கள் பேசினார்கள். 27—12—54 திருநின்றியூரில் ஆளுடைய பிள்ளையாரைப் பற்றிப் பேசினார்.

29—12—54 பறியலூரில் மாலை 3 மணிக்கு 'தக்கன்யாகம்' செய்து இறை உணர்ந்ததை இனிதே உரைத்தார். அன்று மாலை 6 மணிக்கு விளநகர் துறைகாட்டும் வள்ளலார் ஆலயத்தில் கடவுள் வழிபாடு பற்றிப் பேசினார்.

30—12—54 வள்ளலார் கோயிலில் காலை 9 மணிக்கு ஆலய வழிபாடு பற்றிப் பேசினார்கள்.

31—12—54 பச்சைப்பெருமாநல்லூர் ஞானசம்பந்தர் கழக முதலாண்டு விழாவில் திரு. மருணீக்கியார் அவர்கள் 'ஆலய வழிபாடு' பற்றி விளக்கம் கூறினார்கள்.

தருமபுர ஆதீன சமயத்தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்களுக்கு, தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிவஞானம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

62

சென்னை, தருமபுர ஆதீன
மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்

வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில் நிகழ்ந்த

திருவெம்பாவை - திருப்பாவை மாநாட்டு

நிகழ்ச்சி

திருவெம்பாவை – திருப்பாவை மாநாடு 27—12—54 முதல் 31—12—54 முடிய ஐந்துநாட்களும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. பொதுமக்கள் பலர் பெரும் பயன் உற்றனர். தமிழறிஞர் பலர் சொற்பொழிவாற்றினர். இசைப்புலவர் பலர் இசையமுதளித்தனர். ஸ்ரீ இராஜாஜி முதலிய பெரியோர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். விழாத்தொடக்கத்தில் சமயநெறி பரப்பக் கடல்கடந்து மலேயா முதலிய கீழை நாடுகட்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் அவர்கட்கு ஒரு பாராட்டுரை, நிலையச் சார்பில் வாசித்தளிக்கப் பட்டது.

27—12—54 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு விழாத் துவங்கியது. திருமுறை வகுப்பு ஆசிரியர், சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாத முதலியார் அவர்கள் கடவுள் வணக்கம் பாடினார். சென்னை, பச்சையப்பன் கல்லூரிப் பொருளாதாரப் பேராசிரியர், திரு. A. முத்தையா அவர்கள் M.A., அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் மார்கழிமாதச் சிறப்பையும், திருவெம்பாவை – திருப்பாவைப் பாடல்களை ஓதவேண்டிய இன்றியமையா இயல்பையும், மாநாட்டைத் தொடங்கிவைத்த குன்றக்குடி அடிகளாரவர்கட்கும் தருமபுர ஆதீனத்துக்கும் உள்ள தொடர்பையும் குறிப்பிட்டார்கள்.

குன்றக்குடி அடிகளார் ஸ்ரீலஸ்ரீதெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்து ஆசியுரை வழங்கினார்கள். தாய்மார்களால்தான் நமது சமயமும், பண்பாடும் பாதுகாக்கப்பட்டுவருகிறது. கன்னிப் பெண்கள் வைகறைப்பொழுதில் நீராடி, தமக்கும் பிறர்க்கும்

வளமையைப் பெருக்கிக்கொள்ள வழிபடுமுறையை வகுத்துரைப்பனவே இருபாவைப் பாடல்களும். பக்தி பெருகவும், பண்பு உயரவும், கற்புநெறி தழைக்கவும், அன்புப்பாதை மலரவும் திருவெம்பாவை – திருப்பாவைப் பாடல்கள் பெருந்துணைசெய்யும். இம்முயற்சியை எழுப்பிய கும்பகோணம் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கட்கும், இம்மாநாட்டைச் சிறந்த முறையில் சென்னையில் கொண்டாட ஏற்பாடு செய்த தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கட்கும் தமிழகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. "புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதோ" என்ற ஒரு வரியால் உயிர்கள் குறையுடையன என்பதையும், குறைவிலா நிறைவாக, குறைகளைப் பொறுத்தருளும் குணக்குன்றாக இறைவன் விளங்குகின்றான் என்பதையும் திருவெம்பாவை விளக்குகிறது. மேலும், "எங்கொங்கை நின்அன்ப ரல்லார் தோள் சேரற்க" என்பதால் கற்பின் உறுதிப்பாட்டையும் உணர்த்துகின்றது. கோதைதமிழ் பாதகங்கள் தீர்க்கும், பரமனடிகாட்டும் வேதமனைத்திற்கும் வித்தாகும். "செய்யாதன செய்யோம், தீக்குறளைச் சென்றோதோம், ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி" அறவுணர்வோடு வாழ்வோம் என்ற உறுதிப்பாட்டைக் கைக்கொள்ளத் தூண்டுகிறது. இவ்விரு நூல்களையும் படிப்பதால் பண்பாடு வளர்ச்சியடையும். அன்பும், கற்புநெறியும் வளர சிறந்தவழியாகும் என ஆசியுரை கூறி மாநாட்டைத் தொடங்கிவைத்தார்கள்.

விழாவிற்குத் தலைமைவகித்த சென்னை, மாநிலக்கல்லூரிப் பேராசிரியர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் தமது தலைமையுரையில் இந்த மாநாட்டைத் தேசியத் திருவிழா என்றே சொல்லலாம் என்றும், வாழ்க்கையோடு ஒட்டியே இவ்விழாக் கொண்டாடப்பெறுகிறது என்றும், குழந்தைகளும் ஆர்வங்கொள்ளுமுறையில் விளையாட்டாகக்கூட அமைந்துளது என்றும் கூறினார்கள். மேலும் இவ்விழா அரபிக்கடல் முதல் பசிபிக்கடல் வரையிலுள்ள தமிழர் வசிக்கும் நாடுகளில் பழங்காலந்தொடங்கிப் பாடிப் பரவும் பெருமையுடையது எனவும் அறிவித்தார்கள்.

பின்னர் மலேயாசெல்லும் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் அவர்கட்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம், நிலேயத்தின் சார்பில் வித்துவான். ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஒரு பாராட்டுரை வாசித்தளித்தார்கள். நிலேயத் திருமுறை வகுப்பு மாணவி திருமதி. M. நாகலட்சுமியம்மையார் குழுவினர் இன்னிசைவிருந் தளித்தனர்.

28—12—54 செவ்வாய்க்கிழமை மாலே 6 மணிக்கு ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. R. மகாதேவன் அவர்கள் தலேமை தாங்கினூர்கள். தமிழர் நாகரீகம் தூரக்கிழக்கு நாடுகளிலும் பரவியுள்ளதென்பதை பாங்காங்கிலும், சயாமிலும் "திரியம் பாவை" என்ற பெயரால் விழாக் கொண்டாடுவதன் மூலம் தெரிந்துகொள்கிறேம் எனத் தலேவரவர்கள் தமது தலேமை யுரையில் அறிவித்தார்கள். 'மாணிக்கவாசகர் மாண்பு' பற்றிப் பேசிய திரு. G. M. முத்துசாமிப்பிள்ளே அவர்கள் B.A, தூய்மையும், உண்மையும் எந்நாளும் ஒளிவிடத்தான்செய்யும். அவற்றை ஒருவராலும் நலியச்செய்ய முடியாது என்பதற்கு மணிவாசகர் வரலாறே சிறந்த சான்று எனக் கூறினூர்கள். 'திருவெம்பாவைச் சிறப்பு' பற்றிப் பேசிய திரு. வி. மு சுப்பிர மணியஐயர் அவர்கள் M.A., பேசுகையில் தெய்வசிந்தனேயுடன் நீராடவேண்டும் என்பதைத் திருவெம்பாவை குறிப்பிடுகிறது என்றும், அம்பா ஆடல் என்றும் பாவை விழா என்றும் இவ் விழா அழைக்கப்படுகிறதென்றும், கன்னிப்பெண்கள் தாயுடன் சென்று நீராடி வழிபடுவதையே அம்பா ஆடல் என அழைத் தனர் என்றும் உரைத்தார்கள். அடுத்து திரு. பாஸ்கரத் தொண்டமான் அவர்கள் பேசுகையில் கண்ணேத் துயின்று அவமே காலத்தைப் போக்கும் மக்களே மாணிக்கவாசகர் தட்டி எழுப்புகிருர் என்றும், ஊனக்கண் உறக்கத்தை அகற்று முகத்தால் ஞானக்கண் திறக்கப்பெறவேண்டும் என்பதை அறிவுறுத்துகிருர் என்றும் குறிப்பிட்டார்கள். நிலேயத் திருமுறை வகுப்பு மாணவியர் குழுவினரால் தேவார இசை யரங்கு நிகழ்த்தப்பெற்றது.

29—12—54 புதன்கிழமை மாலே 6 மணிக்கு சென்னே சட்டசபைச் செயலாளர், திவான்பகதூர், திரு. R. V. கிருஷ்ண அய்யர் அவர்கள் தலேமையில் கூட்டம் தொடங்கப்பெற்றது

ஸ்ரீ இராஜாஜி அவர்களும் விழாவில் கலந்து சிறப்பித்தார்கள். தலைவரவர்கள் தமது உரையில் ஒருசிலர் நாத்திகப்பிரசாரம் பல வகையிலும் செய்யத் தலைப்படுகின்றனர். அதற்குப் பொது மக்கள் எவ்விதத்திலும் இடந்தரலாகாது என்றும், விடியற் காலையில் கடவுள் உணர்வோடு நீராடி இப்பாவைப் பாடல்களை படிப்போர் உள்ளம் உருகி இன்பம் அனுபவிப்பதைக் காண லாம் என்றும், உரைத்தார்கள். எம்பாவாய் என்ற முடிபு இருபாவைப் பாடல்களிலும் காணப்படுகின்றது. ஆனால் மாணிக்கவாசகர் பாடியதைத் திரு எம்பாவை என்றும், ஆண்டாளம்மையார் பாடியதைத் திருப்பாவை என்றும் வழங்குகின்றனர். இதற்குக் காரணம் திரு எம்பாவை முன்னர் பாடப்பட்டதாதலால் பாடலின் முடிபை அப்படியே அமைத்து திருவெம்பாவை என வழங்கினர். திருப்பாவை பின்னர் பாடப் பட்டதாதலால் திருவெம்பாவையினின்றும் பிரித்து அதற்குத் திருப்பாவை என வழங்கினர் என்று அறிவித்தார்கள்.

திருப்புறம்பயம் பண்ணிசைமணி, திரு. M. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் குழுவினர் 'திருவெம்பாவை' இசையரங்கினை இனிமைதழுவ நிகழ்த்தினார்கள். நிலையத் திருமுறை ஆசிரியர், சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாத முதலியார் அவர்கள் குழுவினர் 'திருப்பாவை' இசையரங்கினைச் சிறந்த முறையில் நிகழ்த்தினார்கள். இரு இசைவாணர்களும் திருவெம் பாவை–திருப்பாவைப் பாடல்களைக் கேட்போருளங்கொளப் பண்ணமைத்தும், சுத்தாங்கமாகவும் பாடி மகிழ்வித்தனர்.

30—12—54 வியாழக்கிழமை மாலை 6 மணிக்குச் சென்னை, முன்னாள்மேயர் திரு. M. இராதாகிருஷ்ணபிள்ளையவர்கள் B.A., தலைமையில் விழா நடைபெற்றது. இறைவனை அடைவதற்கு ஒன்பது வழிகள் வைணவத்தில் உரைக்கப்படுகின்றன என்றும், அவற்றுள் நாயக நாயகிவழியே சிறப்புடையதென்றும், அதனை ஆண்டாள் திருப்பாவையில் உரைத்திருக்கிறாள் என்றும், ஆண்டாள்நாயகி முறையில் பாடியதோடு ஸ்ரீ ரங்க நாதனையே நாயகனாகவும் பெற்றாள் என்றும் கூறினார்கள். 'ஆண்டாள் கவித்திறன்' என்பதுபற்றி மயிலை விவேகானந்தா கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், திரு. C. ஜகந்நாதாச்சாரியார் அவர்கள் பேசுகையில் சீதாதேவியின் அவதாரமே ஆண்டாள்

என்பதை விளக்கிக்காட்டி, கவிக்கு அமையவேண்டிய இலக்கணங்கள் அனைத்தும் திருப்பாவையில் அமைந்திருப்பதை எடுத்துக் காட்டினார்கள். மேலும், "புவியினுக் கணியாய் ஆன்றபொருள் தந்து" என்ற கம்பர் பாடல், கவியின் திறத்தைக் குறிப்பிடுகிறதென்றும், "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி" யினை வில்லேந்திய வீரராகிய இராமர் கண்டார் என்றும், கோதைநாச்சியாரின் திருப்பாவைவரியினைச்சொல்வீரராகிய கம்பர் கண்டார் என்றும், கோதைநாச்சியாரின் வரியைப் பல இடங்களில் கம்பர் கையாள்வதிலிருந்து ஆண்டாள் கவித்திறன் விளங்குகிறதென்றும் குறிப்பிட்டார்கள். 'திருப்பாவைச் சிறப்பு' என்பதுபற்றிப் பேசிய பண்டிதவித்துவான், திரு. *B. R.* புருஷோத்தம நாயுடு அவர்கள் பேசுகையில் "திருமாலுக்கு அடிமைசெய், தீவினை அகற்று" என்ற ஔவைவாக்கியத்தை விளக்கமாக எடுத்துரைப்பதே திருப்பாவையாகும் என்பதைப் பல மேற்கோள்காட்டி அறிவித்தார்கள். தலைவர் அவர்கள் முடிவுரைக்குப்பிறகு மதுரை, திரு. *R.* மீனாட்சிசுந்தர பாகவதர் அவர்கள் குழுவினரால் இசையரங்கு நிகழ்த்தப் பெற்றது.

31—12—54 மாலை 6 மணிக்குத் தருமபுர ஆதீன இசைப் புலவர், இசையரசு, தேவாரமணி, திரு. *M. M.* தண்டபாணி தேசிகர் அவர்கள் குழுவினர் தமிழிசையரங்கு நிகழ்த்தினர். திரு. தேசிகரவர்கள் தேவாரப் பாடல்கள் சிலவும், திருவெம்பாவை – திருப்பாவைக் கருத்துக்கள் அடங்கிய தமிழ்ப் பாடல்கள் பலவும் பாடிப் பெருந்திரளாகவந்திருந்த மக்களனைவரையும் மகிழ்வித்தார்கள். ஒவ்வொருநாளும் கூட்டத் தொடக்கத்திலும் முடிவிலும் வித்வான், ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் வரவேற்புரையும்,நன்றியும் தெரிவித்தார்கள். திருமுறைவகுப்பு ஆசிரியர், சங்கீதபூஷணம், திரு. *P.* சுவாமிநாத முதலியார் அவர்கள் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினார்கள். செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் மாநாடு இனிதே நிறைவேறியது.

தருமபுர ஆதீனம்

திருச்சி மௌனமடம் கட்டளையின் சார்பில்

5—12—54 ல்

பெரியபுராண விரிவுரை-3

விரிவுரையாளர்

பெருஞ்சொற்கொண்டல் திரு. அ. மு. சரவணமுதலியார் அவர்கள்

"தடுத்தாட்கொள்ளல்"

நம்பியாரூரர் பெயர் சிறப்பு:— "தவத்தினன் மிக்கார் போற்று நம்பியாரூர ரென்றே நடமாடுஞ் சாத்தி' என வரும் தொடரில் என்றே என்பது பாடபேதம். இது 'என்ற' என்றிருத்தல் வேண்டும், இல்லையெனில் "தவத்தினன் மிக்கார் பெற்று" என்றிருந்தால் 'என்றே' எனவருதல் பொருந்தும். அப்படியிருப்பின் பெயரின் சிறப்பு அமையாது பொருள் தடையேற்படும். நம்பியாரூரர் என்ற திருப்பெயர் தவத்தால் சிறந்த பெரியோர் போற்றும் பெருமை வாய்ந்தது. இவ்வுண்மை பெருமிழலைக் குறும்ப நாயனர் வரலாற்றில் 'நாளும் நம்பியாரூரர் நாமம் நவின்ற நலத்தாலே" அணிமா முதலிய சித்திகள் கைவரப்பெற்ருர் எனவருதலால் உறுதிசெய்யப் பெறுகின்றது. இதனல் பெரியபுராணம் வரையறை செய்து பாடப்பெற்றதொரு செஞ்சொற் காவியமென்பது இனிது புலப்படும். வரையறை செய்து பாடுந்திறன் சேக்கிழார், கம்பர் முதலிய ஒருசில புலவர்கட்கே உரியது. (கம்பன் காவியத்திலிருந்து இதற்கு சில மேற்கோள்கள் காட்டப்பட்டன.)

குழந்தைகளுக்குப் பெயரிடுதல் எவ்வாறு? இறைவனது திருப்பெயர் அல்லது அவன் அடியார்களது திருப்பெயர்களைச் சூட்டுவது முந்தையோர் வழக்காக விருக்கத் தற்காலத்தில் பொருளற்ற சில பெயர்களையும் வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு சொல்லுக்கும் தன் பொருளாற் பயன் விளைவிக்கும்

ஆற்றலுண்டு. ஆதலால் இறைவனது அல்லது அடியார்களது பெயர்களையிட்டு வழங்கினுல் அவ்வாறு அழைக்குந்தோறும் மிகுந்த பலன் ஏற்படும் என்பது உறுதி,

"தம்பிரான் அருளினுலே தவத்தினுன் மிக்கார்" எனத் தொடரும் பாடலில் சாத்தி என்று வருகின்ற செய்து என்னும் வாய்ப்பாட்டு மூன்று எச்சங்களும் உருட்டும் என்ற பெயரெச்சத்தைக் கொண்டு முடிகின்றன. ஆனுல் சாத்தி என்ற எச்சங்களுக்குக் கர்த்தா நம்பியாரூரரின் பெற்ருேர்கள். உருட்டுதலுக்குக் கர்த்தா நம்பியாரூரர். முதல் மூன்று எச்சங்களும் தன் கர்த்தாவினை கொண்டு முடிய வேண்டுவன. ஆதலால் பிறகர்த்தாவின் வினையாகிய உருட்டுதலைக் கொண்டு முடியா எனவே செய்து என்னும் வாய்பாட்டு அவ்வினையெச்சங்களை சாத்தப்பெற்று என்று செயப்பாட்டு வினையெச்சங்களாக மாற்றிக்கொள்ளவேண்டும். அவ்வெச்சங்களை அவ்வாறே பொருள் கொண்டால் உருட்டுமென்னும் பெயரெச்சத்தை பிறவினையெச்சமாக்கி உருட்டுவித்த என்று பொருள்கொள்ள வேண்டும்.

நம்பியாரூரர் ஓர்நாள் தெருவில் தேருருட்டும்போது அந் நாட்டையாண்ட நரசிங்கமுனையர் என்னும் அரசர் இவரைக் கண்டார். இவரது பேரழகில் ஈடுபட்ட அவர் இவரது பெற்ருேர்களின் அனுமதி கொண்டு இவரைத் தனது அபிமான புத்திரராகப் பெற்று வளர்ந்துவந்தார். நம்பியாரூரர் உரிய காலத்தில் அருமறை முந்நூல் சாத்தப்பெற்று யளவில் தொல்கலைகளாய்ந்து மணப்பருவம் அடைந்தார். மணப்பருவம் எய்தவே, புத்தூர் சடங்கவி சிவாச்சாரியர் பால் இவருக்கு மணம் பேசச் சில பெரியோர்களை அனுப்பினுர் இவரது தந்தையார்.

இவ்விடத்தில் சேக்கிழாரது உலகியல் அறிவு சிந்திக்கத் தக்கது. ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்தவர்களாக, ஒவ்வொரு மரபிலும் அந்தந்த மரபைச் சார்ந்தவர்களின் கோத்திரங்கள் அனைத்தையும் தெரிந்த சில பெரியோர்கள் இருந்திருக்கின்றனர். அவர்கள்தான் பெண் கேட்கச் சென்றிருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது. 'குலமுதல்' என்று தொடங்கும் பாடலில் "மணம்புரி செயலின் வாய்மை பலவுடன்பேசி" என்ற

குறிப்புக்கு விரிவுரை போல திலகவதியார் திருமணம் பேச வந்த பெரியோர்களிடத்து புகழனுர் கூற்ருகக் குணம் பேசிக் குலம் பேசியதாகக் குறிப்பிடுகின்ருர். ஓர் பெண்ணின் மண விசயத்தில் சுற்றத்தார்கள் குலத்தை விரும்புவதும் பெண்ணின் தந்தை கல்வியை விரும்புவதும், தாய் செல்வத்தை விரும்புவதும் பெண் யெளவனம், அழகு முதலியவற்றை விரும்புவதும் இயற்கை. மேற்கூறிய நலங்கள் அனைத்தும் பொருந்தியிருப் பினும் மணமகன்பால் குண நலமில்லாதிருப்பின் பயனில்லா தாகிவிடும். எனவே ஈண்டுக் குணத்திற்கு முதன்மை கொடுத்துப் பேசியது அறிந்து இன்புறத் தக்கதொன்ரும்.

சடங்கவி சிவாச்சாரியரும் தமது மகளை நம்பியாரூராருக்குக் கொடுக்க இசையவே மணவினைக்கு ஏற்பாடாகியது. நம்பியா ரூரர் மணக்கோலங் கொண்டு குதிரை மீதேறி புத்தூர் வந்து சேர்ந்தார். மன்னவர் திருவும் தங்கள் வைதிகத்திருவும் பொங்க மணக்கோலம் கொண்டிருந்த காலத்தும் சுந்தரர் இறைவன் திருவடியை மறந்திலர். இதனை, "நாதன் தன்னடி மனத்திற் கொண்டே தகுந்திருநீறு சாத்தி" என்பதனுலறியலாம். இதனுல் நாம் அறிவது யாதெனின், இடர் வந்தகாலத்து இறைவனை நினைத்தல் மக்களுக்கே இயல்பு எனினும் வாழ்வு வந்த காலத்தும் இறைவனை மறவா திருத்தல் வேண்டுமென்ப தேயாம்.

"கண்கள் எண்ணிலாத வேண்டும் காளையைக் காண என்பார்" எனவரும்பாடல் புலவரது புலமையைக் குறிப்ப தாகும். இவ்வாறு வருமிடங்களில் ஏனைய புலவர்கள் மண மகனுக வருகின்றவனைக்கண்ட பெண்மக்கள் கூற்ருக வைத்து நம்முடைய பெண் இவனைக் கணவனுகப் பெறுவதற்கு என்ன தவம் செய்தாளோ? என்றும் இவன் அவளை மனைவியாகப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானே? என்றும் கூறுவதுண்டு (இதற்கு, திருவிளையாடற் புராணத்திலிருந்தும் கம்பன் காவியத்திலிருந்தும் சில மேற்கோள்கள் காட்டப்பெற்றன).

'பெண்களில் உயரநோற்ருள்' என்ற தொடர் சுந்தரர் மணம் செய்யாது செல்லவே அவ்வம்மையார் சுந்தரரையே தன் மனத்திற்கொண்டு முத்தியடைந்ததைக் குறிப்பாக உணர்த்திய தாகும்.

நம்பியாரூரர் மணக்கோலங்கொண்டு மணப்பந்தலில் இருக்குங்காலை சிவபெருமான் ஓர் முதிய அந்தணர் வடிவந்தாங்கி (நம்பிமுன் வேண்டிக்கொண்டபடி) தடுத்தாட் கொள்ளும் பொருட்டு அவண் வந்து சேர்ந்தார். வந்த முதியவர் நம்பிகளை நோக்கி "உனக்கும் நமக்கும் ஓர் வழக்குண்டு, அதனை முடித்த பிறகே மணஞ்செய்ய வேண்டுமென்று சொல்ல, நம்பியாரூரரும் அதற்கு இசைந்தார். முதியவர் ஈண்டு நம்பியைநோக்கிக் கூறுது சபையாரை நோக்கி "இந்நாவலூரன் எனது அடிமையாவன்; இதுவே எனது வழக்கு" என்று கூறினர்; இங்ஙனம் படர்க்கையில் வைத்துக் கூறியது என்னையெனின் கடுமையான மொழிகளைப் படர்க்கையில் வைத்துக் கூறவேண்டுமென்ற உலகியல் வழக்குப் பற்றியேயாம். இவ்வாறே, "ஓர் அந்தணர் மற்றோர் அந்தணர்க்கு அடிமையாதலை இன்று உன்னைக் கேட்டோம்" என்று முதலில் முன்னிலையில் கூறிய சுந்தரர் "பித்தனோ? மறையோன்" என்று படர்க்கையில் கூறியதும் இக்கருத்துப் பற்றியேயாம். இதனை யறியாது 'பித்தனோ? மறையோய்' என்று பிற்காலத்தில் பதிப்பித்திருக்கின்றனர்.

பின்னர் நம்பியாரூரர் தாம் அடிமை என்பதற்குச் சாதகமாயுள்ள அடிமையோலையை முதியவரிடம் பெறவிரும்பி அவரைப் பின் தொடர்ந்து செல்ல அவரும் ஓடினர். முடிவில் இறையவராகிய அம்முதியவரிடமுள்ள ஓலையைவாங்கிக் கிழித்தெறிந்தார் நம்பிகள். "ஏவணச் சிலையினரை யார் தொடர்ந்து எட்ட வல்லார்?" என்ற தொடர் சுந்தரரைத்தவிர வேறு யாராலும் இயலாது என்ற குறிப்பை உணர்த்தியது, மலர்மிசை அயனும், காண்பதற்கரியவர் சிவபெருமான். அவரருளின்றி அவரை யடைதல் இயலாததொன்று. உயிர்கள் பதியை உணர்ந்து பதியை அணுக ஓர்படி முயற்சித்தால் இறைவன் பல படிகள் இறங்கித் தானே வருவான் என்பது சைவசித்தாந்தம். அவ்வாறிருக்க உயிர்கள் இறைவனை நோக்கிச் செல்லுந்தோறும் இறைவனும் சென்றுகொண்டேயிருந்தால் எங்ஙனம் இறைவனை எட்டமுடியும்? முடியாத தொன்றேயாம். ஆனல் சுந்தரர் எட்டினரென்றல் அது அவருக்கே இயலும் எனப் பொருளுணர்த்தி நின்றது. 'பழைய மன்றாடி போலுமிவன்' என்றது பலதடவைகள் மன்றில் வழக்காடிப் பயிற்சியுடையான் என்ற பொருளொடு மன்றிலே திருநடம்புரியும் சிவபெருமானையுங் குறித்து இருபொருளை உணர்த்தி நின்றது.

பின்னர் மறையவராய்வந்த முதியவர் திருவெண்ணெய் நல்லூரை யடைந்து ஆங்குத் தனது வழக்கைச் சபையோர்முன் தெரிவித்தார். ('வேதபாரகரின் மிக்கார்' என்பது நீதிபதியை உணர்த்தும் சொற்றொடர். ஒழுக்க நலனும் சட்டஞானமும் உடையாரே நீதிபதியாயிருக்கத் தகுந்தவர். ஏதாவது ஒரு நலன் குறைவுபடினும் அது பொருந்தாது. "நல்லொழுக்கம் தலைநின்றார் நான்மறையின் துறைபோனார்" என்று திருநீல கண்ட நாயனார் வரலாற்றில் வருவதைக்காண்க.) நம்பியாரூரர் தன் அடிமை என்பதற்குரிய மூல ஓலையை முதியவர் காட்டி நிரூபிக்க சபையாரும் நம்பியாரூரர் திருவெண்ணெய்நல்லூர் முதியவருக்கு அடிமை என்று முடிவுசெய்தனர்.

பின்னர் சபையார் முதியவரைநோக்கி "உமது ஊர் திருவெண்ணெய் நல்லூரெனின் உமது இருக்கை எது? என்று வினவ முதியவர் தமது இருப்பிடத்தைக் காட்டுவதாகக்கூறி சபையாரும் நாவலூரரும் பின்செல்ல திருவெண்ணெய்நல்லூர்க் கோவிலிற்சென்று மறைந்தார். யாவரும் திகைத்து நிற்க சிவபெருமான் இடபாரூடராகக் காட்சி கொடுத்து நம்பியாரூர ருக்கு முன்னைத் தொடர்பை ஞாபகமூட்டி "நாமேவந்து தடுத் தாட்கொண்டோம்; என்னோடு வாது செய்தமையால் 'வன் றொண்டன்; என்ற பெயரைப்பெற்றாய்; மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று திருவாய் மலர்ந்தார்.

ஆண்டவனைப்பற்றி அறிஞர்கள்

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

திருமூலர் திருமந் 270.

அளவில்லாத அறிவும், ஆற்றலும், மேலான பரிசுத்தத் தன்மையும், உயர் தூய்மையும் ஒருங்கே எவனிடம் பரிபூரணமாக இருக்கின்றனவோ அவனே ஆண்டவன்.

(மு. இரா.)

லக்ஷார்ச்சனைகள்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீவதான்யேசுவரர் ஆலயத்தில் ஸ்ரீ தெக்ஷிணமூர்த்திக்கு 30—12—54 வியாழக்கிழமை காலையிலிருந்து இரவுவரை ஏகதின லக்ஷார்ச்சனை மிகச் சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. அன்று காலை 9 மணிமுதல் 1 மணிவரையிலும், மாலை 3 மணிமுதல் 7 மணிவரையில் ஆலயத்தில் திருவெம்பாவை மாநாடும் இன்னிசையரங்கும் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

உலக சுபிக்ஷத்தை முன்னிட்டு தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரிஸ்வரஸ்வாமி கோயிலில் ஸ்ரீ ஞானம்பிகைக்கும் கீழக்கோயிலில் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கும் 18—12—54 சனிக்கிழமை அன்று தொடங்கி லக்ஷார்ச்சனை 6—1—55 குருவாரத்தன்று நிறைவுற்றது.

ஆதீனத்துக்குச் சொந்தமான வைத்தீஸ்வரன் கோயில் தேவஸ்தானத்தில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கும் ஸ்ரீ தையலுநாயகி அம்மைக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் 21—12—54 செவ்வாய்க்கிழமை தொடங்கி 4—1—55 முடிய லக்ஷார்ச்சனை நடைபெற்றது. ஸ்ரீ தையலுநாயகிக்குச் சந்தனக் காப்பலங்காரம் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமி கோயிலில் ஸ்ரீ அமுதகடேஸ்வர சுவாமிக்கும், ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கும் 18—12—54 சனிக்கிழமை யன்று லக்ஷார்ச்சனை தொடங்கி 7—1—55 அன்று நிறைவுற்றது.

ஜென்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜென்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவஸ்தலங்கள்தோறும் அபிஷேக ஆராதனைகள் செய்துவரும் வழக்கம்போல். இம் மாதத்திலும் 18—12—54 சனிக்கிழமை திருச்சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச் சார்பில் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருநாகைக்காரோணம் திருப்பதிகம் என்ற ஆதீன வெளியீடும் அன்பர்களைக் கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதச்செய்யப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின்

மார்கழிமாதத்தில் தலயாத்திரை

மார்கழி மாதத்தில் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழக்கம்போல் காலை சுமார் 4-மணிக்கே தொடங்கியருளினார்கள். அப்போது ஒலிபெருக்கி மூலம் திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டது. ஆதீனக் கல்வி நிலையமாணவர்கள் திருப்பள்ளியெழுச்சி பாராயணத்துடன் வீதிவலம் வந்து ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் வழிபாட்டில் கலந்துகொண்டனர். பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மார்கழிமாதத்தில் செய்துவரும் தலயாத்திரைக்கு எழுந்தருளிப் பல தலங்கள்தோறும் சென்று வழிபாடாற்றி யருளினார்கள்.

17—12—54 காலை விளநகர், ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பின்னர்த் திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேசுவரசுவாமி ஆலயத்துக்கு எழுந் தருளி, சுவாமி, அபிராமி, காலசங்காரமூர்த்திகளை தரிசித்துத் திரும்பியருளினார்கள்.

18–12–54 பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி ஆலயத்துக்கும், *19–12–54* திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரர் ஆலயத்திற்கும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணசடேசுவரசுவாமி கோயிலுக்கும் *20–12–54* குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி கோயிலுக்கும், *21–12–54* வேளூர் ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் ஆலயத்துக்கும், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி கோயிலுக்கும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதப்பெருமான் ஆலயத்துக்கும், திருமுல்லை வாசல் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி ஆலயத்துக்கும் எழுந்தருளி வழிபட்டார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி ஆலயத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் எழுந்தருளியபோது காசிமடம் காசிவாசி, ஜூனியர், வித்துவான், ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆலயத்திற்கு எழுந்தருளி, ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களைத் தரிசித்து, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் திருமடத்திற்கு எழுந்தருளுவிக்கச்செய்து, அங்குக்

கொலு முதலியவைகள் அமைத்து, விசேஷபூஜை முதலியவைகள் செய்து உபசரித்தார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

26–12–54 கொறுக்கை, வள்ளலார்கோயில், தலைஞாயிறு ஆகிய இடங்களுக்குச் சென்று வழிபட்டார்கள்.

4–1–55 திருமுல்லைவாயில், வேளூர், சீகாழி, குடந்தை முதலிய தலங்களுக்கு எழுந்தருளி ஆலயம் சென்று வழிபாடாற்றினார்கள்.

8–1–55 காலை சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயிலுக்கு எழுந்தருளித் திருவாதிரைத்திருவிழாவில் ஸ்ரீ ஆனந்தநடராஜப் பெருமானை வழிபட்டார்கள்.

அங்கங்கும் மக்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் ஆலயம் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

சிறப்பாக ஆதீன தேவஸ்தான கோயில்களுக்கு எழுந்தருளும்போது ஆகம பாடசாலை மாணவர்களையும் உடனழைத்துச்சென்று ஆங்காங்குள்ள கருப்பக்கிருகங்களையும், மூர்த்திகளையும் தூய்மைப்படுத்தச்செய்து அங்கு விசேஷ அபிஷேக ஆராதனை முதலியவைகளைச் செய்வித்து, பிரசாதம் முதலியவைகளைச் சிறுவர்களுக்கு வழங்கியருளினார்கள்.

மேலும் ஆலயங்கள் தூய்மையுடன் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் கவனித்து ஆவனசெய்து வந்துள்ளார்கள்.

சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி திருக்கடவூர் ஆலயசிப்பந்திகள் எல்லோரும் காலையில் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டின்போது ஒன்று சேர்ந்து வழிபடுவதாகவுள்ள ஓர் கூட்டு வழிபாட்டுமுறை ஏற்படுத்தியது. திருக்கடவூர் வேளூர், குத்தாலம் முதலிய இடங்களில் லக்ஷார்ச்சனைகள் நடைபெற்றன.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்துக்கு

காஷ்மீர் மன்னர் வருகை

காஷ்மீர் மன்னர் மேன்மைதங்கிய யுவராஜா கரன்சிங் ஜம்மு காஷ்மீர் சாதாரி இரி அசத் அவர்கள் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி கோயிலுக்கு தரிசனத்திற்காக 3—1—55 திங்கட்கிழமை மாலை 6 மணிக்குக் குடும்பத்துடன் வந்தார்கள். அவர்கள் அக்கோயிலுக்கு வரப் போவதாக ஏதும் முன்னறிவிப்பே இல்லை. அவ்வழியாகச் சென்றவர்கள் கோபுரத்தைக் கண்டதும், வண்டியை நிறுத்தி உள்ளே நுழைந்தார்கள்.

நேரே சுவாமி சந்நிதிக்குச் சென்றார்கள். அங்கே அதுபோது இருந்த கோயில் கண்காணிப்பாளர் வழிபாடு செய்வித்தார். சுவாமி சந்நிதியில் தாம் பாட்டுப்பாடி வழிபடலாமா என்று கண்காணிப்பாளரை மன்னர் அவர்கள் கேட்டார்கள். செய்யலாம் என்றதும், சமஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும் உருக்கமாகப் பாட்டுக்கள் பாடிக் கும்பிட்டுவிட்டு காணிக்கை சமர்ப்பித்தார்கள்.

வலம் வரும்போது கோமுகைவரைக்கும் வந்து, 'சிவனைச் சுற்றிவருவது இப்பக்கத்து வழக்கமா? எங்கள் பக்கத்தில் சுற்றிவரமாட்டோம்' என்றார்கள். கண்காணிப்பாளர், 'சுற்றி வருவது இப்பக்கத்து வழக்கம்' என்றதும், வலம்வந்தார்கள். பிறகு, அம்மன் சந்நிதியில் ஸ்தோத்திரம் சொல்லி வழிபட்டார்கள். அம்பிகை என்றால் என்ன என்று வினவ, அம்பிகை பராசக்தி என்று விளக்கம் கூறப்பட்டது. விநாயகரைக் கண்டதும், 'இப்பக்கங்களில் நீங்கள் சுப்பிரமணியரைத்தானே முதலில் வழிபடுகிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'இல்லை, விநாயகரையே முதலில் வழிபடுகிறோம். பிறகே சுப்பிரமணியரை வழிபடுகிறோம்' என்று பதில்கூற 'அப்படியா? எங்கள் பக்கத்திலும் அப்படியே' என்றார்கள்.

கோயில் கண்காணிப்பாளருக்கு வந்தவர்கள் யார் என்றே முதலில் தெரியாது. மாலைமரியாதைகள் செய்வித்து வெளியே வந்து மன்னர் அவர்கள் வண்டியேறும்போது, செலுத்திய காணிக்கைக்குப் பற்றுச் சீட்டுப் போட்டுத் தரவேண்டும் ஆகவே தாங்கள் பெயரைக் கூறவேண்டுகிறேன்' என்று கண் காணிப்பாளர் பணிவுடன் கேட்டதற்கு, 'கரன் சிங், காஷ்மீர்' என்றுசொல்லிக்கொண்டே வண்டியேறிச்சென்றுவிட்டார்கள். கோயிலில் கண்டனவும், வழிபாடும் மன்னர் அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியளித்தது. கோயில் நல்லமுறையில் கண்காணிக்கப் படுவதாகவும் அங்கு மன ஈடுபாடு உண்டாவதாகவும் கூறிய தாகத் தெரிகிறது. அவர்களுடன் யுவராணி, மகாராணி, மற்ற இதர அதிகாரிகளும் உடன்வந்தார்கள்.

Extracts from the Visitors' Book of

Sri Kambahareswaraswamy Devasthanam

Tirubuvanam, Kumbakonam Tk, Tanjore Dt.

I had the pleasure of worshipping in this wonderful temple. The atmosphere is clean and inspiring devotion to God.

Sd. R. N. Ramanujam.
District Munsiff of Valangiman.
31—12—54.

நமது அஞ்சற் பெட்டி

கடிதங்கள்

செம்மங்குடி போஸ்டு,
30—12—54.

ஆசிரியர் அவர்கட்கு,

நமஸ்காரத்துடன் எழுதிக்கொண்டது. எங்கள் தமிழ்ச் சங்க நூல் நிலையத்திற்கு, ஜயவருஷ கார்த்திகைமீ ஞானசம்பந்தம் இதழ் கிடைக்கப்பெற்று இன்பக்கடலில் மூழ்கினேன். கருத்துக்கினிய காட்சி, மனதுக்கினிய மகிழ்ச்சி, சிந்தைக்கினிய சத்தி, செவிக்கினிய விருந்து, படிப்பதற்கினிய கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலவே யிருந்தன மற்றய பதினுன்கு அம்சங்கள்.

எங்கள் தமிழ்ச் சங்கத்தில் வெகுநாட்களாய்ப் பலரும் கேட்டுக்கொண்டிருந்த அம்சங்கள் யாவும் கிடைத்துவிட்டதாக அந்தந்த அம்ச விருப்பம் உள்ளவர்கள் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

***நம் ஞானசம்பந்தம் ஒரு சிறந்த ஞான பொக்கிஷமாய் விளங்குகிறது.

தங்கள் அன்புள்ள,
D. ஷண்முகம்
தமிழ்ச்சங்க காரியதரிசி.

பணகுடி,
19—12—54.

தருமை மடாலய சாஸ்திரங்கள் அவ்வளவும் மனோவேகத்தில் வெளிவரும் என்பதை அறிவிக்கவே திருவருள் அவர்களை ஞானசம்பந்தத்துக்கு உதவி ஆசிரியராக அருளியது. இனி சிவானந்தபோதம் முதலிய அரிய நூல்கள் தகுந்த குறிப்புரையுடனும், அநுட்டான அகவல், சிவபூஜை அகவல் நேர் வசனத்துடனும், புஷ்பவிதி பூமாலை அரிய விளக்கத்துடனும், ஸைவ உலகத்திற்குப் பயனளிக்க வெளிவரும் என்பதையும் நினைவுகூர்ந்து மிகுந்த உவகைபூத்தேன்.

தங்கள் அன்புள்ள,
பெருமாள் பிள்ளை.

REVIEWS:

Dawn of Devine Life: Swami Omkarananda published by the Yoga Vedanta Forest University, Anandakutir, Rishikesh, Price 1—4—0.

The book proper contains twenty four essays on spiritual subjects such as, Spiritual sadhana, the Dawn of divine life, the way to pure delight, prayer the key to Blessedness, Real wisdom, the way to life everlasting and so on. Three essays which describe the spiritual eminence of Swami Sivananda are prefixed to these. Swami Sivanandaji's sayings under the title of the voice of the Himalayas are collected at the end of the book in a separate section. The essays are very instructive and have a forcible appeal to the reader as they issue fourth from the heart, purified and spiritualized of the Author.

Pilgrimage to Badri and Kailas: by Sri Swami Sivananda Price Re. 1—0—0.

This is a pilgrims guide book written by Swamij after he had visited the places spoken of in it from his own personal knowledge and experience.

The Centres of pilgrimage described are Badri, Kedar Gangotre, Yamunotri, Mount Kailas, Manasarovar and Amarnath.

The details are so thoroughly given that an intending pilgrim can know from the book what equipment he should provide himself with, what route he should take, what facilities he can get on the route, in which places and at what cost, what is the pilgrims programme in the various places what traditious from the religious point of view are important to know of the various centers, what beauties he could enjoy in the various places and in what way as a pilgrim he should conduct himself in the matter of the "Dos" and "Dont"

There are many beautiful photographs of the places and the sceneries which enhance the value of the guide book.

Sd. Y. Mahalinga Sastrigal,
22—12—1954.

வருங்காலம்

ஜோதிஷார்ணவம்
பிர்மஸ்ரீ முத்துசோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(ஜய-ஸூ தைமீ 1-உ முதல் 30-உ முடிய)
(14—1—55 முதல் 12—2—55 முடிய)

1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதி நான்குபாதங்களும் பரணி 1-4 ம் கார்த்திகை முதல்பாதமும் மங்களகரமாக இருக்கும். நூதன உத்யோக பிராப்தியும், தொழில் ஏற்றமும் சுபசோபனுதிகளும், தன லாபமும், கிரய விக்ரயங்களும், நன்மதிப்பும் இல்லற சுகமும், ஏர்ப்படும். பரணி 2, 3, பாதங்கள் மிகுந்த அசுப பலனேயும் தேவகோபத்தால் எந்தவிதத்திலும் மாற்றமுடியாத கஷ்டங்களேயும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் அசுபமாகவும் வியாழன் சுபவாரமாகவும் இருக்கும்.

2. விருஷபம் கார்த்திகை $\frac{3}{4}$ ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4, பாதங்கள் கொஞ்சம் சுபமாகக்காட்டும் குடும்பதொல்லேகளும் வியாதி பீடையும் துர்தேவதா பாதையும் உண்டுபண்ணும். ரோகிணி நான்கு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். தோழன் மூலம் சில நன்மைகள் உண்டாகும். விவசாயத்தில் கஷ்ட நஷ்டங்களேயும், சத்ருபாதையும் மனக் கிலேசமும் அதிகமாகும். மிருகசீரிஷம் முதல்பாதம் அதிக துக்கத்தையும் இடமாறுதலேயும் தொழில் கவலேயையும் உண்டு பண்ணும். மிருகசீரிஷம் இரண்டாம் பாதம் லாபகரமாயும் வாகனுதிகள் லாபங்களோடும் கீர்த்தியோடும் சுபமான பலனேத் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம்: மிருகசீரிஷம் $\frac{1}{2}$ திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

மிருகசீரிஷம் 3, 4, பாதங்கள் மிசிரபலனேத்தரும் எந்தக் காரியமும் ஆரம்பத்தில் ரொம்ப தவக்கமாகிப் பிறகு நலன்

காட்டும். விவகாரம் ஏற்படும். திருவாதிரை நான்குபாதங்களும் அதிக உழைப்பின் பேரில் நலன் தரும். மேலோர், பெரியோர் ஆசியும் பொருளும் கிட்டும். புனர்பூசம் 1, 3, 4, பாதங்கள் மிசிர பலனைத்தந்து, மாதக்கடைசியில் லாபகரத்தையும், உத்தியோக லாபத்தையும், ஜயத்தையும் தரும். புனர்பூசம் இரண்டாம்பாத பலன் ஆரம்பத்தில் பிரமாதமான லாபமாகக்காட்டி பிற்பாதியில் எதிர்பாராத நஷ்டங்களையும் புத்திரனால் பெரிய தாங்கமுடியாத கிரிமினல் கேஸையும், மனக்கஷ்டத்தையும், தேவகோபத்தையும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் அசுபத்தையும் புதன்கிழமை சுபமாகவும் நடக்கும்.

4. கடகம்: புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்,

புனர்பூசம் நாலாம் பாதம். தூரப் பிரயாணத்தையும் தொழில்மேன்மையையும் உண்டுபண்ணும். பூசம் முதல் பாதம் மிகுந்த கஷ்டங்களைப் பலவிதத்திலும் உண்டாக்கி அசுபத்தையும் தரும். பூசம் 2, 3, 4, பாதங்கள் சுபமாக வெளித்தோற்றமும், அனுபவகாலத்தில் பெரிய பந்தனப் பிராப்தியும் மனம் சதா துக்கப்படுதலும் ஏற்படும். சனிக்கிழமை சுபவாரமாகும். ஆயில்யம் நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும்.

5. சிம்மம்: மகம், பூரம், உத்திரம் ¼.

மகநக்ஷத்திரம் நான்கு பாதங்களும் வெற்றியையும், கீர்த்தியையும் உண்டுபண்ணும். அதிக விரயமாத்திரம் ஏற்படும். பூரம் நான்குபாதங்களும் அலைச்சலையும் வீண் தொல்லைகளையும் மனஸ்தாபங்களையும் விவசாயத்தில் நஷ்டங்களையும் கொடுக்கும். உத்திரம் முதல் பாதம் தெய்வ பலத்தைத் தந்து சென்ற இடமெல்லாம் சிறப்பும் மேன்மையும் உண்டாகும். சாதுசங்கமமும் பெரியோர்களால் ஆசியும் கிட்டும். புதன், வியாழன், வெள்ளி சுபவாரமாகும்.

6. கன்னி: உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2, 3 பாதங்கள் ரோகத்தைத்தரும் அதிக விரயமுண்டாகும் உத்திரம் நாலாம் பாதம் சுபசோபனங்களையும் இல்லற சுகத்தையும் உத்தியோக லாபத்தையும் கீர்த்தியையும் தந்து சந்தோஷமளிக்கும். உத்திரம் நாலாம் பாதத்தில் உத்த

ராயண பிரவேசமாகையால் ஷ்டி நக்ஷத்திரக்காரர்கள். சங்கிராந்தி சூலதானம் செய்துகொள்வது நலம். ஹஸ்த நக்ஷத்திரம் 1, 4. பாதங்கள் பரம மங்களத்தையும் என்றும் கண்டிராதபடி விசேஷமான சுகபோக லாபங்களேயும் விஜயத்தையும் கீர்த்தியையும் புண்ணிய க்ஷேத்திராடனங்களேயும் தனதான்ய லாபத்தையும் தரும். மாதக்கடைசியில் ஆத்ம சமான மனுஷ்யாளுக்கும், சமான ஜனங்களுக்கும் அதிர்ஷ்டமுண்டுபண்ணும். அதனுல் சற்று மனக்கவலே காட்டும். சரீரத்தில் பித்த உஷ்ண பீடைகள் உண்டாகி விலகும். சித்திரை 1, 2 பாதங்கள் தனதான்ய லாபத்தையும் சத்துருநாசத்தையும் நஷ்டதன பிராப்தியையும் தரும். புதன் சனி சுபவாரமாகும்.

7. துலாம்: சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சித்திரை மூன்றுபாதமும் நாலாம் பாதமும் மிசிரமாய் நடக்கும். கடன் நீங்கும். தொழில் கிடைக்கும், இடம்மாறும், இல்லறம் ஓங்கும். சுவாதி நான்கு பாதங்களும் தெய்வபலத்தால் ஓடிக்கொண்டிருக்கும். ஆரம்பத்தில் சிரமமாய்த் தோன்றி முடிவில் பூரண ஜயமும் லாபமும் கிடைக்கும். சத்துருக்கள் பராஜயத்தை அடைவார்கள். விசாகம் 1, 2, 3 பாதங்களும் நன்மையாயிராது. வியாதி பயம் தனநஷ்டம் ராஜாங்கத்தால் பயம் வீண் செலவுகள் அபஜயம் உண்டாகுதல் முதலிய அசுப பலனேத் தரும். தசாபுக்தி பலமுள்ளவர்கள் ஜெயிப்பார்கள், சனி செவ்வாய் லாபம் தரும்.

8. விருச்சிகம்: விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் நான்காம்பாதம் சுபமாயிராது. மிகுந்த சிரமத்தை பலவிதத்திலும் உண்டுபண்ணும். அனுஷம் நான்கு பாதங்களும் மாதம் முற்பாதியில் சுபமாகவும் லாபகரமாகவும் இருந்து பிற்பாதியில் கஷ்ட நஷ்டங்களே உண்டுபண்ணும். பந்தயங்களில் மனம் ஈடுபட்டுச் சிரமத்தைத் தரும். கேட்டை நான்கு பாதங்களும் விஜயம் கீர்த்தி லாபம் நன்மதிப்பு இல்லறசுகம் ஆரோக்கியம் தொழில் கிட்டுதல் மேலோர் அன்பு முதலிய சுபங்களேத்தரும். புதனும் வெள்ளியும் சுபமாகும்.

9. தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் நான்கு பாதங்களும் பூராடம் நான்கு பாதங்களும் சந்தோஷத்தைத்தரும். தனதான்யலாபம் வெகுகாலம் நடவாத காரியம் சாதித்தல். பெரியோர்கள் அன்பு. உபகார சிந்தனே. தெய்வபக்தி விசேஷித்தல் முதலிய சுபங்கள் நடைபெறும்

உத்திராடம் கால்மாத ஆரம்பத்தில் குழப்பமாய் இருந்து பிற்பாதியில் ஏராள லாபமும் உத்தியோகமேன்மையும் இல்லற சுகமும் சந்தோஷமும் ஏற்படும். கூடியவரை தனுர்ராசிக் காரர்கள் சுகமடைவார்கள். புதன் வியாழன் சுபமாகும்.

10. மகரம்: உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் விசேஷ சந்தோஷத்தைப் பல விதத்திலும் தந்து சுகமடையச் செய்யும். மேலோர் அன்பு. எங்கும் கீர்த்தி. எடுத்தக்காரியங்கள் வெற்றி அடைதல். சத்துருக்கள் பராஜயமடைதல். இல்லற சுகம். தெய்வபலம் பிரகாசித்தல். நூதன தொழில்முறை ஆரம்பித்தல் வியாபாரப் பெருக்கம் விவசாயத்தில் லாபகரமடைதல் முதலிய சுபங்கள் ஏற்படும். சனி புதன் சுபவாரமாகும்.

11, கும்பம்: அவிட்டம் $\frac{1}{2}$ சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் சுபமாக நடக்கும். தொழில் ஓங்கும். கடன்நீங்கும். இல்லறசுகம் கிட்டும், சுபசோபனுதிகள் நடைபெறும். தூரதேசத்திலிருந்து பந்து மித்திராளுடைய வரத்தும் நஷ்டமான பொருள் வரத்தும் கிட்டும். பிரயாணம் ஏற்படும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

12. மீனம்: பூரட்டாதி $\frac{1}{4}$. உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி நாலாம் பாதம் மிசிரமாய் நடக்கும் வரவுக்கு மிஞ்சின செலவுகளும் மனக்கவலையும் காட்டும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் மேலோர் பெரியோர் அன்பும் தனவரத்தும் கீர்த்தியும் ஆரோக்கியமும் தரும். ரேவதி முதல்பாதம் மிகுந்த துக்கபலனைப் பலவிதத்திலும் தரும், ரேவதி 2, 3 பாதங்கள் ஜயத்தையும் சத்துரு நாசத்தையும் தொழில் மேன்மையையும் நஷ்டமான பொருள் வரத்தையும் தந்து உலகில் நன்மதிப்பைத் தரும். ரேவதி நாலாம்பாதம் மிசிரமாய் நடக்கும். அதிக சிரம மிராது. தொழில் மந்தமாய் ஓடும். புதன் வெள்ளி சுபவார மாகும்.

குறிப்பு: ஜய வருஷம் தைமாதப் பிறப்பு மகா சங்கராந்தி புண்ணியகாலம். உலகத்துக்கு சுபிக்ஷத்தைத்தந்து ஆஸ்திகத்தை விருத்திசெய்து நாஸ்திகத்தைக் களைந்து தெய்வ பலத்தைப் பூரணமாய் அன்பர்களிடம்தந்து தனதான்ய விருத்தியோடு, பிரஜைகள் சுபிக்ஷமாயும் சந்தோஷத்துடனும் ஆரோக்கியத் துடனும் நிர்ப்பயமாய் உலகில் வாசம்செய்ய, சர்வேஸ்வரன் அருள்புரிவாராக. மங்களமுண்டாகுக.

இவ்வாறு சர்வசித்தாந்தவிவேகத்திலும்,

अथ महाव्रतः शैवः कथ्यते लेशतः स्फुटम् ।
कापालागमसंप्रोक्तमङ्गीकृत्य यथोचितम् ॥
कुण्डिका कुण्डलं चैव उरगश्च शिखामणिः ।
केशयज्ञोपवीतं च पञ्च मुद्रा महाव्रते ॥
इति लक्षण संयुक्तैः(उच्यते) स महाव्रतः ।
प्रत्यक्षादीनि मानानि प्रागुक्तान्येव तानि वै ॥
तथा मानेषु सर्वेषु श्रेष्ठो महाव्रतः स्मृतः ।
पतिः पशुश्च पाशश्च तदर्थस्त्रिविधो मतः ॥
पतिः सदाशिवो ज्ञेयः सर्ववित्सर्वकृद्विभुः ।
अनादिर्निर्मलो रुद्रः सर्वकारणकारणः ॥
आत्मानो बहवो ज्ञेया ज्ञानमात्रस्वरूपिणः ।
पत्युरेव क्रियाशक्तिर्नान्येषामात्मनामिह ॥
पाशस्तु कर्म माया च न त्वाणवमलः स्मृतः ।
शक्तिपाते तु तत्तन्त्रशिवदीक्षापुरःसरम् ॥
ज्ञानचर्याद्यनुष्ठानान्मुक्तो भवति मानवः ।
लिङ्गधारी सदा स्वस्य मस्तके कन्धरेऽथवा ॥
नाभेरूर्ध्वं यथाशास्त्रं स्थानेषु हृदयादिषु ।
लिङ्गस्य धारणान्मुक्तिः किं पुनः पूजया नृणाम् ॥
यथा शिवे तथा भक्तिः गुरौ वै जङ्गमेषु च ।
तथापि जङ्गमे भक्तिर्विशेष इति कथ्यते ॥

महाव्रताख्यशास्त्रोक्तनित्यकर्मादितत्पराः ।
एकेन जन्मना मुक्तिं प्रयान्तीह महाव्रताः ॥
इति महाव्रतः सोऽयं संग्रहेण प्रदर्शितः । इति ॥

ஈண்டு முற்கூறியவாறே லாகுள மென்னுது மகாவிரத தந்திர மெனவே கூறினமையின் அவ்வாறு தந்திர வேறுபாடு வந்த வழிக் கண்டுகொள்க. மேலும் வாதுளசுத்தாக்கியத்தில்,

शैवं चतुर्विधं ज्ञेयं समासाच्छृणु षण्मुख ।
सामान्यमिश्रकं चैव शुद्धं वीरं यथाक्रमम् ॥

என வருமாற்றுற் காமிகாதி சுத்தசைவங் கூறிய வீரசைவத் திற்கே லிங்க தாரண விதி கண்டோமன்றே. ஈண்டு அகச் சமயத்தும் தந்திர பேதமான மகாவிரதத்திலும் லிங்க தாரண முண்டோவெனின் சங்கிராந்த வாதாதி சித்தாந்த சைவத்திற் கண்டதுபோல ஈண்டு அகச்சமயத்திற் றந்திர பேதமான பாசுபதாதிகட்கு முண்டாவதுபோலு முண் டென்க. வீர சைவர்க்கு முக்கியம் சிபர்வதம் போல மகா விரதிகட்கு முக்கியர் திருவொற்றியூரென்பாருமுளர். இவ் வாறு வரும் மதபேதம் விரிவிற் கண்டுகொள்க. இதனுனே "விளம்புமிது பிறிதொன்ருல்" என்றும் பாடமாம். 6

7. * * *

இனி

தாந்திரிக பாசுபத மதமும் மறுப்பும்.

தாந்திரிக பாசுபத மூவகைத் தாமவற்றுள் என்பது தாந்திரிக பாசுபத பேதமான சந்திர சூரிய சமவாதமிரண்டும் கூறி மறுத்து முதன்மையான அப் பாசுபத மதம் கூறற்குத் தோற்றுவாய் செய்தது. இவற்றுட் சந்திரவாதி மதமு மறுப்பும் வருமாறு தத்துவப்பிரகாசத்தில்,

சந்திரனே கடவுளா மாருயிர்கள் யார்க்குந்
தண்மையுமாய்த் தேவர் தமக்குண வுமாகித்
தந்தவொரு கலைதொழுவார்க்கின்பங்க ணல்கிச்
சங்கரர்க்குங் கண்ணுகு மெனத்தனித்து வணங்க
நந்துமுத்தியா மென்னுஞ் சந்திரவாதிக்கு
நாடுகலை தேய்ந்து வளர்தந்தத் திரிபுத்திரனுய்
முந்தவரன் காலினுற் றேய்ப்புண்டமதியோ
முத்திநெறி கொடுப்பானிம் முறைமை விடாய்நீயே.

என வரும். இனிச் சூரியவாதி மதமும் மறுப்பும் அதில்,

மும்மண்டலம் விளக்கி யறுசமயம் வணங்க
முக்கண்ணர்க்குங் கண்ணுகி முழுதுயிருமொடுக்கி
யம்முறையே யுணர்த்தி யொளிர் சோதியே வடிவாம்
ஆகி தன்கடவுளெனுஞ் சூரியவாதிக்குச்
செம்மையிற் காசிபன் சேயாய்த் தக்கன் வேள்வியினிற்
சிவனின்றி யவியுண்ணப் போய்க் கண்ணும் பல்லு
மிம்மையிலே யிழந்துலகை வலம் வந்து திரியும்
இவன்கடவுளன்று சிவனென்றவனை வணங்கே. 202

என வரும். இனிப் பாசுபத மதமு மறுப்பு மதில்,

நேசமுடனறிவுயிரே யெங்கு நிறைவாகு
நெறிஞான மிதுவே யென்றுணர்ந்து சிவனெறிகள்
பாசமெனக் கைவிட்டு முத்தண்டு பற்றிப்
பயில்சிகை நூல்பரித்துச் சந்நியாசத்தேபயிலு
மாசுடைய பாசுபதர்க்குண்டான முத்தி
யப்புறமா மாயாவாதத்தனை யவருமா
லீசனுயிர் பாசமெனு மிவையறிந்து பாச
மேகவுயிரருள்சேர் வதிதுமுத்திநெறியே. 201

என வரும். மற்றது மேல்விளங்கும். 7

8. * * *

இருபொருளாம் என்பது பிரிதோராற்றாற் பாசுபத மதம் கூறி மறுக்கின்றது. அது வருமாறு:— சித்தாந்த விவேகத்தில்,

अथ पाशुपतं वक्ष्ये गुणसंक्रान्तवादिनाम् ।
भस्म मेध्यं चोत्तरीयं विष्टरं पुस्तकं तथा ॥
मेखलोपरि कौपीनमेवं पाशुपतं स्मृतम् ।
इति लक्षणसंयुक्तैः सेव्यते यो नरोत्तमैः ॥
प्रत्यक्षादीनि मानानि प्रागुक्तानीह तानि वै ।
तत्र पाशुपतः श्रेष्ठः आगमस्तु सदोच्यते ॥
प्राजापत्यं पाशुपतं प्रबुद्धं पञ्चसंहिता ।
वासिष्ठं काश्यपं कल्पं वाराहं भार्गवोत्तरम् ॥
प्रफुल्लं वासवं चैव वायुप्रोक्तं तथैव च ।
वारुणं बार्हस्पत्यं च परमेशं च षोडश ॥
मतं पाशुपतं प्रोक्तमिति दीप्तागमे श्रुतम् ।
पतिः पशुश्च पाशश्च तदर्थस्त्रिविधो मतः ॥
... ... सर्वे ते व्यापकाः स्मृताः ।
मायातः कर्मतश्चैव बद्धाः सर्वेश्वराज्ञया ॥
कार्यकारणतत्त्वोत्थबुद्धिकर्मानुसारतः ।
कुतश्चित्कारणात्तत्र वैराग्यं जायते यदा ॥
तदा पाशुपतप्रोक्तशिवदीक्षापुरःसरम् ।
ज्ञानचर्याद्यनुष्ठानान्मुक्तः शिवसमो भवेत् ॥
किञ्चिज्ज्ञत्वादिधर्मस्य निवृत्त्या मुक्तिकालतः ।
सर्वज्ञत्वादिधर्माणां (सम्भवात्) तुल्यता स्फुटा ॥

உ

குருபாதம்

தருமபுர ஆதீனத்தில் கொலுவீற்றிருக்கும்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் அவர்களை

அருச்சித்த

மனமலர்கள்

பிறந்தேஇப் பெரும்புவியில் பிழைகள்பல செய்திடினும்
அறந்தானும் செய்யாமல் அல்லல்மிக அடைந்திடினும்
துறந்தாரில் பெரியோய்நின் துணையடிகள் என்றேனும்
மறந்தறியேன் ஆகையினால் மன அமைதி பெற்றேனே. 1

சாத்திரங்கள் கற்றறியேன் தோத்திரங்கள் செய்ததில்லை
காத்திரத்தின் கலக்கத்தால் கண்கலக்கம் கடிதடைந்தேன்
நேத்திரங்கள் பல உடையோய்! நின்மலர்த்தாள் படிந்ததனால்
பாத்திரமாய் உன்அருளின் பங்குகொள மிகவிழைந்தேன். 2

கல்லாத சாத்திரங்கள் கற்பதென்றென் றென்றிரங்கும்
சொல்லாத என் துக்கம் சொல்லாமல் போக்கியநின்
நில்லாத திருவடியை நினைந்திங்கே இருக்கின்றேன்
பொல்லாத மணியேஉன் புகழ்பாட வைத்தாயே. 3

அத்தத்தில் அவதரித்த அருட்குருவே அடியேனை
பித்தனென்று இகழாது பெருங்கருணைத் திறங்கொண்டு
சித்தமலம் தெளிவித்த திருவடிஎன் தலைவைத்தால்
நித்தம்நினைக் கைதொழுது நீளநினைந் திருப்பேனே. 4

அடியேன்,

திருவையாறு,
14—12—'54.

R. கோவிந்தசாமி.

குறிப்பு:- நில்லாத - நிலையிலா நடனம் செய்யும். பொல்லாத மணி - "பொல்லாத மணியைப் புணர்ந்தேனே" என்னும் மணிவாசகத்தைத் தழுவியது.

படிக்க வேண்டாமா?

நல்ல செய்திகள்! சமய உணர்ச்சி ஊட்டும் உண்மைகள்! வாழ்க்கையை ஒட்டிய நிகழ்ச்சிகள்! அறிவியலுக்குப் பொருத்தமான பொருள்கள்! அறிஞர்களுக்கு விருந்து! மகளிர்களுக்கு மகிழ்ச்சி! சிறுவர்களுக்குச் சிந்தனைக் கதைகள், கட்டுரைகள் கவிதைகள், எல்லாம் சேர்ந்து பதினான்கு பகுதிகளோடு வெளிவருகிறது. "ஞானசம்பந்தம்"

படியுங்கள்! படித்துப் பயன்பெறுங்கள்!!

திங்கள்தோறும் ஓரிதழ் வெளிவரும்

ஆண்டுக் கட்டணம் ரூ. 1—8—0

இதழ் அச்சிடும் செலவில் மிகச்சிறு பகுதியே இந்தக் கட்டணம். விரைவில் சந்தாதாரராகச் சேருங்கள். கட்டுரைகளை ஆசிரியர்க்கே அனுப்புங்கள்.

முகவரி :—

செயலாளர்

ஞானசம்பந்தம் காரியாலயம்

தருமபுரம், மாயூரம் போஸ்டு.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram). 10—1—1955.